உ

வெற்றிவேலுற்றதுணை.

திருவண்ணாமலையில்

சுப்ரமண்ய சுவாமிகள் வரப்பிரசாதியாய்

எழுந்தருளியிருந்த

# அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரநுபூதி.

இது,

முதல் ௫க-பாடல்கள் வ...யில்

திருமயிலை - வித்...ன்

ஸ்ரீமத் சண்முகம் பிள்ளையவர்களாலும்,

௫உ-வது பாடல் முதல் இறுதி வரையில்

காஞ்சீபுரநிவாஸி

ஸ்ரீமத் இ...நந்த யோகிகளவர்களாலும்

இயற்றப்ப...

உரையுடன்,

சென்னை:

...ன் அச்சியந்திரசாலையில்

...கப்பட்டது.

...9.

...௯-6. [REGISTERED.

உ

வெற்றிவேலுற்றதுணை.

திருவண்ணாமலையில்

சுப்ரமண்ய சுவாமிகள் வரப்பிரசாதியாய்

எழுந்தருளியிருந்த

# அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரநுபூதி.

இது,

முதல் ௫௧-பாடல்கள் வ[illegible]

திருமயிலை - வித்[illegible]

ஸ்ரீமத் சண்முகம் பிள்ளையவர்களாலும்,

௫௨-வது பாடல் முதல் இறுதி வரையில்

காஞ்சீபுரநிவாஸி

ஸ்ரீமத் இராமாநந்த யோகிகளவர்களாலும்

இயற்றப்பட்ட

உரையுடன்,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

[COPYRIGHT] விலை அணா-6. [RIGISTERED.

223164

O2h:4i7
N09

# அருணகிரிநாதர்.

OFFICE OF THE REG... REGISTERED 4- SEP ... MADRAS

தமிழ் நாட்டில் வழங்கிவரும் பிரபல மதங்களாகிய சைவ வைணவங்களுள், சைவம் காணபத்தியம் கௌமாரமுதலிய சில உட்பிரிவுகளை யுடையதாயிருக்கும். அவ் வுட்பிரிவுகள் கணபதியை வழிபடுவோர் குமாரனை வழிபடுவோர் முதலிய பொருள்பட்டு நிற்கும். இவ் வுட்பிரிவுகளைச் சைவத்தின் பாற்படுவனவாகக் கூறுதல் பெரும்பான்மை பற்றியேயன்றி வைணவருள் கௌமாரரிலரென் றுரைத்தல்கூடாது. எச் சமயத்திற் பிறந்தவரேனும் குமாரனை யுபாசிப்போரெல்லாம் கௌமாரரெனப்படுவார். குமாரக் கடவுள் கலியுக வரதரென்றும், இதர தேவர்களைவிட்டு அவரை யுபாசிப்போர் இக் காலத்திற் பிரசாதம் விரைவிற் பெறுவரென்றும் தமிழ் மக்களுள் நம்பிக்கை பரவியிருப்பதாகத் தெரிகின்றது. பூதத்த[illegible]ற குகையி லடைக்கப்பட்ட புலவர் நக்கீரரும் கும[illegible]ரயி[illegible]ரே வேண்டித் திருமுருகாற்றுப் படைகூ[illegible]ான் [illegible]ந்து நிறைவேறப் பெற்றனர்!

கௌமார சமயிகள் தங்கள் சமயாசாரிய ரென வைத்துக் கொண்டாடும் தமிழ்ப் பெரும் புலவர்களுள் அருணகிரிநாதர் ஒருவர். அகத்தியர், நக்கீரர், குமர குருபரர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் முதலியோரையெல்லாம் கௌமார சமயா சாரியராகவே கொள்ளுகின்றனர். சிவபெருமான் குமாரனிடத் துபதேசம் பெற்றாரென்று புராணங் கூறுவதைக் கொண்டு சிவபெருமான் முதற் கௌமார சமயாசாரியரென் றுரைப்பாருமுண்டு. மற்றைக் கௌமாரர்க்கும் அருணகிரிநாதர்க்கும் பேதம் ஒன்றுண்டு; அவர்களெல்லாம் முருகனருள் பெற்றுப் புலவராய்த் திகழ்ந்தனரேனும் மற்றைத் தேவரையும் பாடிப் போயினர், அருணகிரிநாதர் சொல்லிய சிறு பிரபந்தங்க ளனைத்தும் பதினாயிரம் திருப்புகழும் குமாரக் கடவுள் துதிகளாயே யமைந்துள்ளன.

அருணகிரிநாதர் திருவண்ணாமலையிற் பிறந்து வளர்ந்தவரென்றும் அவ்வூர்க் குமாரனிடத்தேயே

அநுக்கிரகம் பெற்று திருப்புகழ்க் கவிசொல்லிப் பல திருவிளையாடல்கள் செய்தவரென்றும் ஐதிகம்கூறும். அருணகிரியென்னும் அந்த ஸ்தலப்பெயரே அவர்க்கு அமைந்ததாகலின் ஐதிகம் உண்மையேயாம். ஆயினும், அவர் பட்டினத்துப் பிள்ளையார்க்கு அவ்வூர்க்கணிகை யொருத்தி வயிற்றிற் பிறந்தா ரென்றல் தவறேயாகும். பட்டினத்தார் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிந்திய தென்றல் கூடாது. அருணகிரிநாதர் பிரபுட தேவனென்னும் ஓரரசனைப் பற்றித் தம் திருப்புகழ் களிற் கூறியுள்ளார். அவ் வரசன் கி. பி. 1424 முதல் கி. பி. 1447 வரை விஜயநகரத் திருந் தரசாண்ட பிரௌட தேவராயனென்னும் அரசனென்றுகொண்டு அருணகிரியாரைப் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் விளங்கியவரென்று தமிழ்ப் புலவர்களில் ஆராய்ச்சி வல்லார் சிலர் கொள்ளுதலின், பட்டினத்தார்க்கும் இவர்க்கும் அவ்வித சம்பந்தம் இல்லையெனலாம். ஆயினும் பிரௌட தேவன் என அருணகிரியார் குறித்தது இம் மன்னனைத் தா னென்று உறுதியாக உரைத்த லெப்படிக் கூடும்? திருவண்ணாமலைப் பக்கத்தில் அரசு செலுத்திய சிற்றரசனொருவன் பிரபுட தேவனென்னும் பெயரால் இருந்திருத்தலுங் கூடுமே. மற்று, மேற்குறித்த விஜயநகரத்தரசன் தமிழ் நாடெங்கும் தன்புகழ் நிறுத்தினவனென்றற்கு அவன் சரித்திரத்தில் அநேக ஆதாரங்களுள வென்பதும் இவ்விடத்துக் கவனிக்கத்தக்கது.

அருணகிரியார், தம திளமைப் பருவத்தில் வெறுப்புத் தோன்றும் வரையில் சிற்றின்பத்தி லுழன்று பின் முருகன் திருவருள் பெற்றுக் கவிபாட வல்லராயினரென அவர்பாடிய திருப்புகழ்களே தெளிவாயெடுத்துரைக்கும். முருகன் திருவருள் பெற்றபின் அவர் ஸ்தலங்கடோறுஞ் சென்று தம்பிரானுரைத் தரிசித்துக் கவிகள் சொல்லி வந்தனர்.

அக்காலத்து, தமிழிற் பாரதத்தை மொழிபெயர்த்தாருள் ஒருவராகிய வில்லிபுத்தூ ராழ்வார் என்னும்

வைணவப் புலவரொருவர் தமிழ் வித்வான்கள் இருந்த இடங்கட்குச் சென்று அவர்களை வாதுக்கழைத்துத் தம்மோடு வாதுசெய்து தோற்றவர்களுடைய காதுகளைத் தமது கையிலிருந்த துறட்டுக் கோலினால் அறுத்துத் தம் புகழ் நாட்டித் திக்கு விஜயஞ்செய்து கொண்டிருந்தார். இவர் அருணைக்கு வந்தபொழுது அருணகிரிநாதர் சொல்லிய வண்ணப்பாக்களைக்கேட்டுப் பொறாமை மேலிட்டு அவை குற்றமுடையவெனத் தம் சீடரிடத்துப் பிரசங்கித்தார். இது கௌமார முனிவர் காதிற் பட்டும் அவர் அலக்ஷியமாயிருந்தார். ஆயினும் நடுவிலுள்ளார் வேண்டுகோளால் வில்லிபுத்தூரரும் அவரும் சந்திக்க நேர்ந்தது. இருவரும் தம்மிற் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அருணகிரியார் கந்தரந்தாதி என்னும் பிரபந்த மொன்று சொல்லிவரவே வில்லிபுத்தூரார் பொருள் சொல்லி வந்தார். ஐம்பத்துமூன்று பாட்டுகட்கு அவ்வாறு பொருள் சொல்லி அதற்குமேல் அருணகிரியார் சொல்லிய பாட்டிற்குப் பொருள்சொல்ல அறியாது விழித்தார். அருணகிரியார் அவருடைய துறட்டை யெடுத்து யாவர்க்கும் பயனிலதாகும்படி ஒடித்தெறிந்து அவர்க்கும் நன்மதி கூறிப் போகவிடுத்தார் என ஒரு கதை வழங்கிவருகின்றது.

அவரைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கிவரும் மற்றொரு கதை: அருணகிரியிலேயே சம்பந்தாண்டான் என்பானொருவன் அக் காலத்திருந்தான். அவன் சமயத்தாற் சமணன். ஆயினும் தேவி வரப்பிரசாதம் பெற்றவன். அவனுக்கும் அருணகிரியார்க்கும் வாதம் உண்டாயிற்று. அவன் 'யான் தேவியை நேரிற் காணக் காட்டுவேன், நீர் குமாரக் கடவுளைக் காட்டுக' வென்றான். அரசன் இதற் குடன்பட்டிருக்கச் சம்பந்தாண்டான் திரையிட்டு வெகு நேரம் பூஜை புரிந்தும் குமாரக் கடவுள் தன் மடிமீதிருந்து தடை செய்தலால் தேவி வரக்கூடாதவளாயினள். அருணகிரியாரோ சம்பந்தாண்டான் அரசன் மற்றுமுள்ளார் யாவரும் காணக் குமாரனை மயில்வாகனத்தின்மே லேறிவரக் காட்டினார்.

இவ்வாறு தோல்வியுற்ற சம்பந்தாண்டான் அரசனை அடுத்திருந்து, சின்னாட் கழிதலும், 'அருணகிரிநாதரைப் பாரிஜாதமலர் கொண்டுவரச்சொல்' என அரசனுக்குக் கற்பித்தான். அரசனும் அத் தெய்வ மலர்மேல் ஆசை வைத்து அவரைவேண்ட, அவர் தன் தேகத்தைக் கோபுரத்தில் வைத்துக் கிளியுருக்கொண்டு மேனோக்கிச் சென்றனர். சம்பந்தாண்டான் இஃதறிந்து அத் தேகத்தை யெடுத்தெரிக்குமாறு செய்தான். அவர் தெய்வலோகத்தை யடைந்து நன்குபசரிக்கப்பட்டு பாரிஜாதமலரைப் பெற்றுக்கொண்டு திரும்பிக் கோபுரத்தண்டை வந்து நோக்கலும் தம் தேகத்தைக் காணாராய்த் திகைத்து முருகப் பிரானருளால் மனந்தேறினர். பின் கிளியுருவோடேயே அரசனவைக்குச் சென்று பாரிஜாதமலரைக் கொடுத்துவிட்டு, தன் காலமெல்லாம் கோயிற்கருகில் பாடல்களைப்பாடி முருகனைத் துதித்துக் கொண்டிருந்து பரகதி யடைந்தார். கந்தரலங்காரம் கந்தரனுபூதி அருணகிரியார் கிளியுருவோடிருந்தபொழுது பாடிய நூல்களென்பர்.

பிற்காலத்து ஞானியருள் தாயுமானார் அருணகிரியாரை மிகவும் கொண்டாடி யிருக்கின்றனர்.

ஐயா வருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்.

யான்றா னெனலறலே யின்பநிட்டை யென்றருணைக்
கோன்றா னுரைத்தமொழி கொள்ளாயோ.

கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
வெந்தை யருணாடி யிருக்குநா ளெந்நாளோ.

அருணகிரிநாதர் செய்த நூல்கள் திருப்புகழ் பதினாறாயிரம், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி. வேல்விருத்தம், மயில்விருத்த மென்பனவும் அவர் செய்ததாகக் கூறுவர். அவர்வாக்குச் சிறந்த வாக்கென்பது தமிழுலக முழுதும் ஒப்பியது.

வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில், தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு, நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார், சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.

S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 - SEP
MADRAS

உ

வெற்றிவேலுற்றதுணை.

# கந்தரநுபூதியைங்காண்டிகையுரை.

## காப்பு.

நெஞ்சக்கனகல்லுநெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள்சண்முகனுக்கியல்சேர்
செஞ்சொற்புனைமாலைசிறந்திடவே
பஞ்சக்கரவானைபதம்பணிவாம்.

## பதவுரை.

நெஞ்சம்கனகல்லு-நெஞ்சமாகிய கனமுள்ளகல்லானது, நெகிழ்ந்துருக - நீராகக்கரைந்துருகும்படி, தஞ்சத்தருள்-தன்னையடைகின்ற வன்பரது எளிமைக்கருளுகின்ற, சண்முகனுக்கு - ஆறுதிருமுகங்களையுடைய பிள்ளையாருக்கு, இயல்சேர் செம்சொல்புனை-இலக்கணப்பாகுபாடமைந்த செவ்வியசொற்களைக்கொண் டலங்கரிக்கின்ற, மாலை சிறந்திட - பாமாலை சிறக்கும்படி, பஞ்சக்கரஆனைபதம்பணிவாம் - ஐந்துகரங்களையுடையயானைமுகத்தினையுடைய கடவுளினது திருவடிகளை வணங்குவாம் - எ-று.

என்றி லுரைப்பினு மந்நூற்குப்பாயிர முரைத்தல் மரபாகலினிவ்வாசிரியர்தாம் நூற்கேற்புடைக் கடவுளைப்பராயினரென்பது. இதனைப் பரிமேலழகர் திருக்குறளின் முகத்துரைத்தாங்குணர்க. இப்பாயிரம் பொதுப்பாயிரமென்க. மாலையென்றது, இங்குக் கந்தரநுபூதியெனின் தற்சிறப்புப்பாயிரமென்னலுமாம். “தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளு மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்” என்பவாகலின். செம்மையென்றது - உலகமலையாமை யுள்ளிட்ட பத்தழகையும். செய்யுட்டொகுதியை மாலையென்றார் ஒழுங்குவாய்ந்த மாலைபோற

லின். இது அக்கடப்ப மாலையினும் வாடாமைநோக்கிச் சொற்புனைமாலை யென்றாரெனினு மமையும். யானைமுகத்தினரை யானையென்றது உடம்பிற்றலை சிறந்ததாகலின். பணிவா மென்றார் தம்போலியோரை தம்மோடு படுத்தி. கல்லு என்புழி - உகரஞ் சாரியையாகக் கோடலேயன்றி கல்லுமெனக் கொண் டுயர்வுசிறப்பும்மை யாக்கினு மமையும். ஏனைய கற்களைப்போலாது மிகத் திண்ணிதாகலின் நெஞ்சைக் கனகல்லென்றார். சண்முகனென்ற தீண்டைக் குண்டலியோ டிச்சை கிரியை ஞானமாதிபரையாய வைஞ்சத்திகளையுந் திருமுகங்களாக வுடைமையை; இங்ஙனங்கூறாது, "ஐஸ்வரியம் - வீரியம் - புகழ் - திரு - ஞானம் - வைராக்கியம் என்னு மறுவகைக்குணங்களுங் குமாரக்கடவுளுக் குண்மையி னவரை மகான்கள் சாட்குண்ணியரூபமான சண்முகனெனக்கூறுப" என்றார் அஃதேல் அண்டகோடிகளுடன் றந்தவுடல் யாவையு மரியமறை முதலகலையு" மென்பதிற் "குண்டலியொடைஞ் சத்தி மாமுகமெனப்படைத்த வள்ளிநாயகன்" என்றபோரூர் முருகன் பிள்ளைக்கவிக்கஃது மாறுகலின் அவர்க்கது கருத்தன்றென்க. இனி யாங் கூறியதே பொரு ளென்பதனைக் கந்தபுராணத்தும் "தாமரைக்கணான் முதலிய பண்ணவர்தமக்கும், எமுறப்படுமறைக்கெலா மாதிபெற் றியலும், ஓமெனம்படுங்குடிலையே யொப்பிலாமுருகன், மாமுகத்து ளொன்றுமவன் றன்மையார் வகுப்பார்" என்பதனானுமுணர்க. இனி மூலாதாரம் - சுவாதிட்டானம் - மணிபூரகம் - அநாகதம் - விசுத்தி - ஆக்கினையாய மூவிருதலத்துறையு மூவிரு தேவரையு முகங்களாக வுடையானெனினுமாம். இதனைத் திருச்செந்தூரகவலுட்காண்க. கந்தரநுபூதியென்றது கந்தரது அநுபூதிபெற்றுப்பாடிய நூலெனவிரிவதாகலின் ஆறுவதன்றொகை நிலைக்களத்துப் பிறந்த வன்மொழித்தொகையா யிந்நூற்குக்காரணக்குறி. அநுபூதிக்குஅநுபவஞானமெனினும்பொருந்தும். இதனைப் "பேசாவநுபூதி பிறந்ததுவே" என்றதனானுமுணர்க. கந்தரென்றது பிள்ளையாராறு திருவடிவங்களாகச் சரவணப்பொய்கையில் நிற்பப் பெருமான்கட்டளையாற் பிராட்டியாரெடுப்பான் ஒருருவாயதன்மையைக் கண்டிட்ட பிள்ளைத் திருநாமமென்க.

இந்நூன் முழுவதூஉம் பாநான்கனுள் கலிப்பாவினினமாயளவடி நான்கானமைந்து கலிவிருத்தத்தின் பாற்பட்டுச் சந்தத்தமைந்த செய்யுளாகலின் சந்தக்கலிவிருத்தமென்க. "அளவடி நான்கின கலிவிருத்தம்மே" என்றாராகலின்.

---

## நூல்.

ஆடும்பரிவேலணிசேவலெனப்
பாடும்பணியேபணியாவருள்வாய்
தேடுங்கயமாமுகனைச்செருவிற்
சாடுந்தனியானைசகோதரனே.

(ப - ரை) ஆடும்பரியென-ஆடுகின்ற வாகனமாய மயிலையும், வேலென-வேற்படையையும், அணிசேவலென - அழகிய சேவற்கொடியையும், பாடும்பணியே - பாடுகின்றபணியையே, பணியாக அருள்வாய் - தொழிலாக வருள்செய்யீர், தேடும்கயமாமுகனை - பகைவருளரோவெனத் தேடுகின்ற யானைமுகாசுரனை, செருவில்சாடும் - போரிற்பொருதுவென்ற, தனியானை சகோதரனே - தனக்கொப்புயர் விகந்த யானைமுகப்பிள்ளையாருக்கிளைய பிள்ளையாரே எ-று.

ஆடும்பரி என்புழி உம்விகுதி இயல்புப்பொருட்டு. சாடுந் தனியானை யென்புழிசாடும்என்றது காலவழுவமைதி. எஞ்ஞான்று மழிதன்மாலையவாய பிறப்பிடையறா நிற்பத்தவம்புரிந்த சூரனை யிலேசிலுரம்பிளந்த வைவேலின் முன்னரும் பின்னரும் சுத்தமாயையாகிய வச்சூரனது விகாரவடிவாய மயிலையுஞ் சேவலையு மடைகொடுத்துக் கூறினமையால் ஞானசத்தி வடிவமாய வேலினது சிறப்பையு மிவன் உரத்தையு முணர்த்திய வாறு. அற்றாகலின் அன்றே வேற்கடை கொடாதிருந்தமை என்க. இக்கருத்தேபற்றியன்றோ திருக்கோவையாருள் "திருவளர் தாமரை" யென்னுஞ் செய்யுளில் முலைக்குவமையாய கோங்கை யடைகொடா தொழிந்ததூஉ மென்க. இதனைப் பேராசிரியருரையானுமுணர்க.

இனி வேற்படையது சிறப்பை "மறுவில்கொற்றத்தெய்யா நல்விசைச் செவ்வேற்சேஎய்" என்றும் "தற்பெயர் புணர்த்திக் கற்பினெடுகொடுத்த வமையாவென்றி யரத்த நெடுவேலோய்" என்றும் பிறருங்கூறியவாற்றானுமுணர்க. பாடுமென்புழி-உம்-விகுதி நிகழ்காலத்தது. அணியென்பதனைக் கடைநிலைத் தீவகமாகக்கொண்டு அணித்தான வெனப்பொருள் கூறுவாருமுளர். ஏ-பிரிநிலை. பணியாகவென்பது ஈறு தொகுத்தலாய் நின்றது. கயமா-இருபெயரொட்டுப் பண்புத்தொகை; இதனையறியாதார் மாகயமெனப் பிரித்திடர்ப்படுப. ஆடும்பரிவேல் என்புழியும் எனவென்னு மெண்ணிடைச் சொல்லிசைக்க. "கயமாமுகனைச் செருவிற்சாடுந் தனியானை" யென்றது கயமுகாசுரனை விநாயகர்தமது கொம்பொசித்துக் கொன்றமையை. தனியானை என்றார் ஒற்றைக் கொம்பையுடைய தோர்யானை பிறிதோன்றின்றாகலின். வயிரவடிவினையுடைய சூர்ப்பகை வேலாற் பிளக்கப்பட்டு மயிலுஞ் சேவலுமாயினமையை 'போரவுணன்-அங்கமிருகூறுயடன் மயிலுஞ் சேவலுமாத், துங்கமுடனார்த்தெழுந்து தோன்றுதலு - மங்கவற்றுட் சீறுமரவைப்பொருத சித்ரமயில்வாகனமா, வேறிநடாத்து மிளையோனே - மாறிவரு, சேவற்பகையைத் திறல்சேர்பதாகையென, மேவத்தனித்துயர்த்த மேலோனே' என்றதனானு முணர்க. அணிசேவலனை எனவும் பாடங் கூறுவாருமுளர். (ரு)

உல்லாசநிராகுலயோகவிதச்
சல்லாபவினோதனுநீயலையோ
வெல்லாமறவென்னையிழந்தநலஞ்
சொல்லாய்முருகாசுரபூபதியே.

(ப - ரை.) உல்லாசனும் - ஆனந்தத்தை யுடையானும், நிராகுலனும் - வருத்த மில்லாதவனும், யோகனும் - ஞானத்தை யுடையானும், இதனும் - நன்மையையுடையானும், சல்லாபனும் - களிப்பினை யுடையானும், வினோதனும் - விளையாட்டை யுடையானும், நீயலையோ - நீயேயன்றோ, எல்லாமற - அஞ்ஞானம் விட்டொழிய, என்னை யிழந்த நலஞ் சொல்

லாய்-தற்போதவொழிவான முத்திநிலையை அனுக்கிரகிக்கக்க டவாய், முருகா - மாறுதவிளமை யுடையானே, சுரபூபதியே-விண்ணுலகுக் கிறைவனே எ-று.

உல்லாசமாதி யறுகுணங்களுள் உல்லாசமென்றது-ஐசுவரியத்தை, நிராகுலமென்றது - வைராக்கியத்தை, யோகமென்றது - ஞானத்தை, இதமென்றது-புகழை, சல்லாபமென்றது-திருவை, விநோதமென்றது-வீரியத்தை. இவ்வறு குணங்களே இறைவன் அதோமுக மொன்றனேடு சத்தியோசாதமாதி யறுமுகங்களினின்று மாறு பொறிகளாகத் தோன்றவவற்றைப் பெருமான் கட்டளைப்படிக் காற்றுக் கடவுளும் கனற்கடவுளுங் கங்கையிற்சேர்ப்ப வக்கங்கை சரவணப்பொய்கையிற் கொடுபோகவாங்குப் பதுமப்பாயலிலாறு பிள்ளைகளாகக் கிடப்பப் பிராட்டியாரோடும் பெருமான் அங்ஙன் எழுந்தருளிபாவாய்! பிள்ளையைக் கொடுவாவெனவவ்வாறையுமெடுப்பவோருருவாகலினும்மை கொடுத்து நீயலேயோவென்றார். எல்லாமறவென்றது தத்துவங்களனைத்தினையுமிதுவது வல்லவென்றறக்களைதலை. தேவர்சேனபதியாகலின் பிள்ளையாரைச் சுரபூபதியே என்றார். (உ)

வானேபுனல்பார்கனன்மாருதமோ
ஞானேதயமோநவினன்மறையோ
யானேமனமோவெனையாண்டவிடந்
தானேபொருளாவதுசண்முகனே.

(ப - ரை.) வானே - ஆகாயமோ, புனலோ - நீரோ, பாரோ - நிலனே, கனலோ - நெருப்போ, மாருதமோ - காற்றே, ஞானேதயமோ-ஞானத்தின் பிறப்பிடனே, நவில்நான் மறையோ-சொல்லப்படுகின்ற நான்குவேதங்களோ, யானே-ஆன்மாவோ, மனமோ - மனனே, எனையாண்டவிடந்தானே-என்னைக் குருவடிவங்காட்டி யடிமைகொண்ட விடமேயோ, சண்முகனே-ஆறுதிருமுகங்களையுடைய பிள்ளையாரே, பொருளாவது - உண்மைநிலையாவது, எ - று.

ஓகார மெண்ணிடைச்சொல்லாகக் கோடலே சிறப்பெ ன்க. இதனை யையமெனக்கோடலத்துணைச்சிறப்பன்றென்க. என்னுயிர் என்புழி உடையானு முடைமையும் வேறன்றாய ஆறுவத னொற்றுமைப் பொருட்கண் வருதலின் யானெனற் குயிரெனப் பொருள்கூறினும். யானெனற்கு வேறுரைப்பாரு முளர். பொருளென்றல் உண்மையென்றாம். இதனைப் பொ ருள் சேர் புகழ்புரிந்தாரென்பதற்குப் பரிமேலழகர்கூறியவாற் றானு முணர்க. வேதமுதலியன ஐவகையாய மெய்வகைப்பூத ங்களுமிறைவனது வடிவமென்றலின் "வானோபுனல்பார்கன ன்மாருதமோ" என்றார். சண்முகனெனற்குக் காப்புச்செய்யு ளிலுரைத்தாங்குணர்க. பொருளாவதென்புழி ஆவதென்பது எழுவாய்ச் சொல்லுருபெனக் கூறுவாரு முளராலோவெனின் உருபின்மேலுருபிடைச்சொற்பெய்து முடித்தறேல்லோர்மர பன்றாகலி னவர்க்கதுகருத்தன்றென்க. இனிவினையிலக்கண யாகிய அவ்வினைப் பெயரெனக் கோடலேமிகச் சிறப்பென்க.

வளைபட்டகைமாதொடுமக்களெனுந்
தளைபட்டழியத்தகுமோதகுமோ
கிளைபட்டெழுசூருரமுங்கிரியுந்
தொளைபட்டுருவத்தொடுவேலவனே.

(ப-ரை.) வளைபட்ட - வளையலையணிந்த, கைமாதொடு மக்களெனுந் தளைபட்டு - கையினையுடைய மாதர்களொடு மக் களென்கின்ற பந்தத்திலகப்பட்டு, அழியத்தகுமோ தகுமோ- கெடத்தகுமா தகுமா, கிளைபட்டெழுசூருரமுங் கிரியும் - கிளைக்காரின்றெழுகின்ற சூரனதுவன்மையும் கிரௌஞ்சமும், தொளைபட்டுருவத் தொடுவேலவனே - தொளைக்கப்பட்டுடு ருவ வேலைப் பிரயோகித்தவனே, எ - று.

கொடிச்சேவல னென்பது சேவற்கொடியனென விகுதி பிரித்துக் கூட்டி யுரைத்தாற்போலுந் தொடுவேலவ னென்ற தையும் விகுதி பிரித்துக்கூட்டி யுரைக்க, தகுமோ என்றவடு க்கு இரக்கப்பொருட்டு. மக்கள் - பன்மையேகுறித்துவருபெ யர். மாந்தரென்பதுமது. கிளையென்றது - சிங்காமுகாசுரன்

தாருகனுதிய தம்பியரையும் பானுகோபன்முதலாயகுமாரரையு மென்க. சூரென்றது சொல்லளவில் அஃறிணைப்பெயர். கிரௌஞ்சமென்றது சந்தனப்பொதியிற் செந்தமிழ் முனிவனுய அகத்தியனுர் அவாசிக்கட் போந்துழி யோரவுண னன்றில் வடிவாய கிரௌஞ்ச மலையாய்த்தோன்ற வதனை யாருய்ப்புக் குழி யஃது மலைவைத்தரவதனுற் பிள்ளையார் வருகாறு மசல மாகாநிற்கவெனச் சபித்தனராக. அதனுனன்றே, பிள்ளையாருமிங்குற்றதனை வேற்படையாற் றடிந்தமை என்க. இங்ஙனங் கருதியன்றே, 'தாருகனுமாயத் தடங்கிரியுந்தூளாக' எனவும், 'பானுபகைவன் முதலாய பாலருடன் சிங்கமுகனை'யெனவும், 'சூருடலங்கீண்ட சுடர்வேலோய்' எனவும் பிறருங் கூறிய தூஉமென்க. சூருரமெனற்குத் தாருகனுரமென்பாரு முளர். அது சூரன்வேறு, தாருகன் வேறென உணராதார் கூற்றென்க. (ச)

மகமாயைகளைந்திடவல்லபிரான்
முகமாறுமொழிந்துமொழிந்திலனே
அகமாடைமடந்தையரென்றயருஞ்
சகமாயையுணின்று தயங்குவதே.

(ப - ரை.) மகமாயைகளைந்திட வல்லபிரான் - மகத்தென்னுந் தத்துவத்தையும் அதன்காரியமாகிய மாயையினையும் நீக்கவல்ல பெருமான், முகமாறு மொழிந்தும் - உண்மை நிலையை யருளிச்செய்தும், அகம் ஆடை மடந்தையரென்று - வீடு ஆடை மங்கையரென்று, அயரும் சகமாயையுள் நின்று தயங்குவது - வருத்துகின்ற சகமாயையிலே நிலைத்துக் கிலேசப்படலை, ஒழிந்திலன் - விடகில்லேன், எ-று.

மகமாயை என்றது - மகத்தென்னு மூலப்பகுதியையும் மாயையையு மெனக் கொள்ளாது வேறு கூறுவாருமுளர். ஆறு என்பதற்குப் பரிமேலழகர் அறத்தாறென்புழிப் பயனென்றுரைத்தாராகலின், வாயின்பயனுய மொழியை யாறென்றூழ். இங்கு உண்மை நிலையின் மேற்பயன் பிறிதின்மையின். இதனை வாய்மையெனப்படுவது என்புழிப் பரிமேலழகருரை

யானுமுணர்க. மூகமாறு என்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். மாயையினின்று மூலகந்தோன்றலின் சகமாயையென்றார். மகமாயை உம்மைத்தொகை. இதனை வடநூலார் துவந்துவ னென்பர். (ரு)

திணியானமனோசிலைமீதுனதாள்
அணியாரரவிந்தமரும்புமதோ
பணியாவெனவள்ளிபதம்பணியும்
தணியாவதிமோகதயாபரனே.

(ப-ரை.) திணியான மனோசிலைமீது- திண்ணிதானமன மாகிய கல்லின்மேல், உனதாளணியாரரவிந்தம் -உன்னுடைய பாதமாகிய வழகார்ந்ததாமரைமலர், அரும்புமதோ-தோன்று வதோ, பணியாவென - செய்யும் பணிவிடையாவையென்று, வள்ளி பதம்பணியும் - வள்ளிநாயகியார் பதத்தைவணங்கும், தணியாவதி மோகதயாபரனே - தணியாத மிக்கமோகத்தை யுடைய கிருபைக்கிடமான் மேலோனே, எ-று.

மனோசிலை என்பது-இருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூன்முடிபு. "கன்னுருகித்தென்ன வென்னையுந் தன்கரு ணையினால்" எனப்பிறருங்கூறினாராகலின், "திணியானமனோ சிலைமீதுனதாளணியாரரவிந்த மரும்புமதோ" என்றார்; என் றாரேனும் குறிஞ்சித்திணைக்கண் தாமரையாய மருதக்கருப் பொருடோன்றாதேனும் எல்லாம் வல்லபிள்ளையார்பான் மெய் ந்நிலையாய செந்நெறிபெற் றிருக்குநராகலின், மனோலயம் பெற்றமையு மிதன் மூன்னிலைமையையுங் கருதி "மனோசிலை மீதுனதாளரவிந்த மரும்புமதோ"என்றார். இனி 'பணியாவன வள்ளிபதம் பணியுந்தணியா' எனப்பாடமோதிப் "பணியத்த காதவனப்பினை வாய்ந்த வள்ளிநாயகியாரது பாதம்பணியா நின்ற தணிகாசலனே, என்றுரைவிரிப்பாருமுளர். அஃதேல்- "கலாமயிற்கூத்தயர் குளிர்புனமொய்த்திட்ட சாரலிற்போய்ச் சிறுகுறவர் மகட்குச் சலாமிடற்கேக்கறு குமரனை" எனப்பிற ருங் கூறுதலானஃது பாடமன்மை தெளிக. இங்குப் பணித லைக்கந்தபுராணத்தும் வள்ளிநாச்சியார் திருமணப்படலத்துப் பரக்கக்காண்க. (சு)

கெடுவாய்மனனேகதிகேள்கரவா
திடுவாய்வடிவேலிறைதாணினைவாய்
சுடுவாய்நெடுவேதனைதூள்படவே
விடுவாய்விடுவாய்வினையாவையுமே.

(ப - ரை.) மனனே-மனமே, கதிகேள்-நீயிற்றைஞான்றுய்யும் வகைகேள், (அஃதியாதெனின்) கரவாது இடுவாய் - ஒளிக்காமலே யிரவலர்க்கில்லை யென்னுமலிடு, வடிவேலிறைதாள் நினைவாய் - வடிவேற்படையைக் கையிலேந்திய பிள்ளையாரது திருவடிகளை நினை, நெடுவேதனை தூள்பட - பிறவித்துன்பந்துகளெழ, சுடுவாய் - கெடச்செய், வினையாவையும் - நல்வினை தீவினை என்னு மிருவினை முழுதும், விடுவாய் விடுவாய் - விரைந்துவிடு - எ - று.

கெடுவாயென்றது - இரக்கக் குறிப்புரிச்சொல். கெடுவாயெனற்குக் கேடுவாய்ந் தென்பாருமுளர். அற்றேல் கெடு என்பது - முதனிலைத் தொழிற்பெயர். சுடுதலீண்டுக்கெடுத்தலை. வேதனை நீடலின் நெடுவேதனை யென்றூர். துகள் தூள் என மரீஇயது. விடுவாய் என்ற அடுக்கு விரைவுப்பொருட்டு. வினையெனவே நல்வினை தீவினைகளடங்குமேனும் யாவையுமென்றமையா னவ்விரண்டனையு மென்க. (எ)

அமரும்பதிகேளகமாமெனுமிப்
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசியவா
குமரன்கிரிராசகுமாரிமகன்
சமரம்பொருதானவநாசகனே.

(ப - ரை.) குமரன் - குமாரக்கடவுளும், கிரிராச குமாரி மகன்-பர்வதராச புத்திரியார் புதல்வரும், சமரம்பொருதானவநாசகன் - போர்புரியுமவுணர் குலமழிப்பவருமாகிய பிள்ளையார், அமரும்பதி - யான் வசிக்குமூர், கேள் - சுற்றம், அகம் - வீடு, எனுமிப்பிமரம்கெட - என்கின்ற இவ்விருள்கெட, மெய்ப்பொருள் - தத்துவார்த்தமாகிய உண்மை நிலையை, பேசியவாறு என் - பேசியவிதமென்ன வியப்பு, எ - று.

என்னென்ப தெஞ்சிநின்றது - பேசியவாறென்புழி ஈறு-தொகுத்தல். ஆம்- அசை. தானவனென்றது காசிபமுனிவன் மனைவியருட் டனுவென்பாண் மக்களை. பிள்ளையார் பரமாசிரிய ராகலின் மெய்ப்பொருள் பேசியவாறென் னென்றார். என்னை? இவ்விருள் கெட்டாலல்லது சுவானுபூதியாகிய வருக்கன்றோன்ற லரிதாகலின். மெய்ப்பொருள் என்புழி-இரண்டனுருபும் பிரிநிலை யேகாரமும் விகாரத்தாற் றொக்கன. (அ)

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப்
பட்டூசல்படும்படரென்றொழிவேன்
தட்டூடறவேல்சைலத்தெறியும்
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே.

(ப - ரை.) தட்டு ஊடற - தடையானது பிணங்குத னீங்கும்படி, வேல்சைலத்தெறியும் - வேற்படையைக் கிரௌஞ்ச பர்வதத்தின்மேலேவுகின்ற, நிட்டூர - கோபத்தையுடையவனே, நிராகுல - வருத்தமற்றவனே, நிர்ப்பயனே - பயமில்லாதவனே, மட்டூர்குழல் மங்கையர் - மலர்நிரம்பிய கூந்தலையுடைய மடந்தையரது, மையல் வலைப்பட்டு - ஆசையாகிய வலையிலகப்பட்டு, ஊசல்படும்படர் - ஊசலைப்போலும் படுகின்ற துன்பத்தை, என்றொழிவேன் - எக்காலத்தில் நீங்குவேன், எ - று.

மட்டு - ஆகுபெயர். ஊசல்படும் பரிசெனப்பாடங்கொண்டு வேறு கூறுவாருமுளர். தட்டூடற என்றமை விரைபக என்னும் பொருட்டு என்க. சைலம் எனறது கிரௌஞ்சத்தை. வேல்சைலத் தெறிந்தமையை. "வளைபட்டகை" என்னுஞ் செய்யுளிற் "கிரியுந்தொளைபட்டுருவ" எனற்குரைத்தாங்கோர்ந்துணர்க. மையல்வலை - இருபெயரொட்டுப்பண்புத்தொகை. இம்மயலொழிந் தல்லது சிந்தையு மொழியுஞ்செல்லா நிலைமைத்தாய அந்தமி லின்பத்தழிவில் வீடெய்தலரிதாகலினன்றே "ஊசல்படும்படரென்றொழிவேன்" என்றார். (கூ)

கார்மாமிசைகாலன்வரிற்கலபத்
தேர்மாமிசைவந்தெதிரப்படுவாய்
தார்மார்பவலாரிதலாரியெனுஞ்
சூர்மாமடியத்தொடுவேலவனே.

(ப - ரை.) கார்மாமிசை - எருமைக்கடாவின்மேல், காலன் வரின் - கூற்றுவன்வந்தால், கலபத்து ஏர்மாமிசை - தோகையையுடைய அழகிய மயிலின்மேல், வந்து எதிரப்படுவாய் - எதிரேவந்து தோன்றுவாய், தார்மார்ப - மலர்மாலையணிந்த மார்பையுடையானே, வலாரிதல அரியெனும் சூர்மா - இந்திரலோகத்துக்குப் பகைவனாகிய மாமரவடிவமான சூரபதுமன், மடியத்தொடுவேலவனே - மடியும்படி வேலைப் பிரயோகித்தவனே, எ - று.

எருமைக்கடா மிகக் கரியதாகலின் "கார்மா" என்றார். இக்கருத்தே பற்றிப் "பட்டிக்கடாவில் வருமந்தகா" என்றார் இவ்வாசிரியரும். மலர்மாலை இங்குக்கடப்பமாலையை, அதனைப்பிள்ளையாரணிதலின். அஃதாகலினன்றே இவர்க்குங் கடம்பனென்றோர் பெயரெய்தியதென்க. அக்கூற்றிக்கடாமிசையூர்ந்தேயுயிர் கைக்கோடலின் வரினென்றும் அப்போது நீ மயிலிவர்ந்து வந்தாலல்லது பிழைப்பரிதாகலின் வந்தெதிரப்படுவாயென்றுங் கூறினார். வந்தெதிர என்பதையுந் தொடுவேலவனென்பதையு மெதிர்வந்து எனவும் வேல்தொட்டவனேயெனவும் விகுதி பிரித்துக்கூட்டியுரைக்க. கலாபமென்பது திரிந்து நின்றது. வலாரி என்றார் - இந்திரன் வலனென்னுமோரசுரனைப் படுத்தலின். கலபத்தேர்மாவெனக்கொண்டு கலாபத்தையுடைய மஞ்ஞையாகிய தேர்மிசையிவர்ந்தெனப் பொருள் கூறுவாருமுளர்; அங்ஙனமாயின் மோனையின்றியும், பொருட்பொலிவின்றியு நிற்றலா னங்ஙனங்கூறுதன் மரபன்றென்க. மாமரமாக்கடைப்போர் பொருதலின் சூரைச்சூர்மாவென்றார். இதனை "ஞாட்பினுண்மறைந்து நடுவறுவரத்தால்-வடவைநெடுநோக்கின் கிளைகள் விரிந்தென்னச்-செந்துகிர்படருந் திரைகடற் புக்குக் - கிடந்தெரி வடவையிற் றளிர்முக

மீன்று - திரையெறிமலைகளிற் கவபேலபோக்கிக் - கற்செறி பாசியிற் சினைக்குழைபொதுளி - யகறிரைப்பரப்பிற் சடையலேந்தலையாது - கிழிணர்நின்ற மேற்பகைமாவின்" எனவும், "கவிழிணர் மாமுதலெனவும்" "வாரிதனிற் புதியமாவாய்க் கிடந்த நெடுஞ்சூர்" எனவும் பிறருங்கூறியவாற்றானுமுணர்க.

கூகாவெனவென்கிளைகூடியழப்
போகாவகைமெய்ப்பொருள்பேசியவா
நாகாசலவேலவநா லுகவி
த்யாகாசுரலோகசிகாமணியே.

(ப - ரை.) கூகாவென - கூகாவெனுமோசையுடனே, என் கிளைகூடியழப் போகாவகை - என்னுடைய சுற்றத்தார் சூழ்ந்தழாதவிதமாக, மெய்ப்பொருள் - பிரமானுபவநிலையை, பேசியவாறு என் - உபதேசித்த விதமென்ன வியப்பு, நாகாசலவேலவ - திருவேங்கடமலையி லெழுந்தருளிய வேற்படையையுடையானே, நாலுகவித்யாகா-நான்குவிதமான கவிதையைப் பாடுநருக்கு அருள்பவனே, சுரலோகசிகாமணியே - பொன்னுலகோருக்கு முடியிலணியு மணிபோன்றவனே, எ - று.

கூகாவென்பதொலிக்குறிப்பு. கிளை-ஆகுபெயர். நாகாசலமென்றது - வேங்கடவரையை யன்றித் திருக்கொடிமாடச் செங்குன்றூரெனினுமாம், இக்காலத்துத் திருச்செங்கோடென வழங்குப. இங்ஙனங் கூறியதையே பொருளென்பதனைத் "திருவேங்கடமாமலைமேவிய பெருமாளே" என்பதனானும், 'கோனேரி' யென வத்தீர்த்தத்தைக் கூறலானும், "செங்கோடமர்ந்த பெருமாளே" என்பதனானுமுணர்க. இனி வேங்கடவரையன் றென்பதொன்று-அது "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந்தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானு மெல்லாரானு மறியப்படுதலானும்-வேங்கடத்தையெல்லையாகக் கூறினர்" என்னுந் தொல்காப்பிய நச்சினார்க்கினியாருரையானும் "நெடியோன் குன்றமுந்தொடியோள் பௌவமும்" என்னுஞ் சிலப்பதிகாரவேனிற் காதையுரையா

னுமறிக. இங்ஙன மன்றெனமறுத்தார், தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுரைகாரர். நாலுகவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்பன. நாலுகவித் யாகாவென்பதற்கு நாலுகவிதையும் பாடுமொறு சீகாழியின்க ணந்தணர்குலத்திற் கௌணியகோத்திரத்திற் றிருவவதாரஞ்செய்த பிள்ளையாரே எனினுமாம். இதனை-இவ்வாசிரியர் கூறிய "தென்னவனங்கனன் னீற்றாற் றிருத்தியதென்ன வின்னம், தென்னவனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே" என்றதனானும், "காழியிலே வந்து கணக்கிலாச்சீவரைநீ-டூழியின்பத்துய்த்த வொருவனே" எனப் பிறருங் கூறிய வாற்றானுமுணர்க. இந்திரனையவனிழந்த பெரும்பதமீட்டும் பெறச் செய்தமையின் பிள்ளையாரைச் "சுரலோகசிகாமணியே" என்றார். (கக)

செம்மான்மகளைத்திருடுந்திருடன்
பெம்மான்முருகன்பிறவானிறவான்
சும்மாவிருசொல்லறவென்றலுமே
அம்மாபொருளொன்றுமறிந்திலனே.

(ப-ரை.) செம்மான்மகளை - செம்மையானமானின் மகளாராகிய வள்ளிநாச்சியாரை, திருடுந்திருடன் - களவுசெய்த கள்வன், பெம்மான் - பெருமான், முருகன் - மாறுதவிளமையுடையான், பிறவான் - எஞ்ஞான்றுந் தோன்றுதலில்லான், இறவான் - அங்ஙனமே மரணமு மில்லாதான், சொல்லற - சொல்லுதலிலதாக, சும்மாவிரு வென்றலும் - சும்மாவிருவெனச் சொல்லுதலும், அம்மாபொருள் - அம்மாட்சிமையான உண்மை நிலையை, ஒன்றுமறிந்திலன் - மிகச்சிறிது மறியகில்லேன், எ - று.

செம்மான்மகளைத் திருடுந்திருடன்-என்றது, சிவமுனிவர் தெய்வப்புணர்ச்சியான் அங்குச்சென்ற மானைநோக்க அஃது கருவுற்றுத் தொண்டைவளநாட்டு வள்ளிமலைச்சாரலிற் குருந்தை யீன்று செல்ல அதனை வேடரெடுத்து வளர்த்துழிப் பிள்ளையாரெய்திக் கைக்கொடு சென்றமையை. இதனைக் கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்தானு

மூணர்க. செம்மான் மகளெனற்குச் சிறந்தமாலினது மகளா ரென்று பொருள்கூறு வாருமுளர். அஃது மேற்குறித்த புராணக் கருத்தன்றாகலிற்போலியுரையென்க. சும்மாவிரு சொல்லறவென்றது - சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாய தத்துவ முழுதுங்கடந்த பேரின்ப நிலையை. இதனை "சும்மாவிருவென நீ சொல்லப்பொருளொன் றும், எனவும் - என்னுணை யென்னுணை யென்னுணை யேகமிரண்டு, எனவும் பிறருங்கூறிய வாற்றானுமுணர்க. செம்மானென்றது இனமின்றிச் செய்யுளில்வந்த கருமதாரயனென்க. இதனை 'வெண்டிங்கள்' 'செஞ்ஞாயிறு' என்பன இனமின்றிச் செய்யுளில்வந்த கருமதாரய னெனவுங்கூறித்தண்டியாசிரியரும் 'தவளசந்திர' னெனவும், இனிச் சேனாவரையர் 'வெண்காடு, வெண்களமர் வென்ப' ரெனவும், அவ்வாறு 'கிருஷ்ணசர்ப்ப' மென்பதாகக் காசிகாவிருத்திகாரருங் கூறினரெனவுமென்றார் பிரயோக விவேக நூலாரென்க. அம்மா என்ன வியப்பு எனப்பொருள் கூறுவதுமொன்று. ஒன்றென்பதிங்கு மிகச்சிறுமையை யுணர்த்திற்று. அறிந்திலன், என்றது இறந்தகால வெதிர்மறை வினைமுற்று. இது அறிகின்றிலனென நிகழ்காலமேற்பதன்றி எதிர்காலமேற்றுவந்திலது. ஒன்று மென்னுமும்மை முற்றுப் பொருளோடு இழிவு சிறப்புப்பொருட்டு. (கஉ)

முருகன் றனிவேன் முனிநங்குருவென்
றருள்கொண்டறியா ரறியுந்தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின்றதுவே.

(ப-ரை.) உருவன்று - பஞ்சபூதபௌதிகமன்று, அருவன்று - அவற்றின்காரணமாகிய மாயையுமன்று, உளதன்று - சத்துமன்று, இலதன்று - அசத்துமன்று, இருளன்று - அஞ்ஞானமுமன்று, ஒளியன்று - ஞானமுமன்று, என - என்றுசொல்ல, நின்றது - நின்றதனது யதார்த்த நிலையை, முருகன் - மாறாத விளமையுடையான், தனிவேன்முனி - ஒப்புயர்வகன்ற வேற்படையைக் கையிலேந்திய பெருமான், நங்குருவென்று - நமதாசாரியனென்று சொல்லி, அருள்கொண்டு - அவனரு

ளால், அறியார் - அறியாதார், அறியுந்தரமோ - அறியும் பான்மையதோ, எ - று.

"காட்டுவித்தாலாரொருவர் காணுதாரே காண்பாரார்கண்ணுதலாய்க்காட்டாக்காலே" யென்றருளுளராகலின் "அறியுந்தரமோ" என்றார். இங்ஙனங்கருதியன்றே "வேதக்காட்சிக்கு முபநிடத் துச்சியின் விரிந்த, போதக்காட்சிக்குங் காரணன் புதியரிற்புதியன், மூதக்கார்க்கு மூதக்கவன் முடிவிற்குமுடிவாம், ஆதிக்காதியா யுயிர்க்குயிராய்நின்ற வமலன்" எனவும் "ஆதியாகிய குடிலையுமைவகைப் பொறியும் - வேதம்யாவையும் தந்திரப் பன்மையும்வேறு - ஓதநின்றிடு கலைகளுமவ்வவற்றுணர்வாம் - போதம்யாவையுங் குமரவேள்பொரு விலாவுருவம்' எனவுங் கந்தபுராணத்துங்கூறியவாற்றானுமுணர்க. உரு அருவென்பன ஆரியச்சிதைவு. எனவென்பது காரியப்பொருட்டாகிய செயவெனெச்சம். ஓகாரமெதிர்மறைப்பொருட்டு. அருள்கொண்டு என்புழி கொண்டு என்பது மூன்றுவதன் கருவிப்பொருளில் வருமிடைச்சொல். பிள்ளையார் உள்ளமயக்கைக் கடிதலின் குருவென்றதென்க. "கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன்" என்றார் பிறரும். நங்குரு வென்றது - தமக்குமேயன்றி அகத்தியனார்க்கும் சிவபிரானார்க்கும் பாராசரமுனிவர் குமாரரறுவர்க்கு முண்மைநிலையை யுணர்த்தினமையைநோக்கி; இதனைக் "குறுமுனிதேற நெடுமறைவிரித்தோய்' என்பதனானும், "உழன்மதிற்சுட்டதழனகைப் பெருமான், வணங்கிநின்றேத்தக் குருமொழிவைத்தோய்" என்பதனானு முணர்க.

அவனருள் கொண்டறிதற்பாலதென்பது "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்பதனானும் "அவனருளாலே கண்ணாகக்காண்பதல்லா லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத் தனிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணுதே" என்பதனுனுமுணர்க. தனிவேலென்றார் - எதனானுமரணமடையாத சூர்ப்பகையைக் கீண்டமையைக்கருதி. என்று - என்பது சொல்லெச்ச மன்றென்பதைச் 'சொல்லெனெச்ச' மென்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச்சூத்திரத்திற்குச் சேனாவரை

யருரையானுமுணர்க. இந்நிலையே நான்கு வேதமு மொருசம நிலை சொலு நிலையாதலின் இதனின் மிக்கதில்லை யென்பார் அவனருள் கொண்டறியாரறியுந் தரமோ என்றார். இதனை "அறியாப் பொருள் காரணமாயை குறித்தறியும் பொருள் காரணமாமுலகிந் - நெறியாற் றிகழ்நான் மறையந்த மெலா - நீயன்றன வோதுநிரந்தரமே" என்பதனானுமறிக. (கரு)

கைவாய்கதிர்வேன்முருகன்கழல்பெற்
றுய்வாய்மனனேயொழிவாயொழிவாய்
மெய்வாய்விழிநாசியொடுஞ்செவியாம்
ஐவாய்வழிசெல்லுமவாவினையே.

(ப - ரை.) கைவாய்கதிர் வேல் - கையின்கண் ஒளிய மைந்த வேற்படையேந்திய, முருகன் - மாறாதவிளமையுடைய பிள்ளையாரது, கழல் பெற்று - திருவடிகளைத் துணையாக வடைந்து, மனனே - நெஞ்சமே, உய்வாய்-பிழைப்பாய், மெய் வாய் விழிநாசியொடுஞ் செவியாம் - மெய் வாய் கண் மூக்குக் காதென்கின்ற; ஐவாய் வழிசெல்லு மவாவினை - ஐந்தாகிய வாயிலின் வழியாகச் செல்லுகின்ற வைந்தவாவினையும், ஒழி வாய் ஒழிவாய் - விடுவிடு, எ - று.

கைவாய் - என்பதற்கு கையில் வாய்ந்த எனவும், ஒழுக் கம் வாய்ந்த எனவும் விரிப்பாருமுளர். கதிர்வேல் என்றார் மழுங்காத கூருடையதாகலின்; 'சுடர்வேலோய்' எனப் பிறர் கூறலும் இப்பெற்றி நோக்கி என்க. இனி மெய்யுணர்ச்சி யுடையார்க்குவேதனை பற்றியோரோ வழித்துறக்கப்பட்டபுல ன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தானினைவு செல்லுமன்றே, அந்நினைவு அவித்தை யெனப் பிறவிக்கு வித்தாமாகலின் அதனை யிடைவிடா மெய்ப்பொருளுணர்ச்சியா னறுத்தானல் லது பிறவியறுது. அஃது மன்னோனருள் பெற்றன்றி முற்றா தாகலின் "ஐவாய் வழிசெல்லு மவாவினையொழிவா" யென்ற தூஉ மென்க. ஒழிவாய் என்னுமடுக்கு விரைவுப் பொருட்டு. இங்ஙனங் கூறுது தேற்றம் பற்றி மீமிசையாய் வந்த தென் பாருமுளர். அது - அடுக்கென்பத னிலக்கணமு மொரு பொ

ருட் பன்மொழியென்பத னிலக்கணமு மீதென்றோரார் கூற் றென்றொழிக. அவாவுமைந்தென்றது ஐவாய் வழியைப்பற்றி யென்க. இக்கருத்தேபற்றிப் பொறி வாயிலென்னுந் திருக் குறட்குப் "புலன்களைந்தாகலான் அவற்றின்கண் செல்லு கின்ற அவாவுமைந்தாயிற்று என்றார் உரையாளராகிய பரி மேலழகரும். ஒடு-உடனிகழ்ச்சிப்பொருட்டு. உம்-சாரியை.

முருகன்குமரன்குகனென்றுமொழிந்
துருகுஞ்செயறந்துணர்வென்றருள்வாய்
பொருபுங்கவரும்புவியும்பரவுங்
குருபுங்கவவெண்குணபஞ்சரனே.

(ப - ரை.) முருகன் - மாறாத விளமையுடையான், கும ரன் - குமாரக்கடவுள், குகன் - உயிர்களதுள்ளமாகிய குகை யின்கணுள்ளான், என்று மொழிந்து - என்று கூறி, உருகும் செயல்தந்து - நெஞ்சுருகுகின்ற தொழிலையளித்து, உணர்வு என்று அருள்வாய், மெய்யுணர்ச்சியை யென்ஞான்றனுக்கிர கிப்பாய், பொருபுங்கவரும் - பொருகின்ற தேவரும், புவியும் - உலகினரும், பரவும் குருபுங்கவ - தொழுகின்ற குருநாயனே, எண்குணபஞ்சரனே - எண்குணமாகிய திருமேனியையுடை யவனே, எ-று.

உம்மை எண்ணுப் பொருளன. நாகருமென்பது வரு விக்க, "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பவாகலின்; இதனை உபலக்கணமெனக் கூறுதலுமொ ன்று. உணர்வென்றது, மெய்யுணர்ச்சியை. மனோலய மெய் திய துணையல்லது மெய்யுணர்ச்சி தலைக்கூடலரிதாகலின், உருகுஞ்செயறந்தென்றார். எண்குணங்களாவன:—தன்வயத் தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடி விலாற்றலுடைமை, வரம்பி லின்ப முடைமையென விவை - இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்ட தென்றார், எண்குணத் தான்றாளை என்றதற்குப்பரிமேலழகரும். இனி அணிமாவை யுள்ளிட்ட வெட்டனையு முடையா னென்பார் சாங்கிய நூலா

ரென்க. உயிர்களதுள்ளமாகிய குகையிலிருப்பவனாகலின் குக னெனற் கிங்ஙனம் பொருள் கூறினும். இது கருதியன்றே "ஙங்குருகுகேசன்" என்றார் பிறரும். (கரு)

பேராசையெனும்பிணியிற்பிணிபட்
டோராவினையேனுழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேலெறியுஞ்
சூராசுரலோகதுரந்தரனே.

(ப - ரை.) பேராசை யெனும் பிணியில் - பெரிதாகிய வவாவென்கின்ற நோயால், பிணிபட்டு - கட்டுப்பட்டு, ஓராத வினையேன் - உண்மையை யுணராத தீவினை யுடையேன், உழலத்தகுமோ - அலையத்தகுமா அன்று, வீரா - வீரத்தன் மையுடையானே, முதுசூர்பட - பழமையானசூர்ப்பகையழிய, வேலெறியும் - வேற்படையைச் செலுத்தும், சூரா - சூரத்தன் மையுடையானே, சுரலோக துரந்தரனே - அமரருலகம் பாது காப்பவனே, எ - று.

அவாபிறவிப்பிணிக் கேதுவாகலின் - "பேராசையெனும் பிணியிற் பிணிபட்டோரா வினையேன்" என்றார். இங்ஙனங் கூறியதை "அவாவென்ப வெல்லா வுயிர்க்கும்" என்றதனு னும் அதற்குப் பரிமேலழகருரையானு முணர்க. முது சூர் என்றது, இச்சூர்ப்பகை முற்பிறப்பிற்றன்னை யூர்தியாகக் கொண் டிவருமாறு அருந்தவம் புரிந்தமை கருதி. இதனை உபதேசகாண்டத்தறிக. மாகம்பராவியவாகண்டலத்கீவனிழந் தவத் திறக்கநாடு மீட்டும் பெறச்செய்தமை நோக்கிச் "சுர லோகதுரந்தரனே" எனப்புணர்த்தினர். அங்ஙனம் புணர்த் தியதூஉம் அவன் மேருவரையிற் பிள்ளையார் பிள்ளை விளை யாட்டுத் தொடங்க அதனை யவுணமாயை யெனவயிரப்படை யோச்சப் பிள்ளையார் கடிய வதனாற் பிரேதமாகா நிற்புழிவி யாழப் புத்தேளுணர்ந் திவனைக்காத்தல் வேண்டுமென் றிரப்ப மீட்டுமெழுந்திருப்பப் புரிந்து சூர்பகையை வென்றவன் பெ ரும்பத மீட்டமருளினமைபோலப் பிறவிப்பிணியாற் கட்டு ண்ட கடையேனு நீயாரியனுயுணர்த்தியு முண்மை நிலையை

யறியாது மயங்குறுகின்றே னாகலின் மீட்டுமருள்புரி யென் பதனைக் குறிப்பித்தற்கு. முதுகுரெனற்குப் பிறிதுரைப்பாரு முளர். முதுமை யெனற்குப் பழமையெனப் பொருள் விரித் தமையைமுதுக்குறைவென்றதனானுமறிக. படலீண்டழிதன் மேற்று. எல்லாம் வல்லவராதலிற் பிள்ளையாரை 'வீரனென வுஞ் சூரனெனவுந் துரந்தரனெனவுங்' கூறினரென்க.

அவித்தையும், அதுபற்றியானெனமதிக்கு மகங்காரமும், அதுபற்றியெனக் கிதுவேண்டு மென்னுமவாவும், அதுபற்றிப் பொருட்கண் செல்லுமாசையும், அதுபற்றி அதன் மறுதலைக் கண் செல்லுங்கோபமுமென வடநூலார்குற்றமைந்தென்புழி அவாவுத லாசைக்க ணடங்கலின் அதனையே விதந்து பேராசையெனும் பிணியென்றார். (கசு)

யாமோதியகல்வியுமெம்மறிவுந்
தாமேபெறவேலவர்தந்ததனாற்
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்
நாமேனடவீர்நடவீரினியே.

(ப - ரை.) யாமோதியகல்வியும் - யாமிதுகாறும்பயின்ற கல்வியும், எம்மறிவும் - அதற்கேதுவாய் நின்ற எம்முடைய வறிவும், வேலவரேபெற - வேற்படையேந்திய பிள்ளையாரே யடையும்படி, தந்ததனால் - அருளிச்செய்தபடியால், பூமேல் மயல்போய் - பூமியின்கண் மயக்கமகன்று, அறமெய்ப்புணர் வீர் - அறநிலையையுண்மையாகப் பொருந்துகிற்பவரே, நாமே லினி நடவீர் - நாவானேயவனது புகழையினிப் பன்முறைபா டுங்கள், எ-று.

நாமேல்என்பது உருபுமயக்கம். மெய்யறமெனக்கொண்டு உண்மையாயவறமெனினு மிழுக்காது. தாம் - அசை. "கற்றதனாலாய" என்னுங் குறட்பொருளையே இவருங்கருதிக்கூறி னார். என்னை? உடல்முதலன நிலையிலவாகலினென்க. நடவீர் என்னுமடுக்கு விரைவுப்பொருட்டு. (கஎ)

உதியாமரியாவுணராமறவா
விதிமாலறியாவிமலன்புதல்வா
அதிகாவநகாவபயாவமரா
வதிகாவலசூரபயங்கரனே.

(ப - ரை.) உதியாத - பிறவாத, மரியாத - இறவாத, உணராத - (மலவாதனை) அறியாத, மறவாத (தம்மையடைந்தவரைக் காத்தலில்) மறவாத, விதிமால் - பிரமன் மால் என்னுமிவரால், அறியாத - அறியப்படாத, விமலன் - மலமுத்தனாகிய சிவபிரானது, புதல்வா - குமாரரே, அதிகா - யாவரினுமிக்கோரே, அநகா - பரிசுத்தரே, அபயா - அடியார்க்குப்புகலிடமானவரே, அமராவதிகாவல-அமராவதியைப் புரப்பவரே, சூரபயங்கரனே - சூர்ப்பகைக்குப் பயமிகுதியும் விளைப்பவரே எ-று.

என்னை யூடிமையாகக் கொண்டருள்க வென்பது இசையெச்சமென்க. உதியாமுதலியனவீறுகெட்ட வெதிர்மறைப் பெயரெச்சங்கள். விதிமாலென்பன உம்மைத்தொகை. உதியாமுதலியவற்றை விமலனோடியைக்க. அமராவதி என்றது அமரருலகின் தலைமையாயநகரை. சூரபயங்கரனென்றார் விச்சுவசொரூபமெடுத்த ஞான்றிதுகாறு மிச்சிறுகுமரனுவேனை வேறல்புரிபவ னென்றெண்ணியிருந்தவனுளங் கவலுறப்புரிந்தமையை. உதியா, மரியா,உணரா,மறவா என்பவற்றை உதித்து, மரித்து, உணர்ந்து, மறந்து எனச்செய்தெனெச்சமாக்கியும் விதிமா லென்பவற்றை அறியாவென்பதனோடு கூட்டி முடிக்கினுமிழுக்காது. இதற்குப்பிறிதுரைப்பாருமுளர். (கஅ)

வடிவுந்தனமும்மனமுங்குணமுங்
குடியுங்குலமுங்குடிபோகியவா
அடியந்தமிலாவயில்வேலரசே
மிடியென்றொருபாவிவெளிப்படினே.

(ப - ரை.) அடியந்தமிலாத - ஆதியுமந்தமும் இல்லாத, அயில்வேலரசே - கூர்மையான வேற்படையையுடைய இறைவனே, மிடியென்ற ஒருபாவி-வறுமையென்கின்ற ஒருபாவி, வெளிப்படின் - தோன்றினல், வடிவும் - அழகும், தனமும் - பொருளும், மனமும் - நன்மனமும், குணமும்-பண்பும், குடியும் - உயர்குடிப்பிறப்பும், குலமும்-மரபும், குடிபோகியவாறு- இரியல் போனவிதமென்ன, எ-று.

நின்னைப்புகல்புகார்க்கு வறுமையே யமையுமென அதனை வியந்தபடியாயிற்று. அடியந்தமென்றதனால் - நடுவென்றது வருவிக்க - அடியந்தமிலாவா சென்றியைக்க. சிவபிரானது - இருபத்துநான்கு முகூர்த்தத்துப் பிள்ளையார் ஒரு முகூர்த்த மாகலின் அடியந்த மிலாவா சென்றார்: 'ஆதியுமந்தமு மிலாவ ரும்பெருஞ்சோதி' யென்றார் பிறரும். பிள்ளையாரே சிவமெ னக்கருதியன்றே "உன்னுருவையும் முனக்கிளைய வன்னுரு வையும் முன்றந்தை யருளுருவையு, முன்னன்னையுருவையும் முன்னடிய ருருவையு மொன்றெனப்பென்" என்றார் பிறரும். பண்பிற்குப் பண்பியில்லையேனுந் தன்னையாக்கினனை இரு மையுங்கெடுத்தற் கொடுமை பற்றி "அழுக்காறெனவொரு பாவி" எனற்குப் பரிமேலழகருரைத் தலையான் தீவினையின் பயனாயவறுமையை" மிடியென்றொரு பாவி, என்றாரிவரும். போகியவாறு என்புழி றவ்வீறு தொகுத்தலாய் நின்றது. என் னெனப்பதெஞ்சி நின்றது; இது பெயரெச்சத்தொகா நிலைத் தொடரென்க. இங்ஙனங்கூறாது ஒருமொழியெனக்கொண்டு வினையாலணையும் பெயர் என்பாருமுளர். வினையாலணையும் பெயர் ஒருமொழியாமன்றே, போகிய ஆறென இருமொழி யாய் வெள்ளிடை மலைபோல நிற்க, ஒருமொழியெனக் கோ டல் யாதோவெனக் கடாவியொழிக. என்ற வென்னும் பெய ரெச்ச மீறு தொகுத்தலாய்நின்றது. வேலாசென்றார் இவர்க்கு ஞானசத்திதாரென்னும் பெயர்பற்றியென்க. (கக)

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியேன்
உரிதாவுபதேசமுணர்த்தியவா
விரிதாரணவிக்ரமவேளிமையோர்
புரிதாரகநாகபுரந்தரனே.

(ப - ரை.) அரிதாகிய மெய்ப்பொருளுக்கு - அருமைய தாகிய உண்மைப்பொருளுக்கு, அடியேன் உரிதாக-அடியேன் உரிமையனாக, உபதேசம் உணர்த்தியவாறு, உபதேச முறை யாக அறிவித்த விதமென்ன, விரிதாரண - முப்பதென்னுந் தொகையாகிய விரியினைவாய்ந்த தூசிப்படைக்குப்பெரியாரே, விக்ரம வேள் - வலிமையையுடைய செவ்வேளென்னும் பெய

னை யுடையாரே, இமையோர் புரிதாரக - தேவர்கள் விரும்புகின்ற பிரணவப் பொருளானவரே, நாகபுரந்தரனே - தேவருலகைக் காக்குமவரே, எ - று.

உரிது குணியைக் குணமாகக் கூறுவதோர் மரபு வழுவமைதி. விரிதாரண விக்ரம வேளென்பதற்கு எல்லையில்லாமல் பரந்தபராக்கிரமத்தைப்பெற்றவேளென வுரைக்கினும் பொருந்தும். படைவகுப்பு ஆவது வியூகம், அது எழுவகை யுறுப்பிற்றாய் வகையா னான்காய் விரியான் முப்பதாம். உறுப்பு எழாவன, அரமுதற்றேட்டியீறாயின. வகை நான்காவன - தண்டம், மண்டலம், சங்கதம், போகமெனவிவை. விரிமுப்பதாவன - தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், சங்கதவிரியாறும், போகவிரியைந்து மெனவிவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமு மீண்டுரைப்பிற்பெருகும் - அவையெல்லாம் வடநூலுட் கண்டுகொள்க. இதனைத் "தார்தாங்கி" யென்னுங் குறட்குப் பரிமேலழகருரையானு முணர்க. உரிதாக வென்பது ஈறுதொகுத்தலாக நின்றது. வேளென்றது இங்குச் செவ்வேளை. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல். விரிதாரண வென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். (உ0)

கருதாமறவாநெறிகாணவெனக்
இருதாள்வனசந்தரவென்றிசைவாய்
வரதாமுருகாமயில்வாகனனே
விரதாசுரசூரவிபாடணனே.

(ப - ரை.) வரதா - தன்னை யடைபவருக்கு வரமருள்பவரே, முருகா - மாறாதவிளமையுடையாரே, மயில்வாகனனே - மயிலைவாகனமாக நடத்துதலுடையாரே, விரதா - அடியரைக்காக்கும் விரதமுடையாரே, அசுரசூரவிபாடணனே - அவுணர் குலத்துப் பிறந்த சூர்ப்பகையின் செல்வத்தை யழிப்பவரே, கருதாத-ஒருகாற்காணின் மீட்டுங்கருதற் கரிதாகிய, மறவாத - மறத்தற்கரிதாகிய, நெறி-முத்திநிலையை, காண - காணும்படி, எனக்கு இருதாள் வனசம்தர என்று இசைவாய்- அடியேனுக்குன்னிரண்டு பாததாமரைகளைப் பிரசாதிக்க வெக்காலம் திருவுளம் பற்றுவீர், எ - று.

விரதாசுர சூரவிபாடணனே - என்பதற்குப் பிறிதுரைப் பாருமுளர். கருதாமறவாவெனலை "உணர்ந்தார்க் குணர்வரியோன்" என்ற திருக்கோவையாருக்குப் பேராசிரியருரையானுமுணர்க. நெறி என்றது-"அறியும் பொருளன் றறியாப் பொருளன் றறிவாகிய நீயெனும்பொருடான், பொறியின் வழிநின்றறியும் பொருளோ போதக்கண் விழிக்கண் விழித் தறியும் பொருளென்பதனை என்க. தாள் - பண்பாகுபெயர். பிறவிப்பெருங்கட னீந்துவனென்றது உமிக்கருத்தேபற்றி. ()

காளைக்குமரேசனெனக்கருதித்
தாளைப்பணியத்தவமெய்தியவா
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்
வேளைச்சுரபூபதிமேருவையே.

(ப - ரை.) காளைக்குமரேசனென கருதி - காளைபோன்ற குமாரக்கடவுளென்று எண்ணி, தாளைப்பணிய - அவனது திருவடிகளை வணங்கும்படி, தவமெய்தியவாறு, தவமடைந்த விதமென்ன, பாளைக்குழல் வள்ளிபதம் பணியும் - பாளைபோலும் கூந்தலையுடைய வள்ளி நாச்சியாரது பாதம் பணியாநின்ற, வேளை - செவ்வேளென்னுந் திருப்பெயரையுடையாரை, சுரபூபதிமேருவை - தேவருலகத் திறைவராகிய இந்திரனுக்கு மேருமலை யொத்தவரை, எ - று.

காளை-உவமையாகுபெயர். வள்ளிபதம் பணிதல்-ஊடல் தணிதற்பொருட்டு என்க. இதனைக் கந்தபுராணத்தும்-"ஈறின்முதியோ னிரங்கியிரந்து குறை, கூறி மதிமயங்கிக் கும்பிட்டு நின்றளவில்" என்பதனானுமுணர்க. இக்கருத்தே பற்றி "ஆதிபகவன் றனதுடல் தணிப்பான் பணிய வவ்விறைவன், பாதமிறைஞ்சுமதற்கு" மெனப்பிறருங் கூறிய வாற்றானுமுணர்க. எய்தியவா என்பதற்குப் பேசியவா வென்றுங்கு விரித்தோர்ந்துணர்க. இங்ஙனங்கூறுது சொற்றவா, கேட்டவா என்பனபோல வினையாலணையும் பெயர் விகுதியாகிய "வா" விகுதிபெற்று வந்ததென்பாருமுளர். அற்றேல்-வினைமுற்று பெயர்த்தன்மை யெய்துழி வினையாலணையும் பெயராதல் மா

பாதலானும் இங்ஙனம்-வாவிகுதிபெற்றே வருமெனத் தொல்லாசிரியர் கூறிற்றிலராகலானுங் குற்றமாமென்க. "இதனைச் சொல்லிலனு கற்றவாகடவானிச்சுனைப்புனமே" என்புழிக்கற்றவா என்பதற்குப் பேராசிரியர் கூறியதனானுமறிக.

பிள்ளையாரது பாததாமரையைச் சரண்புகுதலுந் தவமுடையார்க்கே யாகலின் அடையத்தவ மெய்திய வாறென்னென்றார். ஆகலினன்றே-"தவமுந்தவ முடையார்க்காகும்" என வள்ளுவனாருங் கூறியதூஉமென்க. மேருமலை உலகைத்தாங்குதல் போன்றிந்திரனைத் தாங்கலின் - "சுரபூபதிமேருவை" யென்றார். இனித் தேவர்களையுந் தாங்கினானன்றோ வெனினிந்திரனவர்களுக்குத் தலைமைபற்றி யவன்மேலேற்றிக் கூறியதூஉமென்க. தான் உலகவாழ்வில் அமிழாமையவன்றானை அடைந்தது பெருந்தவமாதலின் தாளைப்பணியத் தவமெய்தியவா றென்றார். (உஉ)

அடியைக்குறியாதறியாமையினான்
முடியக்கெடவோமுறையோமுறையோ
வடிவிக்ரமவேன்மகிபாகுறமின்
கொடியைப்புணருங்குணபூதரனே.

(ப - ரை.) அடியைக்குறியாது-திருவடிகளைக்குறியாது, அறியாமையினால் - அஞ்ஞானத்தால், முடியக்கெடவோ-முற்றும் அழியவா, முறையோ முறையோ - இது நீதியாகுமோ நீதியாகுமோ அன்று, வடிவிக்ரம வேன்மகிபா - கூர்மையான வேற்படை யேந்திய தலைவனே, குறமின் கொடியைப் புணருங் குணபூதரனே-மின்னற்கொடிபோன்ற குறமாதை மணந்த குணமலையே, எ - று.

ஒகாரமிரண்டின் முன்னது வினா, பின்னது எதிர்மறைப்பொருட்டு. முறையென்ற அடுக்கு இரக்கப்பொருட்டு. மின்கொடி அன்மொழித்தொகை. குணபூதரம் உருவகம். மகிபா என்றது இங்கு சர்வலோக நாயகனென்னும் பொருட்டு.அறியாமை என்றது 'தானலாதொன்று தன்னைத்தானெனக் கருதிக்கொண்டே, யானெலாஞ் செய்தேனென்னும்

ஞானமஞ்ஞானம்' என்றதனாலறிக. அவிச்சை, அஞ்ஞானம், அறியாமை என்பன ஒருபொருட்கிளவி. அஃதொழிந்தாலல்லது சதோதயமாகிய வறிவு தோன்றாதாகலின் அறியாமையினூன் முடியக்கெடவோ என்றதென்க. (உரு)

கூர்வேல்விழிமங்கையர்கொங்கையிலே
சேர்வேனருள்சேரவுமெண்ணுமதோ
சூர்வேரொடுகுன்றுதொளைத்தநெடும்
போர்வேலபுரந்தரபூபதியே.

(ப - ரை.) கூர்வேல்விழி - கூர்மையான வேல்போலுங் கண்களையுடைய, மங்கையர்கொங்கையிலே சேர்வேன் - மடவாரது தனத்தின்கண் விரும்பி யடைகின்றயான், அருள் சேரவு மெண்ணுமதோ - நினது கருணையை யடையவுங் கருதுவேனோ, சூர்வேரொடு குன்றுதொளைத்த - சூர்ப்பகையை அவனதுகுலத்தோடு குன்றையும்பிளந்த, நெடும்போர் வேல- மிக்க போரைக் கடந்த வேற்படையை யுடையானே, புரந்தர பூபதியே - இந்திரலோகத்துக் கிறைவனே எ - று.

வேல்விழி - உவமத்தொகை. அருள்சேரவும் என்புழி உம்மை - உயர்வுசிறப்பு. வேர் - மாமரமெனச் சினையாகு பெயராகக்கொண்டு ஒடுவென்பது உடனிகழ்ச்சிப்பொருளை யுணர்த்தாது எண்ணுப் பொருளதென்பாருமுளர். வேர்-உவமையாகுபெயர். சூர்வோரொடு என்புழி - சூராகிய மாமரத்தோடென அவர்கூறியதை அதுவேரொடுகெட்டது என்புழி வேரென்பதற்கியாது பொருளென வினவிமறுக்க. ஒடு-உடனிகழ்ச்சிப் பொருளது. குன்றென்பது கிரௌஞ்சகிரியை; அது புள்ளியற் பொருப்பு, மென்றதனானு முணர்க. அழியா வென்றி யரத்தநெடுவேலோ யென்றாராகலின் நெடும்போர் வேலென்றார். எண்ணுமது என்புழிஉம் எதிர்காலவிடைநிலை. ஒகார மெதிர்மறை. (உச)

மெய்யேயெனவெவ்வினைவாழ்வையுகந்
தையோவடியேனலையத்தகுமோ
கையோவயிலோகழலோமுழுதுஞ்
செய்யோய்மயிலேறியசேவகனே.

(ப - ரை.) மெய்யேயென-உண்மையாகவே, வெம்வினை வாழ்வை யுகந்து - தீவினையினாலாகிய உலக வாழ்க்கையை விரும்பி, ஐயோ அடியேன் அலையத்தகுமோ அந்தோ அடியேன் வருந்தப்படுமோ, கையோ அயிலோ கழலோ - திருக்கரமும் வேற்படையும் திருவடியுமன்றி, முழுதுஞ் செய்யோய் - திருமேனி முழுவதுஞ் செக்கிற முடையானே, மயிலேறிய சேவகனே - மயிலைநடாத்தும் ஆண்மையுடையானே எ-று.

ஐயோ என்றது இரக்கக்குறிப்பு. உம்மை முற்று. கையோ அயிலோ கழலோ என்புழி ஓகாரம் பிரிநிலைப்பொருட்டு. அயில்பண்பாகுபெயர். செய்யோய் என்பது சேயெனப் பண்பாகுபெயராய்ப் பிள்ளையாரை யுணர்த்தியும் வரும். கைக்கமலம் - அவுணர்மேற் படைவிடலாற் செவத்தலும், காற்கமலந்தேவர்முதலியோர் இறைஞ்சுதோறு முடிகள்படலிற் செவத்தலும், வேற்படை யவர்பகைவருடலந்தோறுஞ் சேறலாற் குருதிதோய்தலிற் செவத்தலு மியல்பேனு மிவர்திருமேனி இறப்பநுண்ணிய தாகலி னடியவருள்ளந்தோறுஞ் செவத்தலின் முழுதுஞ் செய்யோ யென்றாரென்க. வேற்படை குருதியாற் செவத்தலை 'அரத்தநெடுவே' லெனப் பிறர் கூறியவாற்றானுமுணர்க. மயில் சூர்ப்பகையாய மாயாவியி னுருவமேனுமேனையோரால் வெலற்கரியோனாகலினவனையூரு மழியாவுரத்தை நோக்கி மயில் ஏறியசேவகனே யென்று விதந்ததென்க.

ஆ ாரமிலேனருளைப்பெறவே
நீதானொருசற்றுநினைந்திலையே
வேதாகமஞானவினோதமனா
தீதாசுரலோகசிகாமணியே.

ப - ரை. ஆதாரமிலேன் - ஆதரவென்பதில்லாதயான், அருளைப்பெற - உன்னுடைய கருணையை யடையும்படி, நீதான் - நீயே, ஒருசற்று நினைந்திலையே - ஒருசற்றும் எண்ணவில்லையே, வேதாகமஞான விநோத - வேதங்களும் ஈசுவரவாக்கியமான ஆகமங்களும் கூறுஞானத்தை விளக்குவதையே விளையாட்டாக உடையானே, மனாதீதா - மனத்துக்

கெட்டாதவனே, சுரலோக சிகாமணியே - தேவருலகத்தவர் முடியிற்புனையு மணிபோன்றவனே எ-று.

பெற - காரியப் பொருட்டாகிய செயவெனெச்சம். ஒருவென்றது சிறுமைகுறித்து நின்றது. ஒருசற்றுமென்புழி உம்மை முற்றுப் பொருளோடிழிவு சிறப்பு. வேதாகமம் என்பன இருக்கு-எசுர்-சாமம் - அதர்வணமென்பனவும்,ஈசுவரவாக்கியமான ஆகமுமாம். மனுதீதா - என்றதனுன் வாக்கென்பது வருவித்துரைக்கப்பட்டது. இக்கருத்தேபற்றி "வாக்குமனமணுகாத பூரணப்பொருள்" என்முர் பிறரும். மனேதீதா வெனவும் பாடம். (உசு)

மின்னேநிகர்வாழ்வைவிரும்பியயா
னென்னேவிதியின்பயனிங்கிதுவோ
பொன்னேமணியேபெருளேயருளே
மன்னேமயிலேறியவானவனே.

ப - ரை. மின்னே நிகர்வாழ்வை விரும்பியயான் என் - மின்னலையேபோன்ற உலகவாழ்வையான் விரும்பஎன்னபொருள், வினையின் பயனிங்கிதுவோ - எனக்கு வினையாலாகிய பிரயோசன மிவ்விடத்திலிதோ, பொன்னே - அடியவரெண்ணுந்தோறுமொளிவிடலாற் பொன்போன்றவனே, மணியே - இரவு பகலின்றி நின்று எனையசுடர் போலாதிலங்கலின் மாணிக்கமனையானே,பொருளே - அடியவர்தேடும்பொருளே, அருளே - கருணைவடிவே, மன்னே-இறைவனே, மயிலேறியவானவனே - மயிலைநடாத்துந்தெய்வமே எ-று.

மின்னே என்புழி ஏகாரந்தேற்றப்பொருட்டு. விரும்பிய என்பதுகாரணப் பொருட்டாகிய செயவெனெச்சத்திரிபு.என்னெனபதுவினைப்பெயர். இதுவழக்கில்அத்துச்சாரியைபெற்று வேற்றுமையுருபு ஏற்றும்வரும். வினையென்றதிங்கு தீவினையை. சுடச்சுடப் பொன்போன்ஞெளிரு மென்புழிப்போல இவனை நினைக்குந்தோறு மிகவொளிவிடலாற் பொன்னே என்றும், எனையசுடர்கள் ஒரோவொருகாலிலங்கல் போலாதிவ னிரவுபகலாகிய கேவல சகலமின்றிச் சதோதயமாயிலங்

கலின்மணியேயென்று மிம்மைக்குவேண்டுவெதியல்பாற் பொருளாதலாற் பொருளேயென்று மறுமைக் கியல்பாகவேண்டுவது அருளாதலானருளே யென்று மினைத்துணையனியாவனென்பார் மன்னேயென்று மவனெங்ஙனிருப்பா னென்பார் மயிலேறியவானவனே யென்றுங்கூறினர். மின்னல்தோன்றிச் சிறுவரையேனு நிற்றலின்மையினிவ்வுலக வாழ்வின் சிறுமைதோன்று மாறு அங்ஙனமுவமை கூறியதென்க. இனியென்னே எனவிழிவுபற்றி யஃறிணையாற் கூறினரெனவும், விரும்பிய என்றதற்கு விரும்பியிருக்குமெனவுங் கூறிச்சொற்குணம் வாளாபோயினர். (உஎ)

ஆனாவமுதேயயில்வேலரசே
ஞானாகரனேநவிலத்தகுமோ
யானாகியவென்னைவிழுங்கிவெறுந்
தானாய்நிலைநின்றதுதற்பரமே.

(ப - ரை.) ஆனாவமுதே - விட்டுநீங்குத லில்லாவமுதம் போல்வானே, அயில்வேலரசே - கூர்மையான வேற்படை யேந்திய விறைவனே, ஞானாகரனே - ஞானமாகியதிருமேனி யுடையானே, நவிலத்தகுமோ - உரைத்தற்பாலதாந் தன்மை யதோ, யானாகியவென்னை-தற்போத முடையனாகிய என்னை, விழுங்கி-தற்போதஞ் சீவியாதபடி செய்து, வெறுந்தானாய் - முழுதுந்தானாய், நிலைநின்றது தற்பரமே - நின்றதனக் கிறைமையாய நிலைமை எ-று.

ஆனாத என்ற தீறு தொகுத்தலாய் நின்றது. ஞானாகரம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வடநூன்முடிபு ஆதிபகவனென்றாற்போல. சத்தியநிர்வாணத்தாற் றற்போதத்தாக் கறுத்துவைத்து வழிகாட்டுமறைப் புலவனென்றாராகலின் இங்ஙனங் கூறினர் என்க. (உஅ)

இல்லையெனுமாயையிலிட்டனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே
மல்லேபுரிபன்னிருவாகுவிலென்
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே.

(ப - ரை.) இல்லேயெனுமாயையிலிட்டனை-இல்லாமையாகிய மாயையின்கண் வைத்தனை, நீ பொல்லே னறியாமை பொறுத்திலே-ஆதலால் நீகொடியேனதறியாமையைப் பொறுத்தருளினையில்லை (அதற்கென் செய்கேன்), மல்லேபுரிபன்னிருவாகுவிலும் - மற்போரையேவிரும்பும் பன்னிரண்டு புயங்களிலும், என்சோல்லே புனேயும் சுடர்வேலவனே - எனது புன்சொற்களால் வனேயப்பட்ட பாமாலேயைத்தரிக்கும் சுடர்விடுகின்ற வேற்படையை யுடையானே. எ-று.

யாது இல்லேயோ வது மாயையாதலின் இல்லேயெனுமாயை யென்ருர். இல்லாமாயையெனப் பிறர் கூறலுங்காண்க. மாயையை உள்பொருளெனக்கொண்டு திரிபதார்த்தத்தொன்றென்பாரு முளர். பொறுத்திலே யென்றதனுனதற்கென்செய்கே னென்பதிசையெச்சம். மல்லேபுரியென்பதற்கு வளப்பம் பொருந்திய தோளென்பாருமுளர். அற்றே லிவர் சூர்ப்பகையை வென்றதோளினதாற்றல் நன்கு விளக்காமையின் பொருந்தாதென்க. பன்னிருவாகுவிலென்புழி முற்றுமை விகாரத்தாற் ருெக்கது. சுடர்வேலவ னெனற்குப் பரிதியொளிமழுங்கும் வேற்படை யெனினுமமையும். என் சொலென்ற தவர்பாற் றமக்கெய்திய வன்பினியக்க முணர்த்துதற்கென்க. (உக)

செவ்வா னுருவிற்றிகழ்வேலவனன்
ருெவ்வாதசெதனவுணர்வித்ததுதான்
அவ்வாறறிவாரறிகின்றதலால்
எவ்வாருெருவர்க்கிசைவிப்பதுவே.

(ப - ரை.) செவ்வான் உருவின்-செவ்வானத்தினுருவத்தினும், திகழ்வேலவன் - விளங்குகின்ற வேற்படையையுடைய பிள்ளேயார், அன்று ஒவ்வாததென-அஞ்ஞான்று குருமூர்த்தமாயிருந் தறிவித்தாலன்றிப் பிறிதோராற்ருன் அறிவிப்பதன்றென, உணர்வித்தது - குருமூர்த்தமா யறிவித்த வனுபவ ஞானமாகிய, அவ்வாறு - அப்பயனே, அறிவார்-அனுபவஞானிகள், அறிகின்றதலால் - அறிகின்றதல்லது, எவ்

வாறு ஒருவர்க் கிசைவிப்பது - எவ்விதமாக ஒருவர்க்கறிவிப்பது, எ-று.

செவ்வானுருவின் என்புழிஇன் ஐந்தாவதன் உறழ்பொருளது; அன்றி எல்லப்பொருளுமாம். இனி செவ்வானைப் போலுமெனக் கொண்டொப்புப் பொருளென்பதுமொன்று. அன்று இருவினையொத்தலை, இது ஒருவகைக்குறிப்பு. இனி தீவிரதர முதலிய பக்குவங்க ளென்பாருமுளர். அகரமீண்டு யர்வைச்சுட்டிநின்றது. "அருபரத்தொருவ னவனியில் வந்து குருபரனாகியருளிய பெருமையைச் சிறுமையென்றிகழாதே" என்றாராகலினிவருமாசிரியன் கூறிப்போந்தவம் மெய்யுணர்ச்சியை யெவ்வாறொருவர்க் கிசைவிப்பது என்றார். (௩0)

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே
வீழ்வாயெனவென்னைவிதித்தனையே
தாழ்வானவைசெய்தனதாமுளவோ
வாழ்வாயினிநீமயில்வாகனனே.

(ப - ரை.) மயில்வாகனனே - மயிலைவாகனமாக நடாத்தும் பிள்ளையாரே, பாழ்வாழ் வெனுமிப்படு மாயையிலே - பாழாகிய இல்வாழ்க்கை யென்கின்ற சாதற்கேதுவாகிய இம் மாயையின்கண், வீழ்வாயென - விழக்கடவாயென்று, என்னை விதித்தனையே - அடியேனை யுலகிலுதிக்கச் செய்தனையே, தாழ்வானவை செய்தனவுளவோ - யாதேனுந் தாழ்வான காரியங்கள் யான் புரிந்தனவுளவோ, வாழ்வாயினி நீ - ஆகலின் யினி வாழக்கடவாய், எ-று.

படுதலீண்டழிதன் மேற்று. "மற்றைக்கண்டான் றொழிந்தால் வாழ்ந்துபோதீரே" என்றாருமுள ராகலினிவரும் வாழ்வாயினி நீ யென்றார். மாயையின்மயங்கி உலகவாழ்வை மெய்யெனக்கோடலின் 'பாழ்வாழ்வெனுமிப் படுமாயையிலே' என்றமைதன்க. (௩௧)

கலையேபதறிக்கதறித்தலையூ
டலையேபடுமாறதுவாய்விடவோ
கொலையேபுரிவேடர்குலப்பிடிதோய்
மலையேமலைகூறிடுவாகையனே.

(ப - ரை.) கொலையே புரிவேடர் குலப்பிடிதோய்-கொலைத்தொழிலைத் தங்குலத் தொழிலாகச் செய்யுங் குறவராது குலத்திலுதித்த பிடியானைபோன்ற வள்ளி நாய்ச்சியாருந் தோய்கின்ற, மலையே - மலைபோன்றவரே, மலைகூறிடுவாகையனே - கிரௌஞ்சகிரியைப் பிளந்த வெற்றிமாலையையுடைய பிள்ளையாரே, கலையேபதறி - மான் அச்சத்தாற்கலங்கியும், கதறி - துன்பத்தாலிரைந்தும், தலையூடலையே படுமாறது - தலையின்கணுள்ள கொம்புகளாற் சிக்கிவருந்துவது போன்று, வாய்விடவோ - யானின் சந்நிதியிற் கதறவோ எ-று.

வேடர்குலப்பிடியும் என்புழி இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது தெய்வ குஞ்சரியாகிய பிடியுந் தோய்வதன்றி யெனப்பொருள் கோடலின். பிடியானைகள் மலையைச்சேரல்மரபாதலின் பிள்ளையாரை மலையாகவும் தேவிமாரைப் பிடிகளாகவு முருவகஞ்செய்தனரென்க. வாகையென்றது வெற்றியின் பொருட்டணியும் பூமாலை. இதனை "இலைபுனைவாகைசூடி யிகன்மலைந்து" என்பதனானுமுணர்க. பதறிக் கதறி என்பனவினைச் செவ்வெண். (௩௨)

சிந்தாகுலவில்லொடுசெல்வமெனும்
விந்தாடவியென்றுவிடப்பெறுவேன்
மந்தாகினிதந்தவரோதயனே
கந்தாமுருகாகருணாகரனே.

(ப - ரை.) சிந்தாகுலவில்லொடு - துன்பத்திற் கிடமாகிய பெண்ணோடு, செல்வமெனும் விந்தாடவி - பொருளென்கின்ற வியப்பாகிய ஆசைக்காட்டை, என்றுவிடப்பெறுவேன்-என்ஞான்று நீங்கப்பெறுவேன்-மந்தாகினிதந்தவரோதயனே, கங்காதேவியார் அருளிய புத்திரனே, கந்தா-கந்தனே, முருகா - மாறாத இளமையுடையானே, கருணாகரனே-அருள்வடிவுடையானே, எ - று.

மண்ணாசை என்பது உபலக்கணத்தாற்பெற்றும். பெண்ணாசை பொருளாசை மண்ணாசை என்னு மூன்றுந் துன்பத்திற்கிடனாகலின் அவற்றைக்காடென் றுருவகஞ் செய்தும்

அவற்றைக் களைவது பிள்ளையா ரருள்பெற்ருகலின் என்று விடப்பெறுவேன் என்றும் கூறினுரென்க. விந்தை யென்ருர் சிருட்டி தொட்டுவந்த இக்காட்டைக்களைவதரிதாகலின். மந்தாகினி தந்தவரோதயனென்றது பிள்ளையாரது திருநாமத் தொன்ருகிய காங்கேயனென்பது கருதி என்க. (ருரு)

சிங்காரமடந்தையர்தீநெறிபோய்
மங்காமலெனக்குவரந்தருவாய்
சங்க்ராமசிகாவலசண்முகனே
கங்காநதிபாலக்ருபாகரனே.

(ப - ரை.) சிங்காரமடந்தையர் - அலங்காரம் பொருந்திய மடவாரது, தீநெறிபோய்-தீமையான மார்க்கஞ்சென்று, மங்காமல் - கெடாமல், எனக்கு வரந்தருவாய் - எனக்கு வரமுதவவேண்டும், சங்க்ராமசிகாவல-போர்புரிகின்ற மயிலைவாகனமாக நடாத்துபவரே, சண்முகனே - ஆறு திருமுகங்களையுடையாரே, கங்காநதிபால-கங்கையினது குமாரரே, க்ருபாகரனே - அருட்படிவ முடையாரே, எ - று.

தீநெறியென்றது - காமத்தை. முற்றத்துறந்த முனிவரையும் காமம் வருத்துதலின் மங்காமலென்ருர். குன்றேறி யொளிப்பினுங் காமஞ்சுடு மென்பதூஉ மிப்பெற்றி நோக்கி யென்க. வரமென்றதிங்கு அவனை யடைவதை. க்ருபாகரனென்ருர் தனக்கவர் குருவடிவமாக வெழுந்தருளியது நோக்கி, சூர்ப்பகை மயில்வடிவாகப் போர்புரிவான்வர அவனை வாகனமாக நடாத்தினமை கருதி சங்க்ராமசிகாவல என்ருர். (ருசு)

விதிகாணுமுடம்பைவிடாவினையேன்
கதிகாணமலர்க்கழலென்றருள்வாய்
மதிவாணுதல்வள்ளியையல்லதுபின்
துதியாவிரதாசுரபூபதியே.

(ப - ரை.) மதிவாணுதல்-அட்டமச்சந்திரன்போலும் ஒளியமைந்த நெற்றியையுடைய, வள்ளியையல்லது - வள்ளி

நாய்ச்சியாரை யன்றி, பின்றுதியாத விரதா-வேறு துதித்தலை யறியாத விரதமுடையானே, சுரபூபதியே - தேவலோகத்துக் கதிபதியே, விதிகாணும் உடம்பை-பிரமனாற் படைக்கப்பட்ட சரீரத்தை, விடாதவினையேன்-விடாதவினையையுடைய யான், கதிகாண - முத்திநிலையை யடைய, மலர்க்கழலென் றருள்வாய் - தாமரைமலர்போலுந் திருவடிகளை யென்றுதவுவாய், எ - று.

அமுத முடைமையின் மதியென்றார் - இதனையமுத கிரணனென வவனைக் கூறலானு முணர்க. மலர்க்கழலென்றருள்வாய் என்றார் இவர் திருவடி தீக்கை புரிந்தாலன்றியம் மீளாக்கதி கிடைத்தலரிதாகலின்; அல்லது குறிப்பு வினையெச்சம். வள்ளியையல்லது பின்றுதியாமை யென்பதற்குப் பலவிடங்களினுங் கூறினுமாகலின் விடுத்தாம். (௩௫)

நாதாகுமராநமவென்றரனார்
ஓதாயெனவோதியதெப்பொருடான்
வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப்
பாதாகுறமின்பதசேகரனே.

(ப - ரை.) நாதா-சர்வலோகங்களுக்குந்தலைவனே, குமராநமவென்று - குமாராய நமாவென்று தியானித்து, அரனார் ஓதாயென - சிவபிரான் குடிலையினுட்பொருளை உபதேசமாக அருளிச்செய்வாயென்றிரப்ப, ஓதியதெப்பொருள்-அவருக்கு அனுக்கிரகம் புரிந்தருளிய தெந்தப்பொருளோ, வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்பாதா - பிரமன் முதலான தேவர்கள் தங்கள் முடிமேற்சூடும் தாமரைமலர்போலுஞ் சீபாதங்களை யுடையானே, குறமின்பத சேகரனே-வேடர்குலத்திலுதித்த வள்ளி நாய்ச்சியாரது பாதங்களை முடியிற் சூடுவோனே, எ-று.

தான் - அசை. விண்ணோர்தம் முடிமேல் புனையும் பதும பாதங்களையுடைய பிள்ளையார் ஊடறணிதற்பொருட்டு குறமாதின்பாதம் முடிமேற் புனைதல் மரபன்றே யெனின் இவனங்ஙனங் கொள்ளானேல் இல்வாழ்க்கை நிகழாதாகலிற் காட்டியவாறென்க. "தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பல

வன்" என்பதில் "பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர் விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்றதூஉம் இக்கருத்தே பற்றியென்க. இதனை "மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" என்ற திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் விரித்தலானுமறிக. நாதாவெனப் பிள்ளையாரைச் சிவபிரான் கூறியது எற்றுக்கெனின் அங்ஙனங்கூறியது தானும் பிள்ளையாரும் உபதிட்டதப் பொருளெனவும்எஞ்ஞான்றும் மந்திர கர்த்தாக்களெனவும்வேதங்கூறியதாற் கூறினாரென்க.

இதனைக் காஞ்சிமான்மியத்துக் குமரகோட்டப் படலத்துள் "அக்கமலன் விளம்பியவா நம்மையு நம்புதல்வனையுமன்றேமான, மிக்கபுகழ்ச்சுருதியெலாம் பிரணவத்தின் பொருளாக விளம்புமாறே" என்பதனானறிக. இனிப் பிள்ளையாரைத் தம்மாற் சிறப்பிக்கவேண்டிக் கூறினாரெனினுமாம். குமராநமவென்றது - கௌமார சடாக்கர மந்திரமென்க. இதனை "ஆறெழுத்தடக்கிய வருமறைக் கேள்வி" யென்ற திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினிய ருரையானும், "ஆறெழுத்துங் கூறுநெறி" என்னுங் கல்லாட வுரையானும் 'குமராநமா' வென்றி கூறினாரோர்கால், எனப்பிறருங் கூறியதனானுமறிக. அரனாரென்பதிலார் விகுதிபெற்றமை "இயற்பெயர் முன்னாரைக்கிளவி" என்பதனான் முடிக்க. எப்பொருள் என்றார் வாக்குமனமணுகாத பூரணப்பொருளாதலின். இதனை 'முகத்திற் கண்கொண்டு" என்பதில் "மகட்குத்தாய் தன்மணாளனோடாடிய சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே" என்பதனானுமுணர்க. (௩௬)

கிரிவாய்விடுவிக்ரமவேலிறையோன்
பரிவாரமெனும்பதமேவலையே
புரிவாய்மனனேபொறையாமறிவால்
அரிவாயடியோடுமகந்தையையே.

(ப-ரை) கிரிவாய் விடுவிக்கிரமவேல்-மலைமேல் பிரயோகித்த போர்வலி மிகுந்த வேற்படையையுடைய, இறையோன் பரிவாரமெனும் பதமேவலையே-இறைவனாகிய பிள்ளையாரது

அடியார் கூட்டமாகிய பதத்தினை யடைவதையே, புரிவாய் - விரும்புவாய், மனனே - நெஞ்சமே, பொறையாமறிவால் - பொறுமை மிகுந்த மெய்ஞ்ஞானத்தால், அடியோடு மகந்தையை - வேரொடு மஞ்ஞானத்தை, அரிவாய் - நீக்குவாய், எ-று.

அகந்தை யென்றது அஞ்ஞானந்தகாரத்தை. கிரிவாயென்பதற்கு அஷ்டகுலாசல மெனினும் அன்றியுங் கிரௌஞ்சமலை யெனினுமமையும். அடியோடு மென்புழி அடிபண்பாகு பெயர். ஒடு மூன்றுவதன் உடனிகழ்ச்சிப்பொருளது. அதனொடு சார்ந்த உம்-சாரியை. அரிவாயென்பது அதன் நீக்கத்தை. இறையோன் பரிவாரமெனும்பதம் என்றது "உடையாயுன்றன்" என்பதில் "அடியார்நடுவிலிருக்குமருள்" எனவும் கூறியவாற்றானு முணர்க. வேளிமையோர் பரிவாரமெனும் பதமெனப்பாடங் கூறுவாருமுளர்; அற்றேல் இறைவன்பான் மெய்யன்பும் அவனடியவர்பாற் பத்திமையும் அன்றி இவரெட்டிணையும் பிறிதுவேண்டிலராகவி லங்ஙனங்கூறுதல் பொருந்தாதென்றொழிக.

ஆதாளியையொன்றறியேனையறத்
தீதாளியையாண்டதுசெய்யுமதோ
கூதாளகிராதகுலிக்கிறைவா
வேதாளகணம்புகழ்வேலவனே.

(ப - ரை.) ஆதாளியை - அறிவில்லாமையாலாளப்படுபவனும் - ஒன்றுஅற அறியேனை - ஒன்றையும் முற்றுமறியாதவனும், தீதாளியை-தீமையால் ஆளப்படுவேனுமாகிய என்னை, ஆண்டது செப்புமதோ-அடிமைகொண்ட முறைமை சொல்லும் பகுதியதோ அன்று, கூதாளகிராத குலிக்கிறைவா-கூதாளமலர்பூனையும் வேடர்குலத்தவராகிய வள்ளி நாய்ச்சியாருக்குத் தலைவரே, வேதாளகணம் புகழ்வேலவனே - வேதாளகணம்புகழும் வேற்படையையுடைய பிள்ளையாரே, எ - று.

தீது காமம் வெகுளி மயக்கமென்னு முக்குற்றங்களை. குலத்தி லுதித்தாளைக் குலியென்ற திங்கக் குலத்தில் வளர்ந்தமை கருதி. கூதாளங் குறிஞ்சிநிலக்கருப்பொருள். ஆத

மீறு தொகுத்தலாய் நின்றது. ஒன்று ஆகுபெயர். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. வேதாளகணம் புகழ்தலென்றமை இவர்க்குத் தூசிப்படையதுவே யாகலின். குலிக்கு என்புழி ஆறனுருபு நான்கனுருபா யுயர்திணையாகலிற்றிரிந்துநின்றது. இதனை "அதுவென்வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி னதுவெ னுபுருகெடக் குகரம்வருமே" என்றதனாற்கொள்க.()

மாவேழ்சனனங்கெடமாயைவிடா
மூவேடணையென்றுமுடிந்திடுமோ
கோவேகுறமின்கொடிதோள்புணருந்
தேவேசிவசங்கரதேசிகனே.

(ப - ரை.) மாவேழ் சனனமுங்கெட-பெரிதாகிய வெழுவகைப் பிறவிகளுங்கெடுமாறு, மாயைவிடாத மூவேடணையும் - மாயையை யிடைவிடாது தொடர்ந்துள்ள மூன்றீடணைகளும், என்று முடிந்திடுமோ - எக்காலநீங்குமோ அறியேன், கோவே - இறைவனே, குறமின் கொடி - வேடர் குலத்திலுதித்த மின்னற்கொடிபோன்ற வள்ளி நாய்ச்சியாரது, தோள் புணருந்தேவே - தோளையணையும் தெய்வமே, சிவசங்கரதேசிகனே - நன்மையை யுதவுஞ் சிவபிரானுக்கு ஞானசாரியனே, எ - று.

ஏழ்சனனமென்பன வானவர் மக்கள் விலங்குபுள் ளூர்வன நீர்வாழ்வன தாவர மென்பனவாம். ஈடணையென்றதெதுகை நோக்கித் திரிந்து நின்றது. ஈடணை-தானியம், தனம், புத்திரரென்பனவாம்; அது மாயையைவிடாது நிகழ்வதாகலின் மாயைவிடா மூவேடணை யெனவும் அவனருளாலல்லதஃதொழியாதாகலினென்று முடிந்திடுமோ எனவுங்கூறினார். அறியேன் என்பது குறிப்பெச்சம். (௩௧)

வினையோடவிடுங்கதிர்வேன்மறவேன்
மனையோடுதியங்கிமயங்கிடவோ
சுனையோடருவித்துறையோடுபசுந்
தினையோடிதணோடுதிரிந்தவனே.

(ப - ரை.) வினையோடவிடும்-இருவினையாகிய விருளைக் கெடுக்கும், கதிர்வேல்மறவேன் - சூரியனைப்போன்ற வேற்படையை மறவாதயான், மனையோடு தியங்கி மயங்கிடவோ - இல்வாழ்க்கையினால் வருந்திமயங்கவோ, சுனையோடு அருவித்துறையோடு பசுந்தினையோடு இதணோடு திரிந்தவனே-சுனையினிடத்தும் அருவியாற்றங் கரையினும் பசுமையான தினைப்புனத்தினிடத்தும் பரணினும் திரிந்த பிள்ளையாரே, எ - று.

வினையென்றது-நல்வினை தீவினையை. தீவினைபோன்று நல்வினையும் பிறவிக்கிடனுக்கலினன்றே வினையெனப்பொதுப்படக் கூறினார். வேலைக் கதிரென்றமையான் வினையையிருளென்னுமை ஏகதேசவுருவகம். வேன்மறவே னென்பதனைக் 'கண்டுண்ட சொல்லியர்' என்பதில் 'வேன்மறவே' னென்றிவ்வாசிரியர் கூறியவாற்றானு முணர்க. சுனைமுதலியவற்றிற்றிரிந்தமையைக் கந்தபுராணத்து வள்ளிநாயச்சியார் திருமணப்படலத்தாற் காண்க. தியங்கி மயங்கிடலோவெனவும் பாடங்கூறுவாருமுளர். (சுO)

சாகாதெனையேசரணங்களிலே
காகாநமனார்கலகஞ்செயுநாள்
வாகாமுருகாமயில்வாகனனே
யோகாசிவஞானொபதேசிகனே.

(ப - ரை.) நமனார் கலகஞ்செயுநாள்-கூற்றுவனார் வருத்துங்காலையில், சாகாது - இறவாவண்ணம், எனையே - அடியேனையே, சரணங்களிலே - பாதாரவிந்த நிழலிலே, காகா - வைத்துக் காப்பாய், வாகா-வெற்றியையுடையானே, முருகா-மாமுருத விளமையுடையானே, மயில்வாகனனே - மயிலைவாகனமாக வுடையானே, யோகா - அடியவரை யோகம் பயில்விப்பவனே, சிவஞானொபதேசிகனே - சிவபிரானுக்கு நான் மறையின் முடிவாகிய மகா வாக்கியார்த்தம் பகர்ந்த ஆசாரியனே எ - று.

ஞானோபதேசம் என்றது குறுகின்றது. காகா என்ற அடுக்குவிரைவுப் பொருட்டு. நமனார்கலகஞ் செயுநாளெனையே

காகா என்றமையை இவ்வாசிரியர் "மாகத்தை முட்டிவரு நெடுங்கூற்றன்" என்பதில் "தோகைப்புரவியிற் றோன்றிநிற் பாய்" எனக் கூறியதனானுமறிக. (சக)

குறியைக்குறியாதுகுறித்தறியும்
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலுஞ்
செறிவற்றுலகோடுரைசிந்தையுமற்
றறிவற்றறியாமையுமற்றதுவே.

(ப-ரை.) குறியை - மோனநிலையை, குறியாது குறித்த றியுநெறியை-சொல்லாமற் சொல்லு மந்நிலையினை, தனிவேலை நிகழ்த்திடலும் - ஒப்பற்ற வேற்படையையுடைய இறைவரா கிய பிள்ளையார் உபதேசித்தலான், உலகோடு செறிவற்று- உலகின்கண் செறிதலற்று, உரைசிந்தையு மற்று - வாக்கு மனமுமற்று, அறிவற்று அறியாமையு மற்றது - ஞானமற்று அஞ்ஞானமுமற்றது, எ - று.

குறியென்றது, ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருக னுருவங் கண்டென்பது. குறியாது குறித்தறியும் நெறியென் றது மகா மவுனநிலையை. அது "உரத்திற் சீர்கொள் கரதல மொன்று சேர்த்தி மோன முத்திரையைக்காட்டி" என்றத னாலுமுணர்க. உலகோடென்பது உருபுமயக்கம். இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். (சஉ)

தூசாமணியுந்துகிலும்புனைவாள்
நேசாமுருகாநினதன்பருளால்
ஆசாநிகளந்துகளாயினபின்
பேசாவநுபூதிபிறந்ததுவே.

(ப - ரை.) தூசாமணியும் - யானைகட்டுங் கயிறாகிய வணியையும், துகிலும்-ஆடையையும்-புனைவாள்நேசா - அணி பவராகிய வள்ளிநாய்ச்சியாருக்குஅன்பனே, முருகா - மாறாத விளமையுடையானே, நினது அன்பருளால் - உன்னுடைய அன்போடுகூடிய கருணையால், ஆசாநிகளம் - அவாவாகிய தளை, துகளாயினபின் - தூளானபின்பு, பேசாவநுபூதி பிற

ந்தது - வாய்பேசா நிர்விகற்ப சமாதியாகிய மகா மவுனநிலை தோன்றியது எ - று.

தூசு - யானைகட்டுங் கயிறு; அது வேடர்குலக் காதலியாகலால் வள்ளிநாய்ச்சியா ரவர்க்குரியவக் கயிற்றை யணியாகப் புனைவா ரென்பார் தூசாமணியு மென்றார். இனித்தூசாமணியுமெனக்கொண்டு வேறுவிரிப்பாரு முளர். அநுபூதி என்றது மகா மவுனநிலையான அனுபவ ஞானத்தை. இதனை சும்மாவிரு என்றதற்குக் கூறியவாற்றானுமுணர்க. (சங)

சாடுந்தனிவேன்முருகன்சரணஞ்
சூடும்படிதந்ததுசொல்லுமதோ
வீடுஞ்சுரர்மாமுடிவேதமும்வெங்
காடும்புனமுங்கமழுங்கழலே.

(ப-ரை.) சாடுந்தனிவேன் முருகன்-பகைவரைக் கெடுக்கும் ஒப்பற்ற வேற்படையையுடைய மாறாத விளமையுடைய பிள்ளையார், வீடும் - மோக்ஷநிலையினும், சுரர்மாமுடி - தேவர்களது பெரிய முடிகளினும், வேதமும் - நான்கு வேதங்களினும், வெம்காடும் - வெவ்விதாகிய காட்டிலும், புனமும் - தினைப்புனத்திலும், கமழும் - நடந்தருளின, கழலே - பாதங்களையே - சரணம் சூடும்படி - அபயந்தந்து தரிக்கும்படி, தந்தது-அனுக்கிரகித்தது, சொல்லுமதோ - யாராலுஞ் சொல்லத்தக்கதோவன்று எ-று.

வெம்மை என்பது விருப்பம் கொடுமை என்னும் பொருளன வேனும் வள்ளிநாய்ச்சியாரைக் களவாடல் செய்தற்கு வந்தாராகலின் அவர்க்கு விருப்பும் ஏனையோர்க் கெய்தலரிதாகலின் கொடுமையுங்கூறியவாறு. சுரர்மாமுடி யென்புழியும்மை விகாரத்தாற்றொக்கது. 'தாவடியோட்டுமயிலினுந் தேவர்தலையினும், என் றிவ்வாசிரியர் கூறலானுமறிக. வீடுஞ்சுரர்மாமுடி என்பதற்கு அழியுந்தேவர் பெரியமுடிக ளென்பாருமுளர். அஃதத்துணைச் சிறப்பின்றென் றொழிக. புனமென்புழியும் வெம்மையென்ற தியைக்க. (சச)

கரவாகியகல்வியுளார்கடைசென்
றிரவாவகைமெய்ப்பொருளீகுவையோ
குரவாகுமராகுலிசாயுதகுஞ்
சரவாசிவயோகதயாபரனே.

(ப-ரை.) கரவாகிய கல்வியுளார் கடைசென்று - ஒளித் தலையுடைய கல்வியையுடையார் தலைவாயிலிற்போந்து - இரவாதவகை - யாசியாதவிதம், மெய்ப்பொரு ளீகுவையோ - தத்துவார்த்தத்தை யுபதேசிப்பையோ, குரவா - ஞானசாரியனே, குமரா - மாறாதவிளமை யுடையானே, குலிசாயுத - வயிரப்படையுடையானே, குஞ்சரவா - யானை மேற்பவனி வருபவனே, சிவயோக - சிவயோகம் பிரசாதிப்பவனே, தயாபரனே - கிருபைக்கிடமானவனே எ-று.

மெய்யுணர்ச்சியாற் பெரியோனாகலிற் குரவாவென்றும், உருவிற்குறியோ னாகலிற் குமராவென்றும், தம்மையடுத்தவரது பாசநாசஞ்செய்தலிற் குலிசாயுதவென்றும், பிணிமுகமென்னும் யானைமேற் பவனிவருபவனாகலிற் குஞ்சரவாவென்றும், இங்ஙனம் பெருஞ்செல்வ முடையான்றருவது யாதெனிற் சிவயோகமென்பார் சிவயோகவென்றும், அவன் யாவர்மாட்டு மாறாவருளுடையா னென்பார் தயாபரனே என்றுங் கூறினார். குஞ்சரவா எனற்கு பிணிமுகமென்று பொருள் கூறினமையை "சேயுயர் பிணிமுகமூர்ந்த" எனப்பரிபாடலினும், "ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" எனத் திருமுருகாற்றுப்படையினும் 'பிணிமுக' மெனக் கல்லாடத்தும் கூறியவாற்றானு முணர்க. (௨௫)

எந்தாயுமெனக்கருடந்தையுநீ
சிந்தாகுலமானவைதீர்த்தெனையாள்
கந்தாகதிர்வேலவனையுமையாள்
மைந்தாகுமராமறைநாயகனே.

(ப - ரை.) எந்தாயும் - எம்முடைய தாயும், எனக்கு அருள் தந்தையுநீ - அடியேங்கட் கருளும் பிதாவும் நீயேயாகும், ஆகலின் சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள் - சிந்தை

யின் கண்ணுளதாகிய துயரத்தை நீக்கி எமையாளக்கடவாய், கந்தா-கந்தசுவாமியே, கதிர்வேலவனே-கிரணங்களையுடைய வேற்படையையுடையானே, உமையாள் மைந்தா-உமாதேவியார் திருக்குமாரனே, குமரா - குமாரசுவாமியே, மறைநாயகனே - வேதங்கட் கிறைவனே. எ - று.

சிந்தாகுலமானவை எனக்கொண்டு வருத்தமாகிய பெருங்குற்றமென்றுணர்க்கினு மமையும். கருணையுடைமை பற்றித் தாயை முன்னும் அறிவையூட்டலின் தந்தையைப் பின்னும் எல்லாந் தருபவனவனே யாகலின் நீயேயெனவும் அவனையல்லது பிறவிப்பிணி நீக்குவார் பிறரின்மையாற் சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள் எனவுங் கூறினர். (சக)

ஆறாறையுநீத்ததன்மேனிலையைப்
பேறாவடியேன்பெறுமாறுளதோ
சீறாவருசூர்சிதைவித்திமையோர்
கூறாவுலகங்குளிர்வித்தவனே.

(ப - ரை.) ஆறாறையு நீத்து-முப்பத்தாறு கருவிகளையு நீக்கி, அதன்மேனிலையை-அக்கருவிகட் கப்பாற் பட்ட மேலாகிய உண்மை நிலையை, பேறா-செல்வமாக, அடியேன் பெறுமாறு - யான்பெறும்விதம், உளதோ-உண்டோ, சீறாவருசூர் - சீறிவருகின்ற சூரபதுமனை, சிதைவித்து - வேற்படையாற் கொல்வித்து, இமையோர் கூறாவுலகம்-தேவர்கள் பங்காகிய சுவர்க்கலோகத்தை, குளிர்வித்தவனே - தணிப்பித்தவனே, எ - று.

ஆறாறு என்பது தொகைக்குறிப்பு. அது மூலப்பகுதி முதலியவாகக் கிடந்த முப்பத்தாறு கருவிகளை. அது தொகுதியொருமை. தத்துவாதீதமாகிய நிலையாகலின் அதன்மேனிலையென்றும் அதனின் மேம்பட்ட செல்வமின்றாகலின் பேறென்றும் அது ஈசுரபத்தி, பிரமஞானம், பாசவைராக்கிய முதலிய வெய்திய மேலோர்க்கன்றிக் கிட்டாதாதலின் அடியேன் பெறுமாறுளதோ என்றுங் கூறினர். ஆறாறு பண்புத்தொகை. பேறாக என்பது ஈறு தொகுத்தலாய் நின்றது. "சிதைவித்து" என்றார் யாவுந் தன்னேவன் மாத்திரையால்

வேற்படையேபொருது வேறலின். தாருகன் சிங்கமுகன் முதலிய தம்பிமாரும் பானுகோபன் முதலிய புத்திரவர்க்கமும் அநேகமாயிர மவுணப்படையும் போர்பொருது முடிய அதனுனே போர்முனையிற் கோபித்து வருபவனாகலின் சீறு வருசூரென்று மெத்துணையோரையுந் தன்கை வேற்படையே முடித்தலின் சிதைவித்தென்றும் தேவர்பதம் பலவாகலின் இமையோர் கூறு வுலகமென்றும் சூர்ப்பகையின் குமாரனாகிய பானுகோபனா லிந்திரனுலகந் தீக்குணவாகவதனைச் சூர்ப்பகையைத் தடிந்து மீட்டுமமரர் பெறச் செய்தலின் குளிர்வித்தவனே என்றுங் கூறியதென்க. (சஎ)

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

(ப-ரை.) செறிவொன்றறவந்து-உலகப்பற்று நீங்குமாறு வந்து, இருளே சிதைய - அதன் வாசனையாகிய அஞ்ஞானந்தகார மொழிய, வெறிவென்றவரோடுறும் வேலவனே - மயக்கமன்ற தவத்தினரை யடையும் வேற்படையை யுடையானே, அறிவொன்றற நின்று-சித்துப்போலி நான்கும் ஒழிந்து பேறிவோடுநின்று, அறிவாரறிவில்-அறிகின்றவாது மெய்யறிவின்கண், பிறிவொன்றறநின்ற-பிறிவறநின்ற, பிரானலையோ-நிலைபெற்ற பெரியோனீயன்றே ஆகலின் என்னைக் காத்தருள், எ - று.

ஆகலின் என்னைக் காத்தருளென்றது குறிப்பெச்சம். செறிவொன்றறவென்பதை "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு" மென்பதனானுமுணர்க. சிதையகாரியப்பொருட்டாகிய செயவெனெச்சம். (சஅ)

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் கிருபைச் சூழ்சுடரே.

(ப - ரை.) தன்னந்தனி நின்றது - ஏகசைதன்னியமாக நின்ற நிலைமையை, அறிய - அறியும்படி, இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ - பிரமன் அரன் பராசரபுத்திரா றுவர் அகத்தியனுதியோர்க்கன்றி யின்னமுமெம்போலிய வொருவருக்குரைக்கும் பான்மையதோ, மின்னும் கதிர்வேல்விகிர்தா - ஒளிவிடுகின்ற சூரியனைப்போலும் வேற்படையை யுடைய இறைவனே, நினைவார் கின்னங்களையுங் கிர்பை சூழ்சுடரே - தன்னை யுள்ளூன்றி நினைப்பார் துன்பந் தவிர்க்கின்ற கருணை நெருங்கிய சோதியே. எ - று.

தன்னந்தனியென்றது ஒருபொருட் பன்மொழி. இன்னம் ஒருவர்க்கென்பதற்கு அடியேனுக்குக் காட்டியவாறே ஏனையோர்க்கேனுங் காட்ட வியையுமோ எனப்பொருள் கூறுவாருமுளர். அது இவ்வாசிரியர்தம் பெருமிதமே கூறிக்கொண்டதாக முடிவதாகலின் பொருந்தாதென்க. தான்-அசை; ஆன்மாவென்பாருமுளர். (சக)

மதிகெட்டறவாடிமயங்கியறக்
கதிகெட்டவமேகெடவோகடவேன்
நதிபுத்திரஞானசுகாதிபவத்
திதிபுத்திரர்வீறடுசேவகனே.

(ப - ரை.) மதிகெட்டு - சிந்தை இழந்து, அறவாடி மயங்கி - மனமுற்றுஞ் சோர்ந்து மயங்கி, அறம்கதிகெட்டு-அறநெறிகெட்டு, அவமே-பயனில்லாமலே, கெடவோகடவேன் - அழியக்கடவேனே, நதிபுத்திர-கங்காபுத்திரனே, ஞானசுகாதிப - ஞானவின்பந்தருந் தலைவனே, அத்திதி புத்திரர் வீறு அடுசேவகனே - அத்திதி குமாரராகிய அரக்கருடைய அகங்காரங்கெடுத்த பராக்கிரமமுடையானே. எ - று.

ஞானசுக எனவும் அதிபவத்திதி புத்திரர் எனவும்கொண்டு ஞானவின்பமே எனவும் மிக்கபாதகம் புரிந்ததைத்தியரெனவும் பொருள் கூறுவாருமுளர். எல்லாம் வல்லபிள்ளையாரை யடைதலின் எவ்வகை வினையும் நீங்குமென்பார் அத்திதிபுத்திரர் வீறடு சேவகனே எனக் குறிப்பித்ததென்க. ()

உருவாயருவாயுளதாயிலதாய்
மருவாய்மலராய்மணியாயொளியாய்க்
கருவாயுயிராய்க்கதியாய்விதியாய்க்
குருவாய்வருவாயருள்வாய்குகனே.

(ப - ரை.) உருவாய் - பஞ்சபூத பௌதிகமாயும், அருவாய் - அவற்றின் காரணமாகிய மாயையாயும், உளதாய் - சத்தாயும், இலதாய் - அசத்தாயும், மருவாய் - மணமாகியும், மலராய் - மலராகியும், மணியாய் - மணியாகியும், ஒளியாய்-அதன்கண் ஒளியாகியும், கருவாய் - உடலாகியும், உயிராய் - ஆன்மாவாகியும், கதியாய்-மோக்ஷமாகியும், விதியாய்-அவற்றை நடத்தும் சங்கற்பமாகியும், (நின்றதல்லாமல்) குருவாய்-அவைகளை யறிவுறுத்து மருளிறையாகியும், வருவாய் - தோன்றுவாய், அருள்வாய் குகனே-யாவர்மாட்டு மருள்மேற்கொண்ட குகப்பிரானே. எ - று.

அருள்வாயெனற்கு வேறுரைப்பாருமுளர். எல்லாமா யல்லவுமா யிருந்ததாகலி னிங்ஙனங் கூறினர். உருவா யருவாய் என்றது பிரமன் முதலாகிய நவந்தரு பேதங்களெனக்கொண்டு உருவாயருவா யென்றமையான் உருவருவாய் எனல் கூறுதே யமைந்ததென்பாருமுளர். (௩௧)

காணாவிழியுங்கருதாமனமும்
வீணாய்விடமுன்விதியோவிதியோ
பூணாடிறமின்புனமும்வனமும்
நாணாதுநடந்திடும்நாயகனே.

(ப-ரை.) பூணாள்-ஆபரணங்களணிந்த வள்ளிநாயகியின், திறம் - இடத்துள்ள விருப்பத்தால், இன் - இனிமையாகிய, புனமும் - புனத்திலும், வனமும் - வனத்திலும், நாணாது - கூசாமல், நடந்திடும் - நடந்த, நாயகனே-இறைவனே, காணா-உன்னைக்காணாத, விழியும் - கண்களையும், கருதா - நினைக்காத, மனமும் - மனத்தையுமுடையனாய், வீணாய்விட - நான் வீணாகும்படி, முன்விதியோ விதியோ - முன்னையதாகிய வினையின் முறைமையோ, எ-று.

புனமும் வனமும்நாணுது நடந்திநொயகனே எனமேல் வருதலால் பூணுள்என்றது வள்ளிநாயகியைக் குறித்தது. புனம் - தினைப்புனம். வனம்-காடு. புனமும்வனமும் நாணுது நடந்திநொயகனே என்றமையால் இறைவரது சீர்பாதங்கள் அவற்றில் நடக்குந்தகுதியுடைய வன்மைபெறப்பட்டது. இன்ஞர்க்கு நாயகனென்னுமல் வாளாநாயக னென்றமையால் முக்கணுனையுள்ளிட்ட வெல்லார்க்கு நாயகனுதல் பெறுதும். முக்கணுனவற்குத் தந்தையாதலின் அங்ஙனங்கூறல் அசவ்கத மெனின், அன்று. என்னை அவற்கும், "சீயநம்போதி யென வாய்புதைத்துச் செவிதர" அவற்குக் குருவாயிருந்து ப்ரணவார்த்தத்தையுபதேசித்தமையான் என்க. காணுவிழியுங் கருதாமனமும் வீணுய்விடமுன் விதியோவிதியோவென்றது, இனியேனும் காணும் விழியுங் கருதும் மனமுங்கொண்டு யானின் திருவடிப்பேற்றினை யெய்துமாறருள்செய்க வென்ற படி. விதியோ விதியோவென்ற வடுக்குவிரைவின்மேற்று. பூணுள்குறமின் என்றும்பாடம். (கூ)

ஊணேபொருளாயுழலுற்றடியேன்
வீணேகெடமுன்விதியோவிதியோ
பூணேயிமையோர்புகழேமிகயான்
சேணேபெறவேல்விடுதேசிகனே.

(ப - ரை.) ஊணேபொருளாய் - ஊணினையே பொருளாகக்கருதி, உழலுற்று - உழன்று, அடியேன் - தொண்டனேன், வீணேகெட - வீணுகவேயழியும்படி, முன்விதியோ விதியோ - முன்னையவினைப்பயனே, இமையோர் பூணே - தேவர்களுக்காபரணமா யிருப்பவனே, புகழே - புகழுருவா யிருப்பவனே, மிக - மிகுதியாக, யான் - நான், சேணேபெற - உயர்ச்சியையே யடையுமாறு, வேல்விடுதேசிகனே - வேலே வுங்குருநாதனே, எ-று.

ஊண் - உணவு. உழலுற்று - ஒருசொல்லாய் உழன்று எனப்பொருள் பயந்துநின்றது. இதற்கு உழலுறு-பகுதி. விதி யோ விதியோ என்ற அடுக்கு இனியேனும் இவ்வாறு கெ

டாது உன் திருவடியே பொருளாகக் கருதி யுய்யுமாறு அருள் புரிக வென்றிரத்தலின்மேற்று. ஊண் - முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். ஊண்பொருளன்றோவெனின், நீர்மேலெ ழுத்துப்போன்று விரைந்தழியுமுடம்பிற்கே யன்றி, என்றும் பொன்றுமுத்திப்பெரும்பே றளிக்கவல்ல தன்றாதலான் அன் றென்க. சேண் - உயர்ச்சி. அது முத்திப்பேறெய்து முயர்ச்சி. அது யாவராலெய்தலாமெனின், இமையோர் பூணுகவும் புக ழாகவுமிருக்கிறவனும் யான் சேண்பெற வேல்விடுதேசிகனு மாய குகப்பெருமானே யென்றற்குப் பூணேயெனத் தொட ங்கி தேசிகனே யென்னுங்காறும் அவனைத் துதிப்பாராயினர். யான் சேண்பெற வேல்விடுதலெற்றுக்கெனின், இடையீடா யுள்ள மாயாமலங்களைச் சேதித்தற்கென்க. (௩௬)

கழுவாரயில்வேல்கருணைக்கடலின்
முழுகார்குறுகார்முளரிக்கைக்கொண்
டொழுகார்வினையூடுழல்வாரவரோ
வழுகார்தொழுநோயதிபாதகரே.

(ப - ரை.) கழுவுஆர் - கழுவப்பட்ட, அயில் - கூர்மை பொருந்திய, வேல் - வேற்படையையுடைய, கருணைக் கட லில் - கருணாசாகரத்தில், முழுகார் - மூழ்காதவர், குறுகார் - கிட்டவுமாட்டார், முளரிகைக்கொண்டு ஒழுகார் - ஓமவிறகைக் கைக்கொண்டு யாகாதிக்ருத்யங்களில் நடவார், வினையூடு உழல்வார் - வினைவழியே யுழலாநிற்பர், அவரோ - அவர்யா ரென்றாலோ, அழுகுஆர் - அழுகுதல்பொருந்திய, தொழு நோய் - தொழுநோயினுக்குரிய, அதிபாதகரே - மிக்கபாவ வுடம்புக்குரியரே யாவர், எ-று.

கழுவுதல்-சுத்திசெய்தல். கருணைக்கடல் என்றது முரு கக்கடவுளை. கருணைக்கடலின் முழுகார் என்றது அவனது நற்குணக்கடலில் படியாமையை. குறுகல் - கிட்டல். (அடுத் தல்) முளரி - ஓமவிறகு. முளரிகைக்கொண்டொழுகார் என் றது யாகாதிகாரியங்களில் தம்வாணாள் கழியார் என்றபடி. வினை - தீவினை. உழலல் - சுழலாநிற்றல். அழுகு - அழுகல்;

முதனிலைத் தொழிற்பெயர். தொழுநோய் - குட்டநோய். "துக்கத்தொழுநோய்"என்றார்பிறரும். கழுவாயில்வேற் கருணைக்கடலின் முழுகாமைமுதலிய தீச்செயலால் தொழுநோய் கொண்டுழல்வாரைக் கண்டிரங்கியும் அவரை அதிபாதகர் என்றிழித்துங் கூறியவாறு. ஈற்றேகாரம் இரங்கற் குறிப்பிடைச்சொல். பாதகர் - பாவிகள். அதி - மிகுதிப்பொருட்டாகியவோ ருபசர்க்கம். அதி, பாதகம் என்பன விரண்டும் வடசொற்கள். கருணைக்கடல் - இருபெயரொட்டு. கருணையாகிய கடல் என விரியும். (௰௪)

விண்ணார்பதமும்விரிநீர்புடைசூழ்
மண்ணார்பதமும்மகிழேன்மகிழேன்
தண்ணாரமுதேய்சயிலப்பகையின்
கண்ணாரமுதேய்கனியைப்பெறினே.

(ப - ரை.) தண்ஆர் - குளிர்ச்சிபொருந்திய, அமுதுஏய் - அமிர்தத்தை நிகர்த்த, சயிலப்பகையின் - மலைப்பகையாகிய இந்திரனது, கண்ஆர் - கண்போலும், அமுதுஏய் - அமிர்தத்தைக்கூடின, கனியைப்பெறின் - அன்பர்க்குக் கனிபோலும் இன்சுவைப் பொருளாயுள்ள குமாரவேளைப்பெற்றால், விண்ணார்பதமும் - விண்ணுலகத்தாரது பதவியையும், விரிநீர் - கடலானது, புடைசூழ் - பக்கத்திற்சூழப்பெற்ற, மண்ணார் பதமும் - மண்ணுலகத்தாரது பதவியையும், மகிழேன் மகிழேன் - விரும்பேன் விரும்பேன், எ-று.

தண்மையெனற்பாலது ஈறுகெட்டுத் தண்என நின்றது. அமுது-அம்ருதம் என்னும் வடசொற்றிரிபு. இதற்குப் பொருள் சாவாமைக்கேதுவாகிய மருந்து. ம்ருதம் - மரணம், அ - எதிர்மறையுபசர்க்கம். முன்னொருகாலத்தில் மலைகளைச் சிறகரிந்தவனாதலால் இந்திரனைச் சயிலப்பகைஎன்றார். பகை-பண்பாகுபெயர். மகிழேன் மகிழேனென்றஅடுக்கு வலியுறுத்தற்கண்வந்தது. விண்ஆர் எனப்பிரித்து சுவர்க்கலோகமாகிய அரிய எனப்பொருள் கூறலுமாம். விரிநீர் என்றது தன்னினும் விரிந்த நீரின்மையால் கடலையுணர்த்திற்று. "விண்

ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி'' என்னுந்திருக்குறளினும் விரிநீர் என்பது இப்பொருள்படமொறறிக. மண்ணோர் என்றது மக்கட்கூட்டத்திற் சிறந்து விளங்குவோராகிய அரசர், சக்ரவர்த்திகள் முதலாயினோரை. சயிலம் - சிலையானியன்றது. சிலை - கல். (ருரு)

உனையேயலதோர்பரமுண்டெனவே
நினையேனெனையூழ்வினைநீடுமதோ
கனையேழ்கடல்போல்வருகார்சமணர்
முனையேதெறுசண்முகவேலவனே.

(ப-ரை.) கனை - சத்திக்கிற, ஏழ்கடல்போல் - சப்த சமுத்திரம் போல, வரு-வருகிற, கார் - கரிய, சமணர் -சமணரது, முனை தெறு - போரைவென்றடக்கின, சண்முக - சண்முகனே, வேலவனே - வேற்படையை யுடையோனே, உன்னையே அலது - உன்னையேயன்றி, ஓர் பரம் உண்டு என - ஒருபர முண்டென்று, நினையேன் - நினைக்கமாட்டேன், (அங்ஙனமாக) என்னை - அடியேனை, ஊழ்வினை நீடுமதோ - ஊழ்வினை நெடிது நின்று வருத்துமோ, எ-று.

பரம் - மேலானபொருள். உனையேயலது என்றது உன்னையே பரம்பொருளாக நினைப்பதன்றி யென்றவாறு. நீடுதல்-நெடிதாய் வருத்தல். நீடுமதோ என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. கனைத்தல் - சத்தித்தல். கனைகடல் என வியையும். ஏழ்கடல் - எழுவகையாகிய கடல்கள். அவையாவன:— உவர்நீர்க்கடல், நன்னீர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல் என்பன. தெறுதல் - வெல்லுதல். சண்முகன் - ஆறு திருமுகங்களை யுடையவன். வேலவன் - வேற்படையை யுடையவன். படை-ஆயுதம். (ருசு)

இரவும்பகலுந்துதிசெய்திருதாள்
பரவும்பரிசேபரிசின்றருள்வாய்
கரவுண்டெழுசூர்களையக்கதிர்போல்
விரவுஞ்சுடர்வேல்விடுசேவகனே.

(ப - ரை.) கரவு உண்டு - வஞ்சகனாகி, எழு - போர்க்கெழுந்த, சூர் - சூரனை, களைய - நிர்மூலமாக்க, கதிர்போல் - செங்கதிர்போல, விரவும்சுடர் - ஒளிபொருந்திய, வேல்விடு - வேற்படையைவிட்ட, சேவகனே - வீரனே, இரவும்பகலும் - இரவினும் பகலினும், துதிசெய்து-தோத்திரஞ்செய்து, இருதாள்-உன்னிரு திருவடிகளையும், பரவும்-வழிபடுகிற, பரிசே - தொழிலே, பரிசு - பரிசிலாக, இன்று அருளாய் - இன்றே யருள்செய்யக்கடவை, எ - று.

இருதாள் பெருமைபொருந்திய தாள் எனினுமாம். தாட்குப்பெருமையாவது அடுத்தாரை முத்தியிலுய்த்தல். பரவல் - வழிபடல். பரிசில்-பஹுமாநம். சரீரம் அநித்யமாதலால் இன்றருள்வாய் என்றார். கரவுணல்-வஞ்சித்தல். சூர்-சூரன் என்பதனீறு தொகுத்தல். சூர் - அச்சமாதலால், யாவர்க்கும் அச்சத்தையுண்டாக்குவோன் என்றலு மொன்று. களைதல் - வேரறுத்தல். கதிர் - ஈண்டுச் செங்கதிரை யுணர்த்திற்றுச் சுடர் வேல் உபமேயமாய் வருதலால். செங்கதிர் - சூரியன். சேவகன்-சூரன். "கரவுண்டெழுசூர் களையக்கதிர்போல் விரவுஞ்சுடர் வேல்விடுசேவகனே" யென்றது முருகக்கடவுளை இச்செயனிகழ்ந்த தவனிடத்தே யாதலான். (௰௭)

இலகுந்துடிநேரிடையார்விழிகூ
ரலகம்பெனவேயறியாதழிகோ
கலகந்தருசூர்கதறப்பொருதே
மூலகம்புகழ்பெற்றிடுமோதயனே.

(ப-ரை.) கலகம் தரு - கலகத்தைச்செய்த, சூர் - சூரனவன், கதற - கதறும்படி, பொருது - அவனோடு போர்புரிந்து, எழ்உலகும் - எழுலகத்தாராலும், புகழ்பெற்றிடும் - புகழ்ச்சியைப்பெற்ற, ஓதயனே - உதயனே, இலகும் - விளங்குகிற, துடி நேர் இடையார் - உடுக்கை நிகர்த்த இடையையுடையவராகிய மாதரது, விழி - கண்கள், கூர் - கூரிய, அலகு - அலகினையுடைய, அம்பு எனவே அறியாது - அம்பென்றே யறியாமல், அழிகோ - அழியக்கடவேனோ. எ-று.

இலசல் - விளங்கல். அலகு - கூர்ப்புறம்: ".அஞ்சம்பை யுமையன்றன தலகம்பையு மளவா, நஞ்சங்களை வெலலாகிய நயநங்களை யுடையாள்" என்றார்மேலோரும். அறியாதழிகோ என்றமையால் அறியின் அழியேன் என்றதாயிற்று. கதறல் - கத்துதல். உதயன் - சூரியன்; அது ஓதயன் என்றாயிற்று. ()

மாதோமலமாயைமயக்கவருஞ்
சூதோவெனமெய்த்துணியாவெனையின்
றேதோவிருள்செய்துநிறைந்திடுவார்
தீதோடவருள்சிவதேசிகனே.

(ப-ரை.) சிவதேசிகனே-சிவகுருவே, மாதோ - பெண்ணே, மலமாயை மயக்க - மலமாயைகளால் மயக்க, வரும் - வருகிற, சூதோ - கபடரூபமோ, என - என்று யூகித்து, மெய் - உண்மையை, துணியா - நிச்சயித்தறியாத, என்னை - அடியேனை, இன்று-இப்பொழுது, ஏதோ—, இருள்செய்து - அஞ்ஞானத்தை யுண்டாக்கி, நிறைந்திடுவார் - நிறைந்திருப்பவராகிய வுலகத்தாரது, தீது - தீமையானது, ஓட - ஓடும்படி, அருள் - அருள்வாயாக எ-று.

மாதோ சூதோ வென்னு மோகாரங்களிரண்டும் ஐயப்பொருள. மலம்மாயை - மலரூபமாகியமாயை. மலம் - ஆணவமலம், மாயாமலம், கர்மமலம் என மூவகைப்படும். இவற்றின் விரிவெல்லாம் பெருநூல்களிற் காண்க. மெய் - இதுவோ வதுவோவென மயங்காது நிற்கும் உண்மை நிலை. துணிதல்- பிரமாணங்களால் நிச்சயித்தறிதல். அந்தகார ரூபமாயிருத்தலால் அஞ்ஞானத்தை இருள் என்றார். தீது - தீங்கு; அது உண்மை நிலை தெரியவொட்டாமல் மருட்டல். சிவபிரானுக்குப் பிரணவப்பொருள் பேசினமையால் சிவதேசிகன் என்றார். (ருக)

களவும்படிறுங்கதமும்படுமென்
னளவுங்கதிர்கொண்டருள்சேர்ந்திடுமோ
விளகுங்குறமின்னிருகொன்மூலையும்
புளகம்பரவப்புணர்வேலவனே.

228164

ஆவணகம்



(ப-ரை.) இளகும் - இளக்கமாகிய, குறமின் - வள்ளி நாயகியின், இரு - இரண்டாகிய, கொன் - பெரிய, முலை - முலைகளும், புளகம் பரவ - புளகமுண்டாக, புணர் - புணர்ந்த, வேலவனே - வேலனே, களவும் - கள்ளமும், பொய்மை - பொய்யும், கதமும் - கோபமும், பொருந்திய, என் அளவும் - என்மட்டும், அருள் - உன் திருவருள், கதிர்கொண்டு - ஒளிகொண்டு, சேர்ந்திடுமோ - சேருமோ. எ-று.

இளகுதல் - மெத்தெனல். குறப்பெண்ணாதலால் வள்ளி நாயகியைக் குறமின் என்றார். மின் - ஆகுபெயர். கொன் - பெருமை. புளகம் - பூரிப்பு. புணர்தல் - சேர்தல். என்னளவுங் கதிர்கொண்டருள் சேர்ந்திடுமோ என்றது தம்மிழிவு குறித்தற்கென்க. இவ்வாறு கூறலால். களவு முதலிய தீக்குணங்களில்லாத ஞானியரைச் சேருமென்றதாயிற்று. (௬0)

வாழைக்கனிமாமதுரச்சுளையே
ஏழைக்கரிதென்றிடுவாருளரோ
பாழைப்பயிர்செய்திடுசிற்பரையின்
பேழைப்பொருளாகியவேலவனே.

(ப-ரை.) பாழை - பாழ்நிலத்தை, பயிர் செய்திடு - பயிர் செய்கிற, சிற்பரையின் - சிற்பரையினது, பேழைப் பொருள் ஆகிய - பேழைப்பொருளா யிருக்கிற, வேலவனே - வேலனே, வாழைக்கனி - வாழைக்கனியையும், மாமதுரச்சுளை - மிக்க மதுரத்தையுடைய பலாக்கனியையும், ஏழைக்கு - ஏழையேனுக்கு, அரிது என்று - அரிதாமென்றிரங்கி, இடுவார் - அளிப்போர், உளரோ - இருக்கின்றார்களோ, எ-று.

சுளைமிக்கிருத்தல் பற்றிப் பலாக்கனியைச் சுளையென்றே கூறினர். இடுதல் - தருதல். பாழ்என்றது மூலப்பகுதியை. பயிர்செய்தல் - விளைவுண்டாக்கல்; அதாவது உலகங்களைத் தோன்றுவித்தல். சிற்பரை - ஞானவடிவினளாகிய பராசத்தி. சித்து - ஞானம். பரை - மேலானவள். பேழைப்பொருள் - பெட்டிப்பொருள். (௬௧)

Q26:67
No5

சதிகொண்டமடந்தையர்தம்மயலிற்
குதிகொண்டமனத்தனெனக்குறியேல்
மதிகொண்டநுதற்குறமங்கைகுயந்
துதிகொண்டுமணந்தருடூயவனே.

(ப-ரை.) மதிகொண்ட - பிறைபோன்ற, நுதல் - நெற்றியையுடைய, குறமங்கை - குறப்பெண்ணின், குயம் - குயத்தை, துதிகொண்டு - துதிசெய்து, மணந்தருள் - புணர்ந்தருளின, தூயவனே - பரிசுத்தனே, சதிகொண்ட - வஞ்சனையைக்கொண்ட, மடந்தையர் - மாதரது, மயலில் - மையலில், குதிகொண்ட - குதித்தலைக்கொண்ட, மனத்தன் என - மனத்தினன் என்று, குறியேல் - திருவுளம் பற்றாதை. எ-று.

மதி - நுதலுக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் மூற்பக்கத் தட்டமிப் பிறையைக் குறித்தது. குறப்பெண் - வள்ளிநாயகி. குயம் - குசம் என்னும் வடசொற்றிரிபு. (மூலை) துதிகொள்ளல் - துதித்தல். மணத்தல் - கூடுதல். ஞானவடிவனுதலால் "தூயவன்" என்றார். சதி-வஞ்சனை. மடந்தையர் என்றது பருவங்குறியாது மாதர் என்னுந் துணையாய் நின்றது. மயல் - மயக்கம். குதி - குதித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். குறித்தல் - நினைத்தல். (சு௨)

தாயேயெனையாடனிவேலரசே
காயேபொருளாய்க்கனிகைவிடுமோ
பேயேனிடையென்பெறவந்தெளிதாய்
நீயேமறவாநெறிதந்ததுவே.

(ப-ரை.) தனி - ஒப்பற்ற, வேல்அரசே - வேற்படையையுடைய அரசனே, தாயே-மாதாவே, என்னை-அடியேனை, ஆள் - ஆண்டருள்வாயாக, காயே-காயாயிருந்ததே, பொருளாய் - பெரும்பொருளாய், கனிகை விடுமோ - கனிதல் நீங்குமோ, நீயே - நீயாகவே, பேயேன் இடை - பேயனேனிடத்தில், எளிதாய்வந்து - எளிதிலெழுந்தருளி, மறவாநெறி தந்தது - உன்னை மறவாநெறி யளித்தது, என்பெற - என்ன பயன் பெறக் கருதியோ. எ-று.

தனிமை - ஒப்பின்மை. தாயே எனையாள் தனிவேலரசே என இரண்டு விளியாக்கிக் கோடலுமமையும். அரசு, தாய் ஆகுபெயர்கள். கனிகை - கனிதல் (பழுத்தல்). இடை - எழனுருபு. பிறவா நெறியெனப் பாடமோதிப் பிறவாமைக் கேதுவாகிய ஞானநெறியென்றுரை கூறுவாருமுளர். பெறத் தந்தது எனவியையும். (சுகூ)

சின்னஞ்சிறியேன்சிதைவேசெயினும்
பென்னம்பெரியோர்பிழைசெய்குவரோ
கன்னங்கரியோன்மருகாகழறத்
தன்னந்தனியேதனையாண்டவனே.

(ப-ரை.) கன்னங்கரியோன் - திருமாலுக்கு, மருகா - மருகனே, கழற-யாவரும் புகழும்படி, தன்னந்தனியே - தன்னந்தனியாகவே, தனை ஆண்டவனே - என்னை யாண்டருளினவனே, சின்னஞ் சிறியேன் - அடியேன், சிதைவே செயினும் - குற்றமே செய்யினும், பென்னம் பெரியோர் - மிகப் பெரியோர், பிழை செய்குவரோ - தீங்கு செய்வரோ. எ-று.

சின்னஞ்சிறியேன் என்றது மிகச்சிறியேன் எனறபடி. சிதைவு - அழிவு; இது அதற்குக் காரணமாகிய குற்றத்தைக் குறித்தது. பென்னம் பெருமை - மிகுபெருமை. சின்னஞ் சிறுமையும், கன்னங்கருமையும் அவ்வாறே மிகுசிறுமை மிகு கருமை யென்னும் பொருள் பயந்து நின்றன. தன்னந்தனி - மிகுதனிமை (இரகசியம்). தன்னையென்றது முன்னிலையில் வந்த வழுவமைதி. மருகன்-மருமகன். மருகாவென மேல்வருதலால் கன்னங்கரியோன்என்றது திருமாலுக்காயிற்று. (சு௪)

துடிபட்டமடந்தையர்சூறையிலே
குடிபட்டிடுமென்குறைகட்டறுமே
வெடிபட்டெழுசூர்கிளைவேரொடுசென்
றடிபட்டிடவென்றமரும்பதியே.

(ப-ரை.) வெடிபட்டு எழு - கிளைத்தெழுந்த, சூர் - சூரனது, கிளை - உறவினர், வேரொடு - வேருடனே, அடிபட்டிட - அடியற்றுப்போக, சென்று வென்று - போய்வென்று,

அமரும் - அமர்ந்த, பதியே - இறைவனே, துடிபட்ட - மேன்மைபொருந்திய, மடந்தையர் - மாதரது, சூறையிலே - சுழற்காற்றில், குடிபட்டிடும் - குடிகொண்டிருக்கிற, என்குறை - என்குறைகள், கட்டுஅறுமோ-கட்டற்றுப்போகுமோ, எ-று.

துடி - பெருமையுமாம். படுதல் - பொருந்தல். சூறை - கொள்ளை. (மிருதி) என்றலுமொன்று. குடிபட்டிடல் - குடிகொண்டிருத்தல். குறை - இழிவு; அதாவது பிறவித் துன்பம். வெடிபடல்-முளைத்தல். "சூர்கிளை வேரோடு சென்றடிபட்டிட வென்று" என்றமையால் அவன் அடிபடல் சொல்லாதே அமையும். இது: "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉம், உண்பதூஉ மின்றிக் கெடும்" என்ற மேலோர் திருவாக்கிணுலினிது விளங்கும். பதி - தலைவன். (சுடு)

கல்லேய்மனமுங்கணையேய்விழியும்
வில்லேய்நுதலும்பெறுமெல்லியர்வாய்ச்
சொல்லேபதமாய்த்துடிபட்டழிய
வல்லேனலனியான்மயில்வாகனனே.

(ப - ரை.) மயில்வாகநனே-மயிலாகிய வாகநத்தையுடையவனே, கல்எய்மனமும் - கல்லையொத்த மனத்தையும், கணை எய்விழியும் - அம்புபோலும் கண்களையும், வில்எய்நுதலும் - வில்லை யொத்த நெற்றியினையும், பெறும் - பெற்ற, மெல்லியர்-மாதரது, வாய்ச்சொல்லே - வாய்மொழியையே, பதமாய் - பொருளாகக்கொண்டு, துடிபட்டு- துடித்து, அழிய வல்லேன் யான் அலன் - நான் வல்லவனல்லன், எ - று.

எய்தல் - நிகர்த்தல். மென்மைத் தன்மையுடையாதல் பற்றி மாதரை மெல்லியர் என்றார். பதம் - பொருள். துடிபடல் - துடித்தல். மயில்வாகநனே யென்பதற்கு மயிலை வாகநமாகவுடையவனே யென்றுரைத்தலுமாம். (சுசு)

கலைகற்கினுமென்கவிபாடினுமென்
நிலைகற்கினுமென்நினைவந்துணராக்

கொலைகற்றிடுவோர்கொடுவஞ்சகமா
மலைகட்டறவென்றருள்வாய்குகனே.

(ப - ரை.) குகனே - குமரனே, கலைகற்கினும் என் - கலைகளைக் கற்றாலுமென்ன, கவிபாடினும் என் - கவிபாடினாலுமென்ன, நிலைகற்கினும் என்-நிலைகற்றாலுமென்ன, நின்னை வந்து உணரா - உன்னை வந்து அறிந்து வழிபடாத, கொலை கற்றிடுவோர் - கொலைத் தொழிலைக் கற்போராது, கொடுவஞ்சகம் ஆம் - கொடிய வஞ்சகமாகிய, மலை - மலையை, கட்டு அற - கட்டுக்குலைய, வென்று அருள்வாய் - வெற்றிகொண்டு எனக்கருள் செய்யக்கடவை, எ - று.

குகன் - குமரவேளின் திருநாமங்களுள் ஒன்று. கலை - நூல்கள். கவி - பாடல். நிலை-ஆசிரமம். உணராக்கொலை-உணராமையாகிய கொலை. வஞ்சகமாமலை கட்டறவென்றருள்வாய் என வேண்டற் காரணம் குகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்த செய்தி யுணர்ந்தமையாமென்க. மலைகட்டற என்று அருள் வாய் என்றும் பிரித்துரைக்கலாம். (சஎ)

சனகாதியருக்கரியாய்தமியை
யெனகாரணமாகவிரும்பினைநீ
கனகாசலவில்லிகளிக்கவரு
மனகாவமலாவமரார்பதியே.

(ப - ரை.) கனகம் அசலம்-பொன்மலையாகிய, வில்லி - வில்லை யுடையவனுகிய சிவபெருமான், களிக்க - மனமகிழ, வரும் - வந்த, அனகா - பாபரஹிதனே, அமலா - நிர்மலனே, அமரர்பதியே - தேவாதிபனே, சனகாதியருக்கு - சநகன் முதலியோர்க்கு, அரியாய் - அரியவனே, தமியை - ஒப்பற்றவனே, நீ என்னைகாரணமாக விரும்பினை - நீ யாதுகாரணமாயென்னை விரும்பினை, எ - று.

கனகம் - பொன். அசலம் - மலை. சநகாதியர் - சநகன், சநத்குமாரன், சநந்தனன், சஹ்யஜாதன் என்னும் நால்வர். தமியாய் என்றும் பாடம். தமியையாகிய நீயென்றியைத் துரைந்

தலுமாம். அகம் - பாபம். அநகம் - பாபரஹிதம். மலம் - அழுக்கு. அமலம் - அழுக்கின்மை. அமரர்-தேவர். (இறவாதவர்) மரர்-இறப்பவர். இவரை இறவாதவரென்றது மங்கலம். பதி - தலைவன். (சுஅ)

கல்லேனயலார்கவியைப்பொருளாய்ப்
புல்லேனவர்வாழ்வுபுரிந்தருள்வாய்
வல்லேயினிவந்தருளாயணியா
நில்லேனிறைநெஞ்சொடுவேலரசே.

(ப - ரை.) வேல்அரசே - வேற்படையையுடைய அரசனே, அயலார் கவியை - அயலாரது கவியை, கல்லேன் - கற்கமாட்டேன், அவர் வாழ்வு-அவரது வாழ்வினை, பொருளாய் - பொருளாக மதித்து, புல்லேன் - அவரைத்தழுவேன், புரிந்து அருள்வாய்-விரும்பியருள் செய்யக்கடவை, நிறைநெஞ்சொடு - நிறைமனத்துடனே, நில்லேன் - நிற்கமாட்டேன், இனி அணியா - இனி யழகாக, வல்லே வந்தருள்வாய் - விரைவில் வந்தருள் செய்யக்கடவை, எ - று.

அயலார் கவியென்றது இதர தெய்வங்களின் மேற்பாடப்பட்ட கவிகளை. புல்லல் - தழுவல். வாழ்வு-வாழ்க்கை. (செல்வம்). புரிதல் - விரும்புதல். அணி - அழகு. நிறை நெஞ்சு - குறைவற்ற மனம். (சுகூ)

மஞ்சைப்புரையார்மதிதோன்றுதலால்
பஞ்சைப்பயில்தேவரொடிம்பர்களி
னெஞ்சைப்பிரியாய்நிகழ்மாமதியின்
பிஞ்சைப்புனையும்பெருமான்மகனே.

(ப - ரை.) நிகழ் - விளங்குகிற, மாமதியின் பிஞ்சை - அழகிய சந்திரகண்டத்தை, புனையும் - தரித்த, பெருமான் மகனே - சிவபெருமானுக்குக் குமாரனே, மஞ்சை-மேகத்தை, புரை - நிகர்த்த, ஆர் - அரிய, மதி தோன்றுதலால் - அறிவுதித்தலால், பஞ்சைபயில் தேவரொடு-மெல்லிய தேவரோடு, இம்

பர்களில் - இவ்வுலகத்தாரது, நெஞ்சை-மனத்தை, பிரியாய் - பிரித்துவிடுவாயாக, எ - று.

நிகழ்தல் - விளங்குதல். மதி - சந்திரன். பிஞ்சு - இளையது. மதியின்பிஞ்சு - பிறைச்சந்திரன். மஞ்சு - மேகம். புரைதல் - நிகர்த்தல். இம்பர்கள் - இவ்வுலகத்தார். (எ0)

விதிவந்தனைசெய்விமலன்கழலே
கதியென்றடைவார்கடனவதுவே
பதிகண்பிணியோடழிநல்குரவும்
மதிசஞ்சலமும்மண்ணாய்விடுமே.

(ப - ரை.) விதி - பிரமன், வந்தனைசெய் - வந்தித்தலைச் செய்கிற, விமலன் - நிர்மலனது, கழலே - திருவடியையே, கதியென்று அடைவார் - அடைக்கலமென்றடைவாரது, கடன் ஆவது - கடன்மையாவது யாதெனின், பதிகண்பிணியோடு - பதிந்த கண்ணோயுடனே, அழி - அழிதற்குரிய, நல்குரவும் - வறுமையும், மதிசஞ்சலமும் - மனோசாஞ்சல்யமும், மண்ணாய் விடும் - மண்ணுண்டுபோய்விடும், எ - று.

விதி - பிரமன். வந்தனை-வந்தித்தல் (துதித்தல்). கழல்-திருவடி. கதி - அடைக்கலம். நல்குரவு - வறுமை. (தரித்திரம்) சஞ்சலம் - சலனம். மண்ணாய்விடும் என்றது சுவடற்றுப் போம் என்றபடி. (எக)

எந்நேரமும்நின்னிருதாண்மலரைப்
பொன்னேயெனயான்புனையப்பெறுமோ
அன்னேயமுதேயயில்வேலரசே
கொன்னேபிறவிக்குறைபெற்றிடினே.

(ப - ரை.) அன்னே-தாயே, அமுதே-அமிர்தமே, அயில்வேல் அரசே - கூரிய வேற்படையையுடைய அரசனே, கொன்னே - வீணாகவே, பிறவிக்குறை பெற்றிடின் - பிறவியாகிய இழிவைப்பெறின், எந்நேரமும் - எப்பொழுதும், நின்-உனது, இரு - இரண்டாகிய, தாள்மலரை-திருவடித்தாமரை மலரை.

பொன்னே யென-பொன்போலவே, யான்புனையப்பெறுமோ-நான் தரிக்கப்பெறுவேனோ, எ-று.

தாளுக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் மலர்-தாமரை மலரையே யுணர்த்திற்று. அயில்-கூர்மை. கொன்னே-பயனில்லாமலே. புனைதல்-சூடுதல். (எஉ)

அருளைத்தரும்நின்னடியைப்பணியா
மருளைச்சிதையார்மதிகெட்டவர்தம்
குருளைத்திசையிற்குருபோல்வினவும்
பொருளைத்தெளியப்புகறேசிகனே.

(ப-ரை.) குருளைத்திசையில்-இளமைப்பருவத்தில், குருபோல்-குருவைப்போல, வினவும் பொருளை-வினாவின பொருளை, தெளிய-தெளியும்படி, புகல்-சொன்ன, தேசிகனே-ஆசாரியனே, அருளைதரும்-அருளைக்கொடுக்கிற, நின்-உனது, அடியை-திருவடியை, பணியா-வணங்காமையாகிய, மருளை-மயக்கத்தை, மதிகெட்டவர்-அறிவுகெட்டவர், சிதையார்-கெடுக்கமாட்டார், எ-று.

குருளை-இளமைப்பருவம். வினவல்-கேட்டல். புகலல்-சொல்லல். சிதைத்தல்-கெடுத்தல். மதி-அறிவு; இது வடசொல். (எங)

தொண்டாகியநந்துயர்தீருமருந்
துண்டாகியுமென்றுலைவாய்மனனே
வண்டார்குழல்வள்ளிமணந்தருளும்
தண்டாயுதவேள்சரணந்துதியே.

(ப-ரை) தொண்டு ஆகிய-அடிமைகளாகிய, நம் துயர்-நமது துன்பம், தீரும்-தீர்தற்குரிய, மருந்து-ஔடதம், உண்டாகியும்-உண்டாயிருந்தும், என்-யாதுக்கு, உலைவாய்-கெடுகின்றனை, மனனே-நெஞ்சே, வண்டு ஆர்-வண்டுகள் நிறைந்த, குழல்-கூந்தலையுடைய, வள்ளி-வள்ளிநாயகியை, மணந்தருளும்-மணந்தருளின, தண்டு ஆயுதம்-தண்டாயுதத்

தையுடைய, வேள் - முருகவேளின், சரணம் - திருவடியை, துதி - துதிப்பாயாக, எ - று.

தொண்டு-ஆகுபெயர். மனத்தை யுளப்படுத்து நம் என்றார். உலைதல் - கெடுதல். தீர்தல் - ஒழிதல். ஆர் - மலர்த்தேனுண்ணுகிற எனினுமாம். ஆர்தல் - உண்ணுதல்; நிறைதலுமாம். தண்டு - தண்டம். தண்டாயுதம் என்பதனைத் தண்டு ஆதயும் தண்டம் ஆயுதம் என்றிருவகையாய்ப் பிரிக்கலாம். பொருள்வேறு பாடின்று. ஏ - அசை. (எச)

அழியாநிலைதந்தருள்சேவலனே
விழியாலுணர்வார்விதமேபுகல்வாய்
பழியார்புகழார்பழிநண்பிகழா
ரொழியாரொழியாருலகியாவையுமே.

(ப - ரை.) அழியாநிலை-அழியாத நிலையை, தந்தருள் - (அன்பருக்கு) தந்தருளுகிற, சேவலனே - சேவற்கொடியோனே, உணர்வார் - ஞானியரது, விதம்-உண்மைநிலையை, விழியால்-கண்ணருளாலேயே, புகல்வாய்-சொல்லுவோனே, (உன்னருள்பெற்ற ஞானியர்) உலகு யாவையும்-உலகமுழுதையும், பழியார் - நிந்தியார், புகழார் - புகழமாட்டார், பழிநண்பு இகழார் - பழிநண்புகளை யிகழமாட்டார், ஒழியார் ஒழியார் - நீங்கார் நீங்கார், எ - று.

அழியாநிலை-முத்திநிலை. விழியால் புகலல்-சக்ஷு தீக்ஷை செய்தல். ஒழியார் ஒழியார் என்ற வடுக்கு வற்புறுத்தற் பொருட்டு. ஏ - அசை. (எரு)

துனிநாளும்விடாதுதொடர்ந்தபல
வினிநானனுகாமையிபம்பினனல்
பனிநாண்மதிசூடிபணிந்துதொழுந்
தனிநாயகனாகியசண்முகனே.

(ப - ரை.) துனி - அச்சம், நாளும்-எந்நாளும், விடாது தொடர்ந்த பலன் - விடாமல் தொடர்ந்த தீவினைப்பயனை,

இனி நான் அணுகாமை - இனி நான் அடையாமையாகிய செ றியை, பனி - குளிர்ச்சிபொருந்திய, நாள் - புதிய, மதி - சந் திரனை, சூடி-சூடுவோனாகிய சிவபெருமான், பணிந்து துதி-வணங்கித் துதிக்கின்ற, தனி-ஒப்பற்ற, நாயகன் ஆகிய - தலை வனாகிய, சண்முகன் - முருகவேள், இயம்பினன்-சொல்லி னன், எ - று.

சண்முகன் இயம்பினன் எனவியையும். அணுகல்-அடை தல். இயம்புதல்-சொல்லுதல். சூடி-வினையாலணையும் பெயர். பணிந்து துதித்தது தனக்குப் பிரணவார்த்தத்தை யுபதேசி த்தகாலத்தில். (எசு)

ஞானந்தனைநின்றுநடத்தவிடா
மோனந்தனையென்றுமொழிந்திடுமோ
ஆனந்தநடத்தனளித்தருளும்
மானந்தனிவேல்மயில்வாகனனே.

(ப - ரை.) ஆனந்த நடத்தன் - ஆநந்தக்கூத்தனாகிய சிவ பெருமான், அளித்தருளும் - ஈன்றருளின, மானம்-பெருமை பொருந்திய, தனி - ஒப்பற்ற, வேல் - வேற்படையையுடைய, மயில்வாகனனே-மயிலாகிய வாகனத்தையுடையவனே, ஞானந் தனை - ஞானத்தை, நின்று நடத்த - நின்று நடத்துதற்கு, விடா - இடையறாத, மோனந்தனை - மௌனநிலையை, என்று மொழிந்திடுமோ - என்று சொல்லி யருளுவனோ, எ - று.

மோனமென்பது ஞானவரம்பாதலால், அதன்றும் பெ றல் கருதி ஞானந்தனை நின்று நடத்தவிடா மோனந்தனை யென்று மொழிந்திடுமோ, என்றார். ஓகாரம் - இரங்கற் கண் வந்தது. ஞானந்தனையென்பதில் தன்-சாரியை. மோனந்தனை யென்புழியுமது. ஆநந்தம். இன்பம். நடம் - கூத்து. அளித் தல் - பெறல். (எஎ)

மதமுஞ்சினமும்வளருந்தருவே
சதமென்றுணரும்சனனுக்கெளிதோ

கதமுந்தியருள்கனிவித்திடுவேல்
பதமுஞ்சுரமும்பதமேபெறவே.

(ப - ரை.) கதம்-கோவத்தை, உந்தி-கெடுத்து, அருள் கனிவித்திடு - அருளை முதிர்விக்கிற, வேல் - வேலனது, பதமும் - பாதத்தையும், சுரமும்-(அதை யடையும்) வழியையும், பதமேபெற - முறையே பெறுதற்கு, மதமும் - மதமும், சினமும் - கோவமும், வளரும் - வளராநின்ற, தருவே - மரத்தையே, சதம் என்று - நிலையென்று, உணரும் - கருதுகிற, சநனுக்கு - மனிதனுக்கு, எளிதோ - எளிதாமோ, எ - று.

மதமுஞ்சினமும் வளருந்தரு என்றது சரீரத்தை. மதம்-அகங்காரம். தரு - மரம். சதம் - உண்மை. சநன் - மனிதன். ஓகாரம் எதிர்மறை. கதம் - கோவம். உந்துதல் - தள்ளுதல். (கெடுத்தல்) கனிவித்தல் - பழுப்பித்தல். பதமிரண்டனுள் முன்னையது திருவடி, பின்னையது முறைமை. சுரம்-வழி. ()

அய்யாவுடலுண்மயமாறுளதால்
அய்யாறையுமீயறிவித்தருள்வாய்
செய்யாமுருகாதிகழ்வேலரசே
அய்யாகுமராவருளாகரனே.

(ப - ரை.) செய்யா - செய்யனே, முருகா - முருகனே, திகழ் - விளங்குகிற, வேல் - வேற்படையையுடைய, அரசே - அரசனே, அய்யா - ஐயனே, குமரா - குமரனே, அருள் ஆகரனே - அருளுக்குப் பிறப்பிடமாயுள்ளவனே, அய்யாவுடல் - சந்தேகமான வுடம்பு, உள்மயம் - உள்வடிவு, ஆறு உளது - ஆறுயுள்ளது, ஆல் - ஆதலால், அய்யாறையும் - முப்பதினையும், நீ அறிவித்தருள்வாய்-நீ யறிவித்தருளக் கடவை. எ-று.

செய்யன்-செவந்த திருமேனியையுடையவன். முருகன்-கட்டிளமையுடையவன். ஐயன் - இறைவன்; ஐ அழகாதலால் அழகன் எனினுமாம். ஐயாறு-முப்பது தத்துவம்; ஆறு-ஆறு தத்துவம்; ஆக முப்பத்தாறு தத்துவம். மேல், "ஆறுறையுநீத்து" என்றது மிக்கருத்தே பற்றி. ஆகரம்-பிறப்பிடம். ()

நவியென்றிடுகண்மடவார்நனிகேள்
செவியென்றயில்வேள்புகழ்சென்றிலதோ
கவியென்றவன்வார்கழல்பெற்றிலதோ
ரவியென்றவன்வாழ்புவியன்றியதே.

(ப - ரை.) நவிஎன்றிடு - மான் என்று சொல்லப்பட்ட, கண் - கண்களையுடைய, மடவார் - மாதரது, நனி - மேன்மையை, கேள் - கேட்கிற, செவி - நமது செவிகளில், என்று - சூரியனை நிகர்த்த, அயில்வேள் - கூரிய வேற்படையையுடையவனாகிய குமாரக்கடவுளது, புகழ் - கீர்த்தியானது, சென்றிலதோ - நுழைந்திலதோ, கவியென்று - சுக்கிரனென்று, அவன் - அவனது, வார் - நீண்ட, கழல் - திருவடிகளில், பெற்றிலதோ - அடைந்திலதோ, ரவியென்றவன் வாழ்புவி - ரவியென்று சொல்லப்படுவோர் வாழ்கின்ற மண்டலத்தை, அன்றியதே - பொருந்திற்றே, எ - று.

நவ்வி - மான். அது நவியென விகாரமாயிற்று. கேள் செவி - வினைத்தொகை நிலைத்தொடர். கவி - சுக்ரன். இவனொரு காலத்தில் அவனைப் பூசித்துய்ந்ததுபற்றி கவியென்றவன் வார்கழல் பெற்றிலதோ, என்றார். என்று - சூரியன்; ரவியுமது. அன்றுதல் - பொருந்துதல். (அ)

பெரியோரெனினும்புலையோரெனினும்
சிறியோரெனினுந்தெளிவோரவரே
குறியோரெனினுங்குருவாவருவா
னெறியோடொழுகும்நிலைபெற்றிடினே.

(ப - ரை.) குறியோர் எனினும் - சிறியவராயினும், குருஆவருவான் - குருவாய் வரும்பொருட்டு, நெறியோடு ஒழுகும் - நெறியோடு ஒழுகுதற்குரிய, நிலைபெற்றிடின் - நிலையைப்பெற்றால், பெரியோர் எனினும் - பெரியோராயினும், புலையோர் எனினும் - புலையோராயினும், சிறியோர் எனினும் - சிறியவராயினும், தெளிவோர் - தெளிவுடையோர், அவரே - அவரேயாவர், எ - று.

புலையர் - நீசர். குறியோர்-சிறியோர். வான் - எதிர்கால வினையெச்சவிகுதி. நெறி - நன்னெறி. சிறியவராயினும் நன்னெறியி லொழுகின் அவர் குருக்களாதற் குரியரென்பது கருத்து. (௪௧)

பத்திக்கயலேனனிநின்பதமுஞ்
சித்திக்கயலாமெனல்திண்ணமதே
புத்திக்கடலேபொருவேலரசே
முத்திக்கனியேமுனிபுங்கவனே.

(ப-ரை.) புத்திக்கடலே - ஞானசாகரமே, பொரு - போர்செய்தற்குரிய, வேல் - வேற்படையையுடைய, அரசே - அரசனே, முத்திக்கனியே - மோக்ஷபலமே, முனிபுங்கவனே - முனிசிரேஷ்டனே, பத்திக்கு அயலேன் - நின்பக்திக்கு அயலானேன், நனி - மிகுதியாக, நின்பதமும் - உன் திருவடியும், சித்திக்கு - எனக்குச் சித்திப்பதற்கு, அயல் ஆம் எனல் - வேறாமெனல், திண்ணமே - நிச்சயமே, எ - று.

புத்தி - ஞானம். பொருதல் - போர்செய்தல். அரசு - ஆகுபெயர். புங்கவன் - சிரேஷ்டன். முனி - மநநசீலன். பத்தி - பக்தியென்னும் வடசொற்றிரிபு. அயல்-புறம். சித்தி-பலித்தல். (௪௨)

பேயாகிலும்நன்றதினும்பிறிதென்
றேயாதெனைவந்தடிமைத்தொழில்கொண்
டோயாதெனைநீயொழியத்தகுமோ
வாயாரமுதேமயில்வாகனனே.

(ப-ரை.) வாய் ஆர் அமுதே - வாயினா லுண்ணப்படும் அமிர்தமே, மயில்வாகனனே - மயிலாகிய வாகனத்தையுடையவனே, பேய் ஆகிலும் - பேயானாலும், நன்று - நல்லதாகும், அதினும் - அதைக்காட்டிலும், பிறிது என்று - வேறென்று, ஏயாது - மனங்கொள்ளாமல், என்னை - அடியேனை, வந்து அடிமைத்தொழில் கொண்டு - வந்து அடிமைத் தொழில் கொண்டு, நீ - நீ, ஓயாது - இடையறாமல், என்னை ஒழியத் தகுமோ - என்னை நீங்கத்தகுமோ, எ - று.

வந்து - வலியவந்து. அடிமைத்தொழில்கொண்டு - தடுத்தாட் கொண்டு. (௪௩)

மிகவுங்கொடியேன்விதிகுன் றிடவந்
திகமும்பரமும்பெறவின்றிசைவாய்
சுகமுங்ககமுந்தொடர்வேல்கொடுமுச்
சகமுந்தனிகாத்தருள்சண்முகனே.

(ப - ரை.) சுகமும் - கிளிகளும், ககமும் - ஏனையபறவைகளும், தொடர் - தொடர்தற்குரிய, வேல்கொடு - வேற்படையைக்கொண்டு, முச்சகமும் - மூவுலகத்தையும், தனி - ஒப்பற, காத்து அருள் - காத்தருள்கின்ற, சண்முகனே-ஆறு திருமுகங்களையுடைய கடவுளே, மிகவும் கொடியேன் - மிகவுங் கொடியனேனது, விதி - ஊழானது, குன்றிட - கெடும்படி, வந்து - நீ யெழுந்தருளி, இகமும் பரமும் - இம்மையின்பத்தையும் மறுமை யின்பத்தையும், பெற - அடியேன் பெறுமாறு, இன்று இசைவாய் - இன்று நீ திருவுள மிசையக் கடவை, எ - று.

மிகவும் கொடுமை செய்தவனாதலால் அதன் பயனாகிய ஊழ்வந்து மிகுதியும் வருத்தும்; ஆதலால், அதனைக் கெடுத்து இகபர சௌக்யங்களை யெனக் கருள்புரிய வேண்டு மென்பார் மிகவுங் கொடியேன் விதிகுன்றிட வந்திகமும் பரமும் பெறவின்றிசைவாய் என்றார். ககம் - பறவை; இதுவடசொல், இதற்கு ஆகாயத்திற் சஞ்சரிப்பது என்பது பொருள். பறவைகள் வேற்படையைத் தொடர்தற் காரணம் பகைவரைக் கொன்று அவரது தசையை விருந்து செய்தல். மூன்றுலகத்தாரையுந் தனி காத்தருளுதற்கும் இவ்வேலே சிறந்த கருவியென்பது தோன்ற, வேல்கொடு முச்சகமும் தனிகாத்தருள் சண்முகனே, என்றார். இகம்பரம் - இம்மை மறுமை; இவையிரண்டும் தம்மாட்டுள்ள இன்பங்களை யுணர்த்தினமையால் இடவாகுபெயர்கள். யாக்கை நிலையாமை கருதி இன்றிசைவாய் என்றார். (௪௪)

நசையன்பிலர்பானயவாதொழியின்
வசையுண்டெனுமவ்வழிநின்றருள்வாய்
விசையம்பெறுசூர்வெருவப்பொருதெண்
டிசையும்புகழத்திகழ்வேலவனே.

(ப-ரை.) விசயம் பெறு - வெற்றிபெற்ற, சூர் - சூரன், வெருவ - அஞ்சும்படி, பொருது - போர்செய்து, எண் திசையும் - எட்டுத்திக்கும், புகழ - புகழும் வண்ணம், திகழ் - விளங்குகிற, வேலவனே - வேற்படையையுடையவனே, நசை அன்பு இலர்பால் - ஆசையும் அன்பும் இல்லாதவரிடத்து, நயவாது ஒழியின் - விருப்பஞ் செய்யாதொழியின், வசை உண்டு என்னும் - நிந்தையுண்டென்கிற, அவ்வழி நின்று - அவ்வழியைக் கடைப்பிடித்து நின்று, அருள்வாய் - அருள்செய்யக் கடவை, எ - று.

ஆசை - அவா. அன்பு - பத்தி. நயத்தல் - விரும்புதல். விசயம் - மிகுவெற்றி. வெருவல் - அஞ்சல். பொருதல்-போர் செய்தல். நீ யெல்லாவுயிர்களையும் ஒப்ப நோக்கும் பொருள் கோடிநசையன்புளர் பால்விருப்பும் அவையிலர்பால்வெறுப்புங் கோடியேல் உன்பெருமை குன்றும்; அது கருதியெனக்கருள் செய்தல் உனக்குத் தகுதியாமென்பது தோன்ற: "நசையன்பிலர் பானயவாதொழியின் வசையுண்டெனுமவ்வழிநின்றருள்வாய்" என்றார். (அ௫)

உறுகற்பகமென்றுனையேயடைவே
னிறுகற்பகைவற்கிதமோதுவனே
தெறுகற்சிலைகொண்டெயில்செற்றிடுபூண்
டுறுகட்பணியன்றருபுத்திரனே.

(ப-ரை.) தெறு - (பகைவரைக்) கொல்லுகிற, கல்சிலை கொண்டு - மலையாகிய வில்லைக்கொண்டு, எயில்-மூன்றெயில்களை, செற்று - அழித்து, இடு - தரிக்கிற, பூண் - ஆபரமாகக் கொண்ட, தறுகண் - அஞ்சாமையையுடைய, பணியன்-பாம்பையுடையவனாகிய சிவபெருமான், தரு-பெற்ற, புத்திரனே

புதல்வனே, உறு - பொருந்திய, கற்பகம் என்று - கற்பகத் தருவென்று, உன்னையே அடைவேன்-உன்னையே சார்வேன், இறு - இறுகின்ற, கல்பகைவற்கு - இந்திரனுக்கு, இதம் ஒது வனே - இன்சொற் சொல்லுவேனே, எ - று.

கற்பகம் - சுவர்க்கலோகத்திலுள்ள பஞ்சதருக்களிலொன்று ; இது வேண்டுவயாவுந் தருவது. இறுதல் - அழிதல். முன்னொரு காலத்தில் மலைகளைச் சிறகரிந்தவனாதலால் இந்திரனை: "கற்பகைவன்" என்றார். கல்-மலை. இதம்-இன்சொல். கற்சிலையென்றது பொன்வில்லை. பொன்வில்என்றது பொன் மலையாகிய வில் என்றபடி. எயில் - மதில். இது மும்மதில் களை யுணர்த்திற்று. மும்மதில்களாவன:—இரும்பு, வெள்ளி, பொன் என்பவற்றானியன்றமூன்று ஜங்கமபட்டணங்கள். ஜங்கமம்-சஞ்சாரம். இவற்றையே முப்புரம் என்பர். இது: "இரும்புருமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசை யன்றோர், துரும்புறச்செற்றகொற் றத்தெம்பிரான்றில்லைச் சூழ் பொழிற்கே" என்னு மணிவாசகர் திருவாக்கான் இனிதுவிளங்கும். செறல்-அழித்தல். பணி - பாம்பு.

(அரு)

கள்ளம்படுகட்கடையார்கடைதே
ருள்ளம்படலென்றகலக்களைவாய்
பள்ளம்படுநீரெனவேபரிவின்
வெள்ளம்படுநல்வழிவேலவனே.

(ப - ரை.) பள்ளம்படு - பள்ளத்திற் சென்று பாய்கின்ற, நீர் எனவே - நீர்போலவே, பரிவின் - அன்பாகிய, வெள்ளம் படு - பெருக்கிலகப்படுகிற, நல்வழி-நல்வழியையுடைய, வேலவனே - வேலனே, கள்ளம்படு-கள்ளம்பொருந்திய, கண்கடையார்கடை - கடைக்கண்களை யுடையவராகிய மாதரிடத்தே, தேர் - தெளிந்த, உள்ளம்-மனமானது, படல் - அணுகுதலை, என்று-எந்நாள், அகலகளைவாய்-நீங்கக்களைந்தருள்வை, எ-று.

கள்ளம் - கபடம். படுதல் - பொருந்துதல். கடைக்கண் என்பது கட்கடையென மருவிற்று. படல்-அணுகுதல். களை

தல் - அறவொழித்தல். பரிவு - அன்பு. இன் அல்வழிச்சாரியை. நல்வழி - நன்னெறி; அதாவது அன்பரது பத்தியாகிய வெள்ளத்திற் சிக்குதல். (அஎ)

வள்ளைக்குழைமங்கையர்சிங்கியிலே
கொள்ளைப்படுமென்குறைதீருமதோ
வெள்ளைத்தனிமால்விடையன்புகழும்
பிள்ளைப்பெருமாளெனும்பெற்றியனே.

(ப - ரை.) தனி - ஒப்பற்ற, மால் - பெரிய, வெள்ளை விடையன் - வெள்விடையோனாகிய சிவபெருமான், புகழும் - புகழ்கின்ற, பிள்ளைப்பெருமாள் என்னும்-பிள்ளைப்பெருமாள் என்று சொல்லப்படுகிற, பெற்றியனே - தன்மையையுடையவனே, வள்ளை - வள்ளைபோலும், குழை - காதினையுடைய, மங்கையர் - மாதரது, சிங்கியிலே-நஞ்சிலே சிக்கி, கொள்ளைப்படும் - கொள்ளைப்படுகிற, என்குறை-என்குறையானது, தீருமதோ - ஒழியுமோ, எ - று.

வள்ளை - வள்ளைத்தண்டு. இது: "உள்ளுங்குறும்பியொழுகுங்காதை, வள்ளைத்தண்டின் வளமென வாழ்த்தியும்" என்ற திருவெண்காட்டடிகள் திருவாய்மலர்ந் திருத்தலான் இனிது விளங்கும். வள்ளையிலையென்பாருமுளர். மங்கையர் என்றது பருவங் குறியாது மாதரென்னுந் துணையாய் நின்றது. சிங்கி-நஞ்சு. "சிங்கிகுளிர்ந்துங் கொலும்" என்றார் பிறரும். கொள்ளைப்படுதல் - சூறையாடப்படுதல். வெள்ளைவிடையன் எனவியையும். விடை - இடபம். (அஅ)

வளையுஞ்சகமாயைமயக்கில்விழுந்
துளையுந்துயரின்னுமுணர்ந்திலையே
வளைகொண்டபிரான்மருகாவிடுசூர்
களையுஞ்சினவெங்கதிர்வேலவனே.

(ப-ரை.) வளைகொண்டபிரான்-சங்கத்தையுடைய பெருமானாகிய திருமாலுக்கு, மருகா-மருகனே,விடு-ஏவப்பட்ட, சூர் களையும் - சூரனைவேரறுத்த, சினவெம்கதிர்-கோவமும் கொடு

மையும் ஒளியுமுள்ள, வேலவனே-வேற்படையையுடையானே, வளையும் - சூழ்கின்ற, சகமாயை - பிரபஞ்சமாயையாகிய, மயக்கில் விழுந்து - மயக்கத்தில் வீழ்ந்து, உளையும் - வருந்துகிற, துயர் - என் துன்பத்தை, இன்னும் - இன்னமும், உணர்ந்திலையே - அறிந்திலையோ, எ - று.

வளை - சங்கு; திருமாலின் கையிலுள்ள இந்தச் சங்குக்குப் பாஞ்சஜந்யமென்று பெயர்; இது பஞ்சஜநன் என்னும் அசுரனது என்பினுனியன்றதனன் இதற்கிப் பெயருண்டாயிற்று. பிரான் என்பதற்கு உபகார சீலன் என்பது பொருள். சினம்-வேலுக்கிலக்கணை. விடுவேல், களையும் வேல், சினவேல், வெவ்வேல், கதிர்வேல் எனத் தனித்தனி யியைத்துரைத்துக் கொள்க. வளைதல் - சூழ்தல். ஜகம் - உலகம். இதற்குத்தோன்றி யழிதன் மாலையது எனப்பொருள் கூறுவர் வடநூலார். உணர்ந்திலையே யென்னு மேகாரம் வினா. (அகூ)

பண்டேதொடர்பற்றொடுசுற்றமெனும்
வெண்டேரைமகிழ்ந்துவிழித்திடவோ
கண்டேகுறமங்கைதனைக்களவில்
கொண்டேகடிதேகியகொற்றவனே.

(ப - ரை.) குறமங்கைதனைக்கண்டு - குறப்பெண்ணைப் பார்த்து, களவில் - களவுநெறியில், கொண்டு - கவர்ந்துகொண்டு, கடிது ஏகிய - விரைந்துசென்ற, கொற்றவனே - அரசனே, பண்டே - பண்டைக்காலந்தொட்டே, தொடர் - தொடர்ந்து வருகிற, பற்றொடு - பற்றுடனே, சுற்றம் என்னும் - உறவென்கிற, வெண்டேரை - கானலை, மகிழ்ந்து விழித்திடவோ - மகிழ்ந்து விழிக்கவோ, எ - று.

பண்டு - பூர்வகாலம். தொடர்தல் - பின்பற்றல். வெண்டேர் - கானல்நீர். குறமங்கை யென்றது வள்ளி நாயகியை. களவில் கொள்ளல் - சிறையெடுத்தல். கடிதேகியது களவிற் கோடலா னென்க. (கூo)

பொன்னுவல்கெடப்பொழியும்புகழ்ோ
ரின்னுரினியாரெனவெண்ணுவரோ

துன்னார்கிளைவேரறவேதொடும்வேல்
மன்னுபொதுவாய்மழையும்பெயுமே

(ப - ரை.) துன்னார் - பகைவரது, கிளை - சுற்றம், வேர் அற - வேரற்றுப்போம்படி, தொடு - தொட்ட, வேல் - வேற் படையையுடைய, மன்னு - அரசனே, மழையும் - மேகமும், பொதுவாய் - பொதுவாகவே, பெய்யுமே - மழை பொழியு மன்றே, (அதுபோல) பொன் ஆவல்கெட - பொன்னுசை யொழிய, பொழியும் - சொரிகின்ற, புகழோர் - புகழுடை யோர், இன்னார் இனியார் என - இன்னு ரினியாரென்று, எண்ணுவரோ - நினைப்பாரோ, எ - று.

துன்னல் - அடுத்தல்; அதில்லாதவராதலால் பகைவர் துன்னாரெனப் பெயர்பெற்றார். கிளை - கிளைத்தலையுடையது; முதனிலைத் தொழிலாகுபெயர். வேர்அற-நிர்மூலமாக. மஞ்சு - மேகம். ஆவல்கெட - ஆசைதீர. இன்னார் - பகைவர். இனி யார் - இனியவர் (உறவினர்) ஓகாரம் - எதிர்மறை. (கசு)

பொறியும்புனலும்புதிதும்முதிதுங்
குறியுங்குணமுங்குலமுங்குடியும்
நெறியும்பரிசொன்றுமிலாநிலையா
னறியுந்தரமோவேலாயுதனே.

(ப - ரை.) பொறியும் - நெருப்பும், புனலும்-நீரும், புதி தும் - புதியதும், முதிதும் - பழையதும், குறியும் - அடை யாளமும், குணமும் - குணமும், குலமும் - சாதியும், குடியும்- குடிப்பிறப்பும், நெறியும்-வழியும், (ஆகிய) பரிசு ஒன்றும் இல் லா-தன்மைகளொன்றுமில்லாத, நிலை - நிலையை, யான் அறி யும் தரமே - நானறியுந்தரமோ, வேலாயுதனே - வேற்படை யை யுடையானே, எ-று.

பொறி-ஆகுபெயர். பொறி புனல் முதலிய வொன்றுமில் லாத நிலையென்றது, சதோதயமாகிய மஹாமௌன நிலையை. அந்தயறியுந்தரம் எனக்கில்லை யாதலால் அவ்வின்மைக்குக் காரணமாகிய மலமாயா கன்மங்களாகிய இடையூறுகளைச்

சேதித்து அந்தநிலையை யெனக்கு அருள் செய்யக்கடவை யென்பார்: "பொறி—நிலையாஙறியுந்தரமே" யென்றதை யடுத்து: 'வேலாயுதனே' என்றார். (கஉ)

எந்நேரமதோதெரியாதிறலும்
அந்நேரமதொன்றுகாதெனமுன்
சொன்னேமனனே துவலோ துவலோ
தன்னேர்குகனற்சலசச்சரணே.

(ப - ரை.) நாம் இறல் - நாம் இறுதல், எந்நேரமதோ - எந்நேரமோ, தெரியாது - தெரியவொண்ணாது, அந்நேரமது - அந்நேரத்தில், ஒன்று ஆகாதுஎன-ஒன்றுஞ்செய்யமுடியாதென்று, முன்சொன்னேம்-முன்னமே சொல்லினேம், மனனே - நெஞ்சே, தன்னேர் - தன்னைத்தானே நிகர்த்த, குகன்-குகப்பெருமானது, நல்சலசம் - நல்ல தாமரைமலர்போலும், சரணே-திருவடியையே, துவலோ துவலோ-சொல்லாய் சொல்லாய், எ - று.

இறல் - இறுதல். (முடிதல்) அந்நேரத்தில் நாச்செற்றுவிக்குண்மேல் வருமாதலான், அதனைத் தடுக்க முடியாதென்பார் 'ஒன்றுகா' தென்றும் இப்போதே குகப்பெருமான் திருவடியை யுச்சரித்துக்கொண் டிருப்பை.ாயின், அவ்விறுதித்துன்பத்தைக் கடக்கவுங் கூடுமென்பார் "தன்னேர் குகனற்சலசச்சரணே துவலோ துவலோ" என்றுங் கூறினர். துவலல் - சொல்லல்; துவரித்தல் எனினுமாம். ஓகாரவடுக்கு ஒழியிசை. (கங)

தெரியத்தெரியச்செயலுற்றிடுமுன்
துரியப்பொருளைச்சொலுநாளுளதோ
கரிபெற்றிடுமின்கணவாகுறமின்
பரியப்பெரிதும்பணியுத்தமனே

(ப - ரை.) கரிபெற்றிடு-யானையீன்ற, மின்-மின்கொடிபோலும் தெய்வயானைக்கு, கணவா - கணவனே, குறமின் - குறப்பெண்ணாகிய வள்ளிநாயகி, பரிய - அன்பு செய்யும்படி, பெரிதும் - மிகுதியும், பணி - [அவளைப்] பணிந்த, உத்தம

னே - உத்தமகுணமுடையானே, தெரியதெரி - தெரிவிக்கத் தெரிந்துகொள்ளுகிற, அச்செயல் உற்றிடுமுன் - அச்செயல் நேருமுன்னமே, துரியப்பொருளை - துரிய வடிவாகிய பொருளை, சொல்லும் நாள் உளதோ - அடியேற்கு நீ யறிவிக்கும் நாளுமொன்றுண்டோ, எ - று.

தெரியத்தெரியச் செயல் என்றதனால் தானே தெரிந்து கொள்ளவொண்ணாத செயல் என்றதாயிற்று. அது இறுதிக் காலச் செயல். துரியப்பொருள் - துரியவடிவாகிய பொருள்; துரிய பூமியிலுள்ள பொருள். துரிய பூமி ஞானபூமிகளேழ னுள் ஒன்று; விரிப்பிற் பெருகும், பெருநூல்களிற் காண்க. கரி - ஐராவதமென்னும் யானை. பிறரை வசிகரித்தற்பொரு ட்டுப் பணிதல் உத்தமகுணமாதலால் அதனையுடைய குகப் பெருமானை: "குறமின் பரியப் பெரிதும் பணியுத்தமனே" என்றார். (கச)

மடிமைப்படினும்மயலுற்றிடினும்
அடிமைக்குரியாரருள்சேருவரே
குடிமைக்கிலதோர்கொடுவெற்பதிரப்
படிமைப்புயலேபரிவாயினியே.

(ப - ரை.) மடிமைப்படினும் - வறுமை யடைந்தாலும், மயல் உற்றிடினும் - மயக்கமடைந்தாலும், அடிமைக்கு உரியார் - உன் தொண்டுக்குரியவர், அருள்சேருவரே - உன் திருவருளுக்குரியரே யாவர், குடிமைக்கு இலது-குடிப்பிறப்பிற்கு இல்லாததாகிய, ஓர் - ஒரு, கொடு வெற்பு அதிர - கொடுமையாகிய மலை யதிரும்படி, படி - படியச்செய்த, மைபுயலே - கரிய மேகம்போல்வானே, இனி - இனியேனும், பரிவாய் - அன்பு கூர்வாயாக, எ - று.

மடிமை - வறுமைத்தன்மை. மயல் - மாதர் மயக்கம். அடிமை-அடிமைத்தனம். உரியார்-தகுந்தவர். மைப்புயல் என்றது கொடை மிகுதி பற்றி யென்க; கொடை மிகுதியாவது வீடுபேறருளல். பரிதல் - அன்பு செய்தல். (கரு)

வரிவேல்விழியாம்வலைவீசுமினார்
புரிவேலையிலேபொருதிக்களைவாய்
பரிவேடம்புரிந்ததுபோலவுணர்த்
தெரிவேன்முனைமேலெறிசேவகனே.

(ப - ரை.) பரிவேடம் புரிந்ததுபோல்-பரிவேடம் வளைந்ததுபோலும், அவுணர் - அரக்கரை, தெரி - தெரிந்தெடுக்கப்பட்ட, வேல்முனையால் - கூரிய வேலினால், எறி - எறிந்த, சேவகனே - வீரனே, வரி - நீண்ட, வேல் - வேல்போன்ற, விழியாம் - கண்களாகிய, வலைவீசும் - வலைவீசுகிற, மினார் - மாதர்களை, புரிவேலையிலே-விரும்பும் வேளையிலே, பொருதி - போர்செய்து, களைவாய் - (அவர்கள் மேல்வைத்த விருப்பத்தை) ஒழிக்கக்கடவாய், எ-று.

வரி - நீட்சி. வேல்விழி - உவமைத்தொகை நிலைத்தொடர்: "காய்சினவே லன்ன மின்னியல்கண்ணின் வலைகலந்து, வீசினபோதுள்ள் மீனிழந்தார்" என்னு மேலோர் திருவாக்கினை யடியொற்றி: "வரிவேல் விழியாம் வலைவீசுமினார்" என்றார். பரிவேடம் - ஊர்கோள். எறிதல் - வெட்டுதல். (அறுத்தல்).

(௬௬)

நனவிற்படுநல் லுலகத்தனையும்
கனவிற்பொருளாய்க்கருதாவெனைநீ
வினவிச்சொலுநாளுளதோவிதியைச்
சினவிச்சிறைவிட்டருடேசிகனே.

(ப - ரை.) நனவில்படும் - சாக்கிராவஸ்தையில்தோன்றுகிற, நல் உலகு அத்தனையும் - நல்ல பிரபஞ்ச முழுதும், கனவில் பொருளாய்-கனவிற்கண்ட பொருள்போல, கருதாநினையாத, என்னை - அடியேனை, நீவினவி - நீவினவி, சொலும் - அடியேற்குச் சொல்லுகின்ற, நாள் உளதோ - நாளுமுண்டோ, விதியை - பிரமனை, சினவி - கோவித்து, சிறையிட்டருள்-சிறையிட்டருளின, தேசிகனே - குருநாதனே, எ-று.

நனவு - சாக்கிராவஸ்தை; இதில் ஆன்மா முப்பத்தைந்து கருவிகளோடு நுதலிடையே வீற்றிருக்குங்காலம்; ஸ்வப்

னம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என்பவற்றைச் சேர்த்தால் ஐந்தாகும்; இவற்றையே பஞ்சாவஸ்தை யென்பர். இவற்றின் விரிவெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகு மாதலால் பெருநூல்களிற்காண்க. வினவல் - கேட்டல். விதி - பிரமன்; இவனை சினவிச் சிறையிட்ட வரலாற்றைக் கந்தபுராணத்திற் காணலாம். சினவல் - கோவித்தல். வினவுக்குச் செவ்வனே விடையிறுக்காமையால் சினவலுண்டாயிற் றென்க. (கஎ)

காடும்மலையுங்கடலும்முருளச்
சாடுந்தனிவேலுடையாய்சரணம்
ஆடும்மயில்வேலரசேசரணம்
பாடும்வரதற்பரனேசரணம்.

(ப - ரை.) காடும் - அரண்யமும், மலையும் - கிரிகளும், கடலும் - கடல்களும், உருள - உருளும்படி, சாடும் - அழித்த, தனி - ஒப்பற்ற, வேல் உடையாய் - வேற்படையை யுடையவனே, சரணம் - (அடியேன் உன்) அடைக்கலம், ஆடும் - சிறை விரித்தாடுகிற, மயில் - மயிலினையும், வேல் - வேற்படையையு முடைய, அரசே - அரசனே, சரணம் (அடியேன் உன்) அடைக்கலம், பாடும் - அன்பர் புகழ்ந்து பாடுதற்குரிய, வர - மேலோனே, தற்பர - தற்பரனே, சரணம் - (அடியேன் உன்) அடைக்கலம், எ-று,

சாடுதல் - அழித்தல். அரசு - பண்பாகுபெயர். வரன் - மேலானவன். தற்பரன் - அந்தப்பரம் பொருளாயுள்ளவன். ()

அநியாயமிதென்றவரேமடவார்
துனியார்பவமுந்துயருங்களைவார்
கனியார்முருகன்கழல்பெற்றிடுவா
ரினியாரினியாரிவருக்கிணையே.

(ப - ரை.) இது அநியாயம் என்றவரே - இது அநியாய மென்றுசொல்லுவோரே, மடவார்-மாதாது, துனி ஆர்பவமும்- அச்சுத்திற் கிடமாகிய பாவத்தையும், துயரும் - துன்பத்தையும், களைவார் - வேரறுப்பவர், கன்னி ஆர் முருகன் - இள

மைவாய்ந்த முருகவேளின், கழல் - திருவடிகளை, பெற்றிடுவர்-பெறுவார், இவருக்கு இணையாவார்-இவருக்கொப்பாவார், இனியார் இனியார் - இனி யாரிருக்கிறார், எ-று.

அனியாயம் - நியாயமன்மை. துனி - அச்சம். பவம் - பாவம். களைதல் - வேரறுத்தல். கன்னி - கனியெனத் தொகுத்தது. இனியார் இரண்டனுள் முன்னதற்கு இனியவர் என்றுரைத்தலமையும். இணை - சமானம். கனி ஆர்முருகன் என்பதற்கு முக்கனிபோல் அன்பர்க் கினிமை தருபவன் எனினுமாம். "அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை யமிர்தை நாடி, மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கள் முகிழ்த்து நிற்பாம்" என்றார் மேலோரும். முக்கனி - வாழை, மா, பலா என்பன. (கக)

ஆளாயயில்வேளடியிற்பணிவார்
கோளாற்பிறரைக்குறிசெய்தழியார்
மாளார்சமனால்மறுகார்பகையால்
மீளார்வினையால்வெருவாரவமே,

(ப - ரை.) ஆள் ஆய் - அடிமையாகி, அயில் - வேற்படையையுடைய, வேள் - குமரவேளின், அடியில் - திருவடியில், பணிவார் - பணிவோர், கோளால் - துன்பத்தால், பிறரை - அயலாரை, குறிசெய்து - குறித்துச்சென்று, அழியார் - கெடமாட்டார், சமனால் மாளார் - யமனால் இறக்கமாட்டார், பகையால் மறுகார்-பகைவரால் கலங்கமாட்டார், வினையால் - வினைப்பயனால், மீளார் - (பிறவிக்கு) மீண்டு வரமாட்டார், அவமே வெருவார் - வீணே அஞ்சமாட்டார், எ-று.

குமாரக் கடவுளுக்கு அடிமைபூண்டு அவரது திருவடியை வழிபடுவோர் பிறரிடத்துச் சென்று யாசித்தல் முதலிய துன்பங்களை யடையமாட்டார் என்பது கருத்து. கோள் - துன்பம். குறிசெய்தல் - குறித்துச் செல்லுதல். மாளல் - இறத்தல். சமன் - யமன். மறுகல் - கலங்கல். பகை - ஆகுபெயர். மீளல் - திரும்பல். வினை - நல்வினை தீவினைகள். வெருவல் - அஞ்சுதல். அவம் - வீண். (௪௦௦)

வாழ்வாருறவாய்மகிழ்வார்பலருந்
தாழ்வார்க்கருளுத்தமனீயலேயோ
பேழ்வாயரவும்பிறைவெள்ளிறகுஞ்
சூழ்வார்சடையார்தொழுதேசிகனே.

(ப - ரை.) பேழ்வாய் - பெரியவாயினையுடைய, அரவும் - பாம்பும், பிறைவெள் இறகும் - பிறையோடு வெண்மையாகிய இறகும், சூழ் - சூழ்ந்த, வார்சடையார் - நீண்டசடையினையுடையவராகிய சிவபெருமானார், தொழு - வணங்குகிற, தேசிகனே - குருநாதனே, உறவாய் வாழ்வார் - உறவினராய் வாழ்பவரும், மகிழ்வார் - களிப்பவருமாகிய, பலரும் தாழ்வார்க்கு - வணங்குகின்ற பலருக்கும், அருள் - அருள் செய்கிற, உத்தமன் - உத்தமபுருடன், நீ அல்லேயோ - நீயல்லவோ, எ-று.

உத்தமன் - மேலானவன். பிரகிருதியாகிய இருட்டைக் கடந்தவன். வெள்ளிறகு - கொக்கிறகு. வார் - நீராதலால், வார்சடையார் என்பதற்கு கங்கைச்சடையர் என்றுரைத்தலுமாம். (௧0௪)

கந்தரநுபூதி மூலமும் உரையும்
முற்றிற்று.

---

223164

026.417
N09

உ

சிவமயம்.

# கந்தரநுபூதி

## செய்யுள் முதற்குறிப் பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| **அ.** | |
| அடியைக்குறியா | 24 |
| அமரும்பதிகே | 9 |
| அய்யாவுட | 61 |
| அரிதாகிய | 21 |
| அருளைத்தரும் | 58 |
| அழியாநிலை | 59 |
| அறிவொன்றற | 42 |
| அணியாய | 73 |
| **ஆ.** | |
| ஆடும்பரிவேலணி | 3 |
| ஆதாரமிலே | 26 |
| ஆதாளியை | 35 |
| ஆளா | 74 |
| ஆறாறையு | 41 |
| ஆனாவமுதே | 28 |
| **இ.** | |
| இரவும்பகலுங் | 48 |
| இலகுந்துடி | 49 |
| இல்லையெனு | 28 |
| **உ.** | |
| உதியாமரியா | 19 |
| உருவாயருவா | 44 |
| உல்லாசநிரா | 4 |

| செய்யுள். | பர்கம். |
|---|---|
| உறுகற்பக | 65 |
| உனையேயன | 48 |
| **ஊ.** | |
| ஊணேபொருளா | 45 |
| **எ.** | |
| எந்தாயுமெனக் | 40 |
| எந்நேரமதோ | 70 |
| எந்நேரமும் | 57 |
| **க.** | |
| கரவாகிய | 40 |
| கருதாமறவா | 22 |
| கலைகற்றினு | 54 |
| கலையேபதறி | 30 |
| கல்லேய்மன | 54 |
| கல்லேனயலார் | 56 |
| கழுவாரயில் | 46 |
| களவும்படிறு | 50 |
| கள்ளம்படு | 66 |
| **கா.** | |
| காடும் | 73 |
| காணாவிழியுங் | 44 |
| கார்மாமிசை | 11 |
| காளைக்குமர | 23 |
| **கி.** | |
| கிரிவாய்விடு | 34 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| கு. | |
| குறியைக்குறியாது | 38 |
| கூ. | |
| கூகாவென | 12 |
| கூர்வேல்விழி | 25 |
| கெ. | |
| கெடுவாய்மனனே | 9 |
| கை. | |
| கைவாய்கதிர் | 16 |
| ச. | |
| சதிகொண்ட | 52 |
| சனகாதியருக் | 55 |
| சா. | |
| சாகாதெனையே | 37 |
| சாடுந்தனிவேல் | 39 |
| சி. | |
| சிங்காரமடந்தை | 32 |
| சிந்தாகுலவில் | 31 |
| சின்னஞ்சிறியேன் | 53 |
| செ. | |
| செம்மான்மகளை | 13 |
| செவ்வானுரு | 29 |
| ஞா. | |
| [illegible] | 60 |
| [illegible] | 42 |
| [illegible] | |
| தாயேயெனை | 52 |
| தி. | |
| திணியான | 8 |
| து. | |
| துடிபட்ட | 53 |
| துனிநாளும் | 59 |
| தூ. | |
| தூசாமணியுந் | 38 |
| தெ. | |
| தெரியத்தெரிய | 70 |
| தொ. | |
| தொண்டாகிய | 58 |
| ந. | |
| நசையன்பிலர் | 65 |
| நவியென்றிடு | 62 |
| நனவிற்படு | 72 |
| நா. | |
| நாதாகுமாரா | 33 |
| நெ. | |
| நெஞ்சக்கன | 1 |
| ப. | |
| பண்டேதொடர் | 68 |
| பத்திக்கயலே | 63 |
| பா. | |
| பாழ்வாழ் | 30 |
| பெ. | |
| பெரியோரொனி | 62 |
| பே. | |
| பேயாகிலும் | 63 |
| பேராசையெனும் | 18 |
| பொ. | |
| பொறியும்புன | 69 |
| பொன்னுவவ் | 68 |
| ம. | |
| மகமாயை | 7 |
| மஞ்சைப்புரை | 56 |
| மட்டூர்குழன் | 10 |
| மடிமைப்படி | 71 |
| மதமுஞ்சினமும் | 60 |
| மதிகெட்டற | 43 |
| மா. | |
| மாதேமால | 50 |
| மாவேழ்சனனங் | 36 |
| மி. | |
| மிகவுங்கொடி | 64 |
| மின்னேநிகர் | 27 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| மு. | |
| முருகன் குமரன் | 17 |
| முருகன் றனி | 14 |
| மெ. | |
| மெய்யேயென | 25 |
| யா. | |
| யாமோதிய | 19 |
| வ. | |
| வடிவுந்தனமும் | 20 |
| வரிவேல்விழி | 72 |
| வளைபட்டகை | 6 |
| வளையுஞ்ச | 67 |
| வள்ளைக்குழை | 67 |
| வா. | |
| வாழைக்கனி | 51 |
| வாழ்வா | 75 |
| வானேபுனல்பார் | 5 |
| வி. | |
| விண்ணோர்பதமும் | 47 |
| விதிகாணுமுடம்பை | 32 |
| விதிவந்தனை | 57 |
| வினையோடவிடுங் | 36 |

கந்தரநுபூதி செய்யுள் முதற்குறிப் பகராதி

முற்றிற்று.

Ripon Press.

## மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,

## தப்புசெட்டி வீதி, சென்னை.

திருவாசகம்:—(புதிய பதிப்பு) மாணிக்கவாசக சுவாமிகள் ஆப்டோன் படத்துடன்: இப் பதிப்பில் செய்யுள்கள் மூலத்தை வாசிக்கும்போதே கூடியமட்டும் பொருள் விளங்கும்படி சந்தங் கெடாதவண்ணம் சந்தி பிரிக்கப்பெற்று, பைகா (பெரிய) எழுத்தில் நூதனமாய் அச்சிடப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரமும் காலவரையறையுடன் நூதனமாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. உயர்ந்த கிலிட்டு பயிண்டு 1 0 0

திருவெங்கைக்கோவை:—(சிவப்பிரகாச சுவாமிகளருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விசேஷ உரைகளுடன்) உயர்ந்த கிலிட்டு பயிண்டு ... 2 8 0

நைடதம் மூலமும் உரையும்:—(புதிய பதிப்பு) இதில் அன்னமும்தமயந்தியும் அமைந்த உயர்ந்த ஆப்டோன் வர்ணப்படமும், 27 விதகிராப் படங்களும் அடங்கியுள்ளன. உயர்ந்த கிலிட்டுபயிண்டு 2 0 0

சைவசித்தாந்த வரலாறு:—(சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கும் தோன்றிய வரலாறும், சந்தான குரவர் சரித்திரமும்) ... ... 0 4 0

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்;—விவேகாநந்த சுவாமிகள் திவ்விய சரித்திரமும் அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] காலிகோ பயிண்டு உயர்ந்த கிலிட்டுடன் 1 4 0

ஸ்ரீ சங்கர விஜயம்:—ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம் (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது) காலிகோ பயிண்டு உயர்ந்த கிலிட்டுடன் ... 1 0 0

ஸ்ரீ திலகர்விசாரணை அல்லது 2-வது கேசரி இராஜநிந்தனைக் கேஸ்: ஸ்ரீ பாலகங்காதர திலகர்மீது பம்பாய்க் கவர்ன்மெண்டாரால் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட இராஜ நிந்தனைக் கேசில் நடந்த சகல நடவடிக்கைகளும் ஆதியோடந்தமாய்த் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: திலகர் சரித்திரமும், உருவப் படமும் கூடியது ... 0 12 0

கந்தரநுபூதி உரை:—நூறு பாடலுக்கும் உரையும், இந் நூலைப் பாடியருளிய அருணகிரிநாதர் சரித்திரச் சுருக்கமும் ... ... ... 0 6 0